விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 16 வியாழக்கிழமை (29.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 101

ராம்கோ

MADRAS CEMENTS LTD


RAMCO CEMENT

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO

# அரசிலிருந்து வெளியேற நேரம் காலம் தேவையில்லை

## ஜனாதிபதி திட்டவட்டம்



அரசிலிருந்து வெளியேற விரும்புவோர் எந்நேரமும் வெளியேறலாம். அதற்கான கதவு திறந்தே வைக்கப்பட்டுள்ளது. அரசின் இந்தக் கொள்கை அமைச்சர் தொண்டமானுக்கு மட்டும் விதிவிலக்கல்ல என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தொண்டமான் தனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்துள்ளதால் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து இ.தொ.கா. வெளியேறும் எனத் தகவல்கள் கசிந்து, அரசியல் தரப்பில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ள நிலையிலேயே ஜனாதிபதி இவ்வாறான அறிவிப்பை விடுத்துள்ளார். (24ஆம் பக்கம் பார்க்க)

## பகிரங்க விவாதத்திற்கு அழைப்பு விடுத்தார் அமைச்சர் பந்துல

(கொழும்பு)

மூன்று பேர் கொண்ட குடும்பம் ஒன்று 7 ஆயிரத்து 500 ரூபாயுடன் வாழ்க்கை நடத்த முடியும் என்பதை நிரூபிப்பதற்காக பகிரங்க விவாதத்திற்கு தான் தயார் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறியுள்ளார்.

இதற்காக சிறந்த பொருளாதார அறிவு கொண்ட எந்த நபரையும் விவாதத்தில் எதிர்கொள்ளத் தயார் என நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் அவர் கூறினார்.

பொருளாதார ஆசிரியராக பணியாற்றிய அமைச்சர் பந்துல குணவர்த்தன, இது தொடர்பாக மேலும் கூறுகையில், ஒரு குடும்பம் மாதாந்த வருமானத்தின் 41 சதவீத்தை மாத்திரம் உணவுக்காக செலவிடுவதாகவும் ஏனையவற்றை ஆடைகள் மற்றும் கட்டணங்களைச் செலுத்துவதற்கு பயன்படுத்துவதாகவும் அவர் கூறினார். (எ-11)

## வாக்குறுதியை மீறியுள்ள அரசு கூட்டமைப்பு குற்றச்சாட்டு

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் மீறியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றாமல் இருப்பதுவே நாடாளுமன்றத் தெரிவுக் குழு எதிர்கொள்ளும் பிரதான தடையாக உள்ளது என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பத்திரிகையாளர் சந்திப்பொன்றின்போது தெரிவித்திருந்தார்.

தெரிவுக்குழு அமைப்பதற்கு முன்னர் தனது முன்மொழிவுகளை அறிவித்து ஒரு பொது நிலைப்பாட்டை எடுப்பதற்கு பேச்சுவார்த்தையின்போது அரசாங்கம் ஒப்புக் கொண்டிருந்தது.

இந்நிலையில், நாம் அரசாங்கத்துடன் தொடர்ச்சியாகப் பேசிக் கொண்டிருந்தோம். இந்தப் பேச்சுவார்த்தை (24ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிடமிருந்து இலங்கைக்கு 66 பில்லியன் ரூபாய் கடனுதவி

(கொழும்பு)

இலங்கையில் மூன்று முக்கிய செயற்திட்டங்களுக்காக ஜப்பானிய அரசாங்கம் சுமார் 66 பில்லியன் ரூபாயைக் கடனாக வழங்கி உள்ளது.

இந்தக் கடன்கள் இலகுவான நிபந்தனைகளுடன் கூடியவையாகும். குறித்த ஒரு இறைவருடத்தில் இதுவரை வழங்கப்பட்ட கடன்களில் இதுவே ஆகக்கூடியதாகும்.

இதன்கீழ் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி செயற்திட்டம் (இரண்டாம் கட்டம்), வளர்ந்து வரும் பிராந்தியங்களின் அடிப்படை சமூக சேவைகள் தரம் உயர்த்துவதற்கான செயற்றிட்டம் மற்றும் ஹபரண - வியாங்கொடைக்கு மின் கொண்டுசெல்லும் திட்டம் ஆகியவற்றிற்கே இக்கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு இணங்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி இரண்டாம் கட்ட (24ஆம் பக்கம் பார்க்க)

## 25 மாணவர்கள் கண்டியில் கைது

(கண்டி)

போகம்பறையிலுள்ள உயர்தொழில்நுட்ப கல்லூரியை சேர்ந்த இரு மாணவர் குழுக்களுடையே ஏற்பட்ட மோதல் காரணமாக இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தையடுத்து இம் மோதலை தூண்டியமை, இதில் சம்பந்தப்பட்டமை ஆகிய சந்தேகத்தின் பேரில் மேற்படி கல்லூரியை சேர்ந்த 25 மாணவர்கள் கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-11)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சை செயற்படுத்துவதில் சிக்கல் ஏற்படும்!

### நீதி அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



தீவிரவாத சிந்தனை கொண்டோரின் இடையூறுகள் காரணமாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை வெற்றிகரமாக செயல்படுத்துவதில் சிக்கல்கள் தோன்றக்கூடும் என நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

எனினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பிரித்தானிய நாடாளுமன்ற பிரபுக்கள் சபை உறுப்பினரும் சர்வகட்சி இலங்கை நட்புறவு சங்கத்தின் தலைவருமான நெஸ்பி பிரபுவை நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்றுப் புதன்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளின் அமுலாக்கம் பற்றி நெஸ்பி பிரபு கேட்ட கேள்வியொன்றிற்கு பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

குறித்த அறிக்கையில் (24ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அழுத்தத்துக்கு இலங்கை அடிபணியாது!

### அமைச்சர் நிமல் தெரிவிப்பு



சர்வதேச அழுத்தங்களின் காரணமாக வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தெற்கைப் போன்றே வடக்கிலும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் பிரிட்டன் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளின் அழுத்தங்களினால் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசாங்கம் செயற்பட்டுவருவதுடன் இதனைக் கடமையாகவும் பொறுப்பாகவும் கருதுகின்றது. சர்வதேசத்தின் ஆலோசனைகளைப் (24ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு வாகனம் விநியோகித்த குற்றச்சாட்டில் கைதானவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து விடுதலைப்புலிகளின் உபயோகத்திற்கென வாகனங்களை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டு சென்றவரென பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட குடும்பஸ்தரை யாழ். மேல் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்துள்ளது.

வன்னி இறுதி யுத்தத்தின்போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டவர்கள் வழங்கிய தகவலினை அடுத்தே குறித்த குடும்பஸ்தர் கொழும்பு குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டார்.

குருநாகலில் வசித்துவந்த 4 பிள்ளைகளின் தந்தையான மாரிமுத்து பாண்டியன் (வயது 60) என்ற குடும்பஸ்தரே புலிகளுக்கு வாகனங்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டில் அவரது வீட்டில் வைத்து பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இவருடைய எதிர்த்தரப்பு சாட்சியத்தில் புலிகளின் முக்கியஸ்தர்களான குட்டி, பொட்டம்மான், இனியவன் (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கைக்கு எதிரான தீர்மானம் தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது

## புதிய ஜனநாயக மார்க்ஸிஸ கட்சி கவலை

(கொழும்பு)

ஜெனிவா ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானமும் அதன் மீதான விவாதங்களும் சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்குத் தரக்குறைவையும், தலைகுனிவையும் ஏற்படுத்தியுள்ளன என புதிய ஜனநாயக மார்க்ஸிஸ லெனினிஸக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் ஜெனிவாத் தீர்மானம் பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்படுவதற்கு அடிப்படையாக அமைந்திருந்தது தேசிய இனப்பிரச்சினையின் தீர்வின்மையும் அதன் காரணமான கொடிய யுத்த முன்னெடுப்புகளாகும். அதனாலேயே போர்க்குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றன.

இன்று யுத்தம் முடிவுற்று மூன்று வருடங்கள் கடந்த பின்னரும் அவற்றின் தொடர்ச்சியாக அரசியல் தீர்வு நிராகரிப்பும், ஜனநாயக மறுப்புக்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்று வருகின்றன. இச்சூழலிலேயே ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை மூலம் இலங்கை விடயத்தை ஐ.நா.தனது நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு வந்து மனித உரிமைப் பேரவைக்கு கையளித்தது.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திய அமெரிக்கா ஜெனீவாத் தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்றியதன் மூலம் தனது ஆதிக்கப் பிடிக்குள் இலங்கையை இறுக்கிக் கொள்ள முனைந்து நிற்கின்றது.

முன்னர் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானப் பேச்சுக்குப் பின்னால் இருந்து கொண்டு இலங்கை மீதான தனது ஆதிக்கத்தை வலுப்படுத்த அமெரிக்கா முயன்று அதில் வெற்றி பெற இயலவில்லை. ஆனால், இப்போது ஐ.நா.மூலம் தனது தலையீட்டை மீளக் கொண்டுவந்துள்ளது.

இது இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்த்து மக்களிடையே நல்லெண்ணத்தையும் ஐக்கியத்தையும் வழிப்படுத்தும் நோக்கத்தில் அல்ல. அல்லது தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுத்துக் கொடுக்கும் வழியிலும் அல்ல.

கேந்திர முக்கியத்துவம் மிக்க இலங்கையை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பூகோள ஆதிக்க நோக்கின் அடிப்படையிலானதாகும்.

நாடுகளின் மீது தலையீடுகளையும் ஊடுருவல்களையும் செய்வதற்கு அமெரிக்கா பின்பற்றி வந்த உள்நாட்டு முரண்பாடுகளைப் பயன்படுத்துவது என்பதன் அடிப்படையிலேயே ஜெனிவாத் தீர்மானத்தை இலங்கைக்கு எதிராக கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளது.

அதனைத் தடுத்து நிறுத்தி அமெரிக்காவின் உள்நோக்கத்தை முறியடிப்பதற்கு உள்ள ஒரே வழி தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வை தாமதமின்றிக் கொண்டு வருவதாகும்.

அதேபோன்று, நாட்டில் மறுக்கப்படும் ஜனநாயக செயற்பாடுகளுக்கும் தொடரப்படும் மனித உரிமை மீறல்களுக்கும் உடன் முற்றுப்புள்ளி வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும்.

ஆனால், ஜனாதிபதியும் அவரது தலைமையிலான அரசும் எந்தளவிற்கு தமது பேரினவாத ஒடுக்கு முறை நிலைப்பாட்டிலிருந்து இறங்கிவந்து ஆக்கபூர்வமானதும் தூரநோக்கிலுமான செயற்பாட்டிற்கு முன்வருவார்கள் என்பதே பிரச்சினையாகும். இவ்வாறு புதிய ஜனநாயக மார்க்ஸிஸ லெனினிஸக் கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

# க.பொ.த. சா/த பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

**கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

யு. ஆரூரன் (6ஏ2பிசி), ஜெ.டமினியா (3ஏ2பி4சி), கே.பிரியதர்சினி (3ஏபி3சி 2எஸ்), எம்.நியூசிகா (3ஏபி4சி), எஸ்.கீர்த்தனா (3ஏபி2சி3எஸ்), பி.கவிப்பிரியா (3ஏ2சி3எஸ்), வீ.கஜந்தினி (3ஏபிசி3எஸ்), எல்.உலோசினி (3ஏபிசி3எஸ்), எஸ்.கவுசலா (3ஏபி2சி2எஸ்), என்.சாம்பவி (2ஏ2பி3சி2எஸ்), பி.தாட்சாயினி (2ஏ2பிசி3எஸ்), என்.சர்மிகா (2ஏ4சி3எஸ்), பி.கீர்த்தனி (2ஏ2சி4எஸ்), வி.தாட்சாயினி (ஏ2பி3சி2எஸ்), என்.பிரவீணா (ஏ2பி4சி2எஸ்), என்.தர்சனா (ஏ3பி3சி2எஸ்), எஸ்.அபிராமி (ஏபி4சி3எஸ்), என்.தட்சயன் (ஏபி7சி)

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

க.சுகிதரன் (7ஏ2பி), ஜெ.ஹரிதாஸ் (6ஏ2பிசி), வீ.குணபரன் (6ஏ2பிசி), ச.லவன் (5ஏ2பி2சி), சி.டிலுக்சன் (5ஏ2பிசிஎஸ்), ப.விதுர்சன் (5ஏ2பிசிஎஸ்),

ம.குவேந்திரன் (5ஏ3சி), த.டபிசன் (4ஏ3பிசிஎஸ்), சி.மோகனராசா (3ஏ3பி2சிஎஸ்), அ.பிருந்தா (3ஏ3பி2சிஎஸ்), ந.சிறீதகன் (3ஏ2 பிசி3எஸ்), ற.டிலக்சன் (3ஏபி4சிஎஸ்), மு.துவாரகா (3ஏபி3சி2எஸ்), இ.கீர்த்திகா (3ஏபி 4சிஎஸ்) (எ)

# அதிகாலையில் வீட்டினுள் நுழைந்து 40 பவுண் தங்க நகை கொள்ளை

## திக்கம் பகுதியில் சம்பவம்

(கரவெட்டி)

அல்வாய் வட மேற்கு திக்கம் பகுதியில் உள்ள வீடொன்றிற்குள் நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த 40 பவுண் நகையையும் 40 ஆயிரம் ரூபாய் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

தாயும் மகளும் வசித்துவரும் இவ்வீட்டுக்குப்பின்புறமாக நுழைந்த திருடர்கள் இக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

கொள்ளையை தடுக்க முயன்ற மகள் மீது கத்தியால் கீறி காயப்படுத்தியுள்ளனர். சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-3,24)

# நடிகை கிலியன் குறித்து செவ்வியளிக்க அரசு தடை!

(கொழும்பு)

பிரபல எக்ஸ்-பைல்ஸ் தொலைக்காட்சி தொடர் நடிகையான கிலியன் அன்டஸன் பற்றி பத்திரிகைகளுக்கு அறிக்கை வழங்கக் கூடாது என வலுக்குறைபாடு கொண்ட இலங்கை இராணுவ கப்டன் ஒருவரை கொழும்பு நீதிமன்றம் கடுமையாக எச்சரித்தது.

பிரபல கிலியன் அன்டர்ஸனுக்கு சொந்தமான இலங்கை சொத்திலிருந்து 17.8 மில்லின் ரூபாயை மோசடி செய்ததாக இராணுவ கப்டனான அநுர வீரரத்ன பண்டார என்பவர் மீது கொழும்பு, கோட்டை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணைக்காக நேற்று புதன் கிழமை எடுத்துக்கொள்ளப்பட்டபோது நடிகையின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் சந்தேகநபர் தனக்கும் இந்த அமெரிக்க நடிகைக்கும் இடையில் நெருங்கிய உறவு இருந்ததாக விளங்கும் வகையில் சிங்களப்பத்திரிகைகளுக்குசெய்திவழங்கியதாகமுறையிட்டார்.

தனது கட்சிக்காரரான கிலியன் பிரபலமானவர் என்பதால் இவ்வாறான அறிக்கைகள் அவரை பாதித்ததாக வழக்குரைஞர் கூறினார். மேலும் இவர் இது தொடர்பில் பத்திரிகை செய்திகளை சான்றாக சமர்ப்பிக்க முடியும் எனக் கூறினார். ஆனால் இதைப் பிரதிவாதியின் வழக்குரைஞர் ஆட்சேபித்தார்.

இரண்டு தரப்பினரதும் விவாதங்களைக் கேட்ட நீதவான் பத்திரிகைகளுக்கு அறிக்கைகளை கொடுப்பதன் மூலம் சந்தேக நபர் சாட்சியங்களை குழப்பக் கூடாது என எச்சரித்தார். பிணை நிபந்தனைகளை பிரதிவாதி மீறுவாராயின் வழங்கப்பட்ட பிணை இரத்து செய்யப்படும் எனவும் நீதவான் எச்சரித்தார். இந்த வழங்கு விசாரணை எதிர்வரும் யூன் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ-11)


## வீடு வாடகைக்கு

கடற்கரை வீதியில் (Beach Road) சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்களுக்கு உகந்தது. லொட்ஜ் (Lodge) நடத்தக் கூடிய வசதிகள் அடங்கியது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 021 222 7893

(8036)

## வான் விற்பனைக்கு



50 xxxx டுவல் A/C புல்சீற் செற் ஏலோவீல் 5 கதவு ஹயஸ் வ்வான் விற்பனைக் குண்டு.

தொடர்புக்கு: 0771176689

(8035)

## செல்லா சினிமா-யாழ்ப்பாணம்



பல தடைகளைத் தாண்டி

17.03.2012 முதல்

10.30, 02.30, 06.30, 09.30,

ஆக்ஷன் கிங் அர்ஜுன், ரிச்சா, கபாலி நடித்த

மாசி DTS

(C-6099)

## EASY ENGLISH

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்

YAALH ENGLISH ACADEMY

யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:

புதிய உயர் கல்லூரி

விபரங்களுக்கு :0773212711

(7379)


# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(கிளிநொச்சி)

க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கணக்கீடு, வணிகக்கல்வி, பொருளியல் ஆகிய பாட நெறிகளை கற்பிக்கும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான திறன்விருத்தி செயல் அமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் செயல் அமர்வில் அனைத்து ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி கல்வி வலயப்பணிப்பாளர் க.முருகவேல் கேட்டுக் கொண்டுள்ளார். (எ-11)

# திருப்பாடுகளின் காட்சி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள புனித லிகோரியார் ஆலய பங்குமக்களின் ஏற்பாட்டில் கல்வாரிக்கள திருப்பாடுகளின் காட்சி நாளை வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது. (அ)

# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.கல்விவலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா அறிவித்துள்ளார். (அ)

# விளையாட்டு விழா

(பூநகரி)

பூநகரி பிரதேச விளையாட்டுவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ஆர்.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். (எ)

# மின்னொளியில் கரப்பந்தாட்டம்

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் மின்னொளியிலான கரப்பந்தாட்ட போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் மாலை 6மணி முதல் நடைபெறவுள்ளது.

5 பேர் கொண்ட போட்டியாக நடைபெறவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் மைக்கல் விளையாட்டு கழகத்தினருடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் அன்றைய தினம் மைதானத்தில் வைத்து போட்டி அட்டவணை தயாரிப்பதற்கு உரிய நேரத்திற்கு சமுகம் தந்து போட்டிகளில் கலந்து கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-3-24)

# மோ.சைக்கிள் மோதி சிறுவன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கச்சான் வாங்கவெனச் சென்ற சிறுவனை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் படுகாயமடைந்த சிறுவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நாயன்மார்கட்டில் அமைந்துள்ள வெயில் உகந்த பிள்ளையார் கோயில் அருகில் உள்ள கச்சான் கடைக்கு நேற்று மாலை 6 மணியளவில் கச்சான் வாங்கச் சென்றவேளை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுவன் படுகாயமடைந்துள்ளான்.

நல்லூர் செம்மணி வீதியை சேர்ந்த என்.சந்தோஸ் (வயது 6) என்ற சிறுவனே இச் சம்பவத்தில் படுகாயமடைந்தார்.

குறித்த சிறுவனை மோதிய மோட்டார் சைக்கிள் நிறுத்தாமல் சென்றது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இன்று ஒரு தகவல்

## உத்தவ கீதை

அர்ச்சுனன் கேட்ட கேள்விக்கெல்லாம் பகவான் கிருஷ்ணன் பதில் சொன்னார். அதற்குப் பெயர் பகவத் கீதை. அதே மாதிரி உத்தமன் கேட்ட கேள்விக்கும் அவர் பதில் சொல்லியிருக்கிறார். அதற்கு பெயர் உத்தவ கீதை.

அது சரி... உத்தவன் யார்? கண்ணனுக்கு சின்ன வயதிலிருந்தே தேர் ஓட்டிக்கொண்டிருந்தவன் அவன்தானே.

குருஷேத்திரப் போர் முடிந்தது. அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டி, தர்மனுக்கு முடி சூடினார் கண்ணபிரான். அதன்பின் துவாரகைக்குத் திரும்பினார்.

தான் வந்த காரியம் முடிந்தது. அதனால் இளமையிலிருந்தே தனக்கு தேரோட்டியாக இருந்து வந்த உத்தவனைக் கூப்பிட்டார். "உனக்கு வேண்டுமென்பதைக்கேள்" என்றார்.

அவன் 'தனக்கு' என்று எதையும் கேட்க ஆசைப்படவில்லை. இருந்தாலும் கேள்வி கேட்பதில் அவன் கெட்டிக்காரன் அதனால் கேட்க ஆரம்பித்தான்.

"பரந்தாமா! இராச சூய யாகத்திற்கு தருமனைக் கூப்பிட்டு தன் அரண்மனையில் விருந்து வைத்தான் துரியோதனன். அதன்பின் சூதாட்டத்திற்கு கூப்பிட்டான். தருமன் தோல்வியடைவது போல் செய்து விட்டான்.

நீங்கள் தான் முக்காலமும் உணர்ந்தவராயிற்றே... சூதாட்டத்தில் தருமர் ஜெயிப்பது போல் செய்திருக்கக்கூடாதா?" பகடைக்காயை உருட்டும்போது நீங்கள் எதிர்பார்த்தது விழுவதுமாதிரி பண்ணியிருக்கலாமே.

சரி... அதுதான் இல்லை... வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த பீமன், அர்ச்சுணன், நகுலன், சகாதேவன் இவர்களை பணயம் வைத்து ஆடும்போதாவது காப்பாற்றியிருக்கலாம். அதையும் நீங்கள் செய்யவில்லை.

பாவம்... அந்த அபலைப்பெண்! ஒன்றுமறியாத உன் சகோதரி... திரௌபதி.

"அவள் அதிர்ஷ்டக்காரி! அவளை பணயம் வைத்து ஆடு... ஜெயித்துவிட்டால் இழந்த நாடு, நகரங்களையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்கிறான் துரியோதனன். அந்தச் சமயத்திலாவது பாண்டவர்களுக்கு வெற்றி கிடைக்கும்படி பண்ணியிருக்கக்கூடாதா?

அப்பொழுதெல்லாம் சும்மா இருந்துவிட்டு... அந்தப் பெண்ணை துச்சாதனன் இழுத்துக்கொண்டு வந்து துகில் உரியும் கட்டத்தில் காப்பாற்றினாயே... இது நியாயமா? முறையா? அறமா? இதுதான் உத்தவன் கேட்ட கேள்வி.

இதற்கு பரந்தாமன் பதில் சொல்கிறார். "அப்படிக் கேள் உத்தவா! தருமனை துரியோதனன் சூதாட அழைக்கும்போது என்ன சொன்னான்? நான் பணயம் வைக்கிறேன். எனக்கு பதிலாக என் மாமன் சகுனி பகடைக்காய்களை உருட்டுவான்" என்று சொன்னான்.

உடனே தர்மன் என்ன சொல்லியிருக்கலாம்? எனக்குப் பதிலாக எனது மைத்துனன் கண்ணன் பகடைக்காய்களை உருட்டுவான் என்று சொல்லியிருக்கலாமே. அப்படிச் சொல்லவில்லை.

என்ன செய்தான் தெரியுமா? துரியோதனன் கூற சூதாட்டத்திற்கு சம்மதித்துவிட்டோம். கடவுளே! இது என் மைத்துனன் கண்ணபிரானுக்கு தெரியக்கூடாதென்று வேண்டிக்கொண்டான். இதனால் தர்மன் எனக்கு மனதால் தடை போட்டுவிட்டான். அதனால் அரண்மனைக்கு வெளியிலேயே என்னை கூப்பிடுவார்கள் என்று காத்துக் கொண்டிருந்தேன். பீமன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன், திரௌபதி இவர்களை பணயம் வைத்து ஆடும்போதாவது கூப்பிடுவார்கள் என்று பார்த்தேன். அப்பொழுதும் அவர்கள் என்னை நினைக்கவில்லை.

திரௌபதியை துச்சாதனன் கூந்தலைப்பிடித்து இழுக்கிறான். அப்பொழுதுகூட அவள் தன் உடல் பலத்தால் தடுக்க முயற்சித்தாளே தவிர என்னை நினைக்கவில்லை.

துரியோதனன் சபைக்கு இழுத்துச் செல்லப்பட்ட திரௌபதி அறநூல்களையும் அரச நீதியையும் சொல்லிக்கொண்டிருந்தாளே தவிர என்னை நினைக்கவில்லை. துகிலுரியும் கட்டத்தில் தான் ஹரி- ஹரி கண்ணா! பரந்தாமா! என்று கூப்பிட்டாள். அதனால்தான் அப்போது போய் நான் காப்பாற்றினேன்" என்றான் பரந்தாமன்.

அப்படியானால் யாராவது அழைத்தால்தான் நீங்கள் போவீர்களா? நீங்களாக போகமாட்டீர்களா என்று கேட்டான் உத்தவன்.

"ஆமாம் நான் அழைத்தால்தான் போவேன். மனிதர்கள் செய்யக் கூடிய செயல்களையெல்லாம் அவரவர் போக்கிலேயே விட்டுட்டு பார்த்துக்கொண்டிருப்பேன். நான் குறுக்கிட்டு ஒன்றுமே செய்ய மாட்டேன்" என்றான் பரந்தாமன்.

"மனிதன் தவறு செய்தால் திருத்தமாட்டாயா? சும்மா பார்த்துக் கொண்டு தான் இருப்பாயா?" என்று கேட்டான் உத்தவன்.

"நான் மனிதனின் உள்ளத்தில் இருக்கும் போது என் எதிரில் மனிதன் தவறு செய்யமாட்டான்" என்றான் கண்ணன்.

"யார் நினைக்கிறார்களோ அவர்களுடைய உள்ளத்தில் எல்லாம் அவன் இருக்கிறான். அப்படியிருக்கும்போது தவறு செய்ய மனிதன் அஞ்சுவான்" இதுதான் உத்தவகீதை.

இந்தக்காலத்திலும் சிலபேர் பகவான் மாதிரி அடுத்தவர்கள் கஷ்டப்படுவதை வேடிக்கை பார்த்து கொண்டிருப்பது உண்டு. அன்றைக்கு அப்படித்தான்... நடுத்தெருவில் ஒரு திருடனை பிடித்து எல்லோரும் சேர்ந்து அடித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு ஆள் மட்டும் தள்ளி நின்று அதை வேடிக்கை பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான். "என்ன இது... அந்த ஆளைப் போட்டு இப்படி அடிக்கிறாங்களே" என்றேன்.

"அடிக்கட்டும் சேர் அவன் அடி வாங்க வேண்டிய ஆள்தான்" என்றான் அந்த ஆள். "ஏன் அப்பிடி சொல்கிறீங்கள்?" என்று கேட்டேன். பின்ன என்ன சேர்... நான் ஒருவரின் பையிலிருந்த பேர்சை எடுக்க முயற்சி செய்து கொண்டிருந்தேன். அதற்குள் அவன் முந்திக் கொண்டு அதை அபேஸ் செய்திட்டானே... பார்க்கிறது நான்... ஏடுத்துக்கிறது அவனா...? என்ன சேர் நியாயம் இது? நல்லா வாங்கட்டும் என்கிறான்... பரந்தாமன் தான் இந்த உலகை காப்பாற்ற வேண்டும்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# வன்னிப்பகுதியில் இந்துநாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள அரச பாடசாலைகளில் இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான வதிவிடக்கருத்தரங்கு எதிர்வரும் மே மாதம் 28,29,30 ஆம் திகதிகளில் நடத்தப்பட உள்ளது.

எனவே, பாடசாலைகளில் இந்து நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியர்களின் விபரங்களினை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன் 0112552825 என்ற தொலை நகல் மூலமாகவோ அல்லது நேரிலோ அல்லது தபால் மூலமாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இலக்கம் 248 1/1 காலி வீதி ,கொழும்பு-4 என்ற முகவரிக்கோ அனுப்பிவைக்குமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் மேற்படி மாவட்டங்களை சார்ந்த அரச பாடசாலைகளில் இந்து நாகரிக பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களின் அறிவை விருத்தி செய்யும் வகையில் அவர்களுக்கான வதிவிடக்கருத்தரங்கு மேற்குறித்த தினங்களில் நடைபெறவுள்ளது எனவும் இந்து நாகரிக பாடத்தை கற்பிக்கும் கற்பித்தல் தொடர்பான மேலதிக ஆலோசனைகளையும் அறிவியல்களையும் வழங்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் விரிவுரையாளர்களாக இலங்கை பல்கலைக்கழகங்களை சார்ந்வர்களான பேராதனை பல்கலைக்கழகதகைசார் பேராசிரியர் வரலாற்றுத் துறை சி.பத்மநாதன், பேராதனைப்பல்கலைக்கழகம் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி வ.மகேஸ்வரன், ஸ்ரீ ஜயவர்த்தனபுரபல் கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கலாநிதிஸ்ரீபிரசாந்தன், தென்கிழக்கு பல் கலைக்கழக சிரேஷ்ட விரி வுரையாளர் க.இரகுபரன்,வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.முகுந்தன் ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளனர். (அ-3-15)

# விழிப்புணர்வு கருத்தமர்வு

சாவகச்சேரி நகர சபையின் மீசாலை பொது நூலகத்தினரால் சத்துணவு திட்ட கருத் தரங்கும் இலைக்கஞ்சி வழங்கலும் போசாக்கு தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வும் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நூலக மண்டபத்தில் நகராட்சி மன்ற நகர பிதா இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வேல்ட்விஷன் திட்ட முகாமையாளர் றொசைறோ கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி மேற்பார்வை குடும்பநல உத்தியோகத்தர் திருமதி ரி. இராஜரட்ணம், நகராட்சி மன்ற உறுப்பினர் ப.ஸ்ரீதரன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி செல்வராணி ஜெகதீ சன், கௌவர விருந்தினராக வேல்ட் விஷன் தொழில்நுட்ப அலுவலர் இக்னேசியஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். முன்பள்ளி மாணவர்களுக்கான இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்விற்கு நகர சபையின் உறுப்பினர் ப.ஸ்ரீதரன் அனுசரணை வழங்குவது குறிப்பிடத்தக்கது.

(அ-3-29)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 65 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 30 |
| தக்காளி | 15 | 30 | 20 |
| மரவள்ளிக் கிழங்கு | 30 | 20 | 40 |
| கோவா | 15 | 10 | 20 |
| கரட் | 40 | 30 | 40 |
| பூசணி | 25 | 20 | 35 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 30-35 | 20 | 35 |
| சின்ன வெங்காயம் | 50-60 | 40 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 70 | 60 |
| பாகற்காய் | 90 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | - | 60 | 70 |
| பயற்றங்காய் | 70 | 60 | 80 |
| லீக்ஸ் | 70 | 80 | 70 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | - | 60 | 50 |
| முருங்கைக்காய் | 200-250 | 200 | 250-300 |
| போஞ்சி | 40 | 60 | 50 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 30 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 20 | 25 |
| வெங்காயப்பூ | - | 80 | 70 |

# இராசி பலன்

29.03.2012
(பங்குனி 16, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு
சஷ்டி காலை 7.41 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 2.46 மணிவரை
இராகுகாலம் 1.43-3.13 மணிவரை
சுபநேரம் 7.43-9.13 மணிவரை

**மேடம்** உறவினர் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**இடபம்** சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், தொலைபேசி மூலம் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் தகவல்கள் வந்து சேரலாம், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம், வியாபார நலன் கருதி புது முயற்சி எடுப்பீர்கள், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பணவிரயம் அதிகரிக்கும், பயணங்களால் மன உளைச்சல்கள் ஏற்படலாம்.

**சிங்கம்** நல்ல காரியத்திற்கு அடித்தளம் அமைக்கும் நாள், பதவி உயர்வுகள் பற்றி தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் மனத்திருப்தியைக் கொடுக்கும், கௌரவமான நாள்.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி வருமானத்தை அதிகரிக்க நினைப்பீர்கள், புதிய பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், அதிகார நினைப்புடன் செயற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** தந்தைவழியில் மனநிறைவான செய்தி ஒன்று வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர் வடையும், வெளியூர் பயணங் களால் ஆதாயம் ஏற்படலாம், மறதியால் தவறிய காரியங்களை செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்** ஆரோக்கியத்தில் ஆச்சுறுத்தலான நாள், குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், போசன சுகமுண்டு, வேலைச்சுமை கூடும், காரியங்கள் தாமதமாகும்.

**தனுசு** சுற்றத்தார் வரவால் சுகம் காணும் நாள், நீண்ட நாளைய விருப்பம் ஒன்று நிறைவேறும், வாகன சுகமுண்டு, கௌரவமான நிலை வெளியூர் பயணங்களால் பணவரவுகளைப் பெறுவீர்கள்.

**மகரம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும்.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**மீனம்** உடன் பிறப்புக்களால் உற்சாகம் அடையும் நாள், அடுத்தவர் நலனில் அதிகஅக்கறை எடுத்துக் கொள்வீர்கள் பொருளாதார நிலை உயரும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

வளவன்

## பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளைக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாவட்டக்கிளைத் தலைவர் பெ.கனக சபாபதி தலைமையில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தின்போது இவ்வாண்டு மே தினவிழாவினை யாழ்ப்பாணத்தில் நடத்துவது தொடர்பாகவும் அதனைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்வது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன்விவசாயமற்றும்மீனவர்தொழிற் சங்கங்கள், நிறுவனங்கள், சமூக முன்னேற்ற அமைப்புக்கள் ஆகியவற்றில் அங்கம் வகிக்கின்ற தொழிலாளர்களும் கலந்து மே தின நிகழ்வுகளை ஒழுங்கு செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டதாக இலங்கைத்தமிழரசுக்கட்சிபொதுச் செயலாளர் மாவை.சேனாதிராஜா அறிவித்துள்ளார்.

இதேவேளை இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களாக மாவை.சோ.சேனாதிராஜா, சி.சிறிதரன் மற்றும் பேராசிரியர் க. சிற்றம் பலம், பேராசிரியர் க.குகபாலன், கே.சிவஞானம் உட்பட தமிழரசுக் கட்சி யாழ். மாவட்ட உறுப் பினர்கள் கலந்து கொண்டனர். (அ-7)




## ஒய்வூதிய நம்பிக்கை நிதிய பொதுக்கூட்டம்

பகிரங்கசேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேச சங்க 2ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித் துறை பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் இளைப்பாறிய நீதிபதி பா.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேசசெயலர் இ.த. ஜெயசீலன், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித் துறை பிரதேசசெயலகக் கணக்காளர் கி. யோகேந்திரன், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தலைவர் வி. சிறிசக்திவேல், யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய செயலாளர் பொ.கமலநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தவர் அட்டையைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அன்றையதினம் பெற்றுக் கொள்ளும்படியும் நிதியத்தின் பதில் செய லாளர் சு.சிறிஸ்கந்தராசா அறிவித்துள்ளார். (அ-7)

# வீதி அபிவிருத்தி திணைக்கள விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

வடமாகாண வீதி அபிவிருத்தி திணைக்களங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமையில் கிளிநொச்சி விபுலானந்தர் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வீதி அபிவிருத்தி திணைக்கள ஒருங்கிணைப்பு குழு மேற்கொண்டுள்ளது. இவ் விளையாட்டு போட்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டத்தில் உள்ள விதி அபிவிருத்தி திணைக்களங்கள் பங்கு பற்றவுள்ளன. (அ-3-10)

# வட இலங்கை சங்கீத சபையில் செயன்முறை பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்படும் யாழ். மாவட்ட தரம் ஒன்று முதல் நான்கு வரையான பிரிவு மாணவர்களுக்கான செயல்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறுமென வட இலங்கை சங்கீதசபையின் தலைவர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார்.

இதற்கமைய இப்பரீட்சைகள் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, யாழ். இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, விக்டோரியா கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, யாழ். இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் இடம்பெறவுள்ளது.

வெளி மாவட்ட மாணவர்களுக்கான செயல்முறைப் பரீட்சை யானது அனுமதி அட்டையில் குறிப்பிட்டுள்ள பாடசாலைகளில் நடைபெறுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட ஐந்தாம், ஆறாம் தரங்களுக்கான செயன்முறை பரீட்சையானது எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இதில் வெளிமாவட்ட மாணவர்களுக்கர்ன செயன்முறைப் பரீட்சையானது எதிர்வரும் 7ஆம் திகதி முதல் ஆரம்ப மாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைகளில் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்கான அனு மதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2-7)

## க.பொ.த.உ/த) 2012 மாணவர்களுக்கு

க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்கு 2012 ஆவணி மாதம் தோற்றவுள்ள மாணவர்களில் இதுவரை விண்ணப்பப்படிவத்தில் ஒப்பமிடாதவர்களை இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு முன் கல்லூரிக்கு சமுகம் தருமாறு யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். (அ)

# ஹெரோயின் வைத்திருந்த நபருக்கு அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

620 மில்லிகிராம் ஹெரோயினை தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான நபருக்கு 6 மாதச் சிறைத்தண்டனையை யாழ்.நீதிமன்றம் விதித்துள்ளது.

கடந்த 22ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபத்திற்கு முன் நாவாந்துறையினைச் சேர்ந்த குறித்தநபர் ஹெரோயின் போதைப் பொருளினை தன்வசம் வைத்துள்ளார் எனக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து யாழ். பொலிஸாரால் குறித்த நபரினை கைது செய்து யாழ்.நீதவானின் உத்தரவிற்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இவ்வழக்கு நேற்று முன்தினம் யாழ். நீதவான் மா.கணேசராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது குறித்தநபர் குற்றத்தினை ஒப்புக் கொண்டமையால் 21 ஆயிரம் தண்டப்பணமும் செலுத்தத்தவறின் 6 மாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் விதித்துத் தீர்ப்பளித்தார். (அ-2-4)

## கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தினரால் **தாய், சேய் நலம்** என்னும் தலைப்பிலான மருத்துவ கருத்தரங்கு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே, பயன்பெற விரும்புவோர் கலந்து கொள்ளுமாறு நூலகர் அறிவித்துள்ளார். (அ-3-29)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அருள்மிகுநல்லையம்பதிஸ்ரீமத்நல்லை நாயகி சமேத ஸ்ரீ நல்லைநாத சுவாமி கர வருட மஹோற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 9 தினங்கள் நடைபெறவுள்ளன.

இதன்போது எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது என ஆலய தேவஸ்தான சபை அறிவித்துள்ளது. (அ-7)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பாடசாலையின் வருடாந்த பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நிதியத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ-3-29)

## உயிர்ப்பு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)



யாழ்ப்பாண கல்லூரியின் உயிர்ப்பு ஞாயிறு தின நிகழ்வுகளின் பஜனை-பாடுகளின் காட்சி உயிர்ப்பு என்பனவற்றை குறிக்கும் அவலத்தில் மீட்பு நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஒட்லி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ)

## கருத்தரங்கு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தினரால் சுகாதார கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நூலக மண்பத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளதாக நூலகர் பொ. இரவீந்திரன் அறிவித்துள்ளார். (அ-3-29)

வடமாகாண பண்பாட்டுத் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இசைக் கதம்பம் நிகழ்வு அண்மையில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலைஞர் ஒருவரை கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

# மரண அறிவித்தல்

## திருமதி சிவமலர் செல்வரட்ணம்



ஏழாலை மத்தி, ஏழாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவமலர் செல்வரட்ணம் (26.03.2012) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதி-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் ,காலஞ்சென்றவர்களான பேரம்பலம்-பூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வரட்ணத்தின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான குலசிங்கம், இரத்தினம் மற்றும் சிவபாதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

Dr. சிவகுமார் (வைத்தியர்-யாழ்.போதனா வைத்தியசாலை), திருக்குமார்(UK), சந்திரலேகா (UK), மசீர்குமார்((France) ஆகியோரின் பாசமிகு தாயும், அணிமொழி, சரிதா, வினோதன் ஆகியோரின் அன்பு மாமியும், பிரியங்கா, கனுஜன், வினுயங்கா,வினுஜன், மேனுசா, பபிசா, கவினாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.03.2012) வியாழக் கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

Dr.S சிவகுமார்(மகன்)

T.P:0773583819

ஏழாலை மத்தி,

ஏழாலை.

(சி-6194)

# ஜெனீவா நகரில் இலங்கையில் செயற்பாட்டு வேலைத்திட்டம்

ஜெனீவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இவ்வருடம் கார்த்திகை மாதம் 2 ஆம் திகதி இடம்பெறும் அமர்வின்போது **உலகளாவிய கால மீளாய்வு** என்ற தலைப்பில் இலங்கை தொடர்பான விடயமும் ஆராயப்படும்.

கடந்த 2008 ஆம் ஆண்டளவிலும் ஜெனீவாவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றிய இலங்கைப் பிரதிநிதிகள், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய செயற்பாட்டு வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தினர்.

எதிர்வரும் கார்த்திகை மாதம் இடம்பெறவிருக்கும் இக் கலந்துரையாடலிலும் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் இவ் வேலைத்திட்டம் குறித்து விளக்கமளிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# ஜெனீவா அமர்வின் பின்னணி குறித்து ஜனாதிபதிக்கு அறிக்கை

(கொழும்பு)

சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகளின் பின்னணியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு இரகசிய அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அமர்வுகளில் பங்கேற்ற இளம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரினால் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. முல்லைத்தீவு வைத்தியசாலையில் கடமையாற்றிய தமிழ் வைத்தியர் மற்றும் புலி எதிர்ப்பு தமிழர்களுக்கு உரிய முறையில் புலி ஆதரவாளர்களுக்கு தமது எதிர்ப்பை வெளியிட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இது தொடர்பில் ஜனாதிபதியிடம் குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் முறைப்பாடு செய்வார் என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் கனடா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகளிலிருந்து ஜெனீவாவிற்கு விஜயம் செய்த புலி ஆதரவாளர்கள் இலங்கைக்கு எதிராக தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரதிநிதிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் மற்றும் அமர்வுகளின் பின்னணியில் இடம்பெற்ற சம்பவங்கள் உள்ளிட்ட சகல விடயங்களும் உள்ளடக்கிய இரகசிய அறிக்கை ஒன்று ஜனாதிபதியிடம் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக இளம் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சமுர்த்தி பயனாளிகளுக்கான நிதியில் 98 இலட்சம் ரூபா மோசடி

## 16 பேர் பணி நீக்கம்

(கொழும்பு)

சமுர்த்தி பயனாளிகளுக்குச் சொந்தமான நிதியில் சுமார் 98 இலட்சம் ரூபாவினை மோசடி செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதான சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர் ஒருவர் உட்பட 16 பேரை பணி நிறுத்தம் செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நுவரெலியா பிரதேச செயலாளர் அலுவலகத்திலுள்ள சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர் உட்பட 16 அதிகாரிகளையே இவ்வாறு பணி நிறுத்தம் செய்யுமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் டீ.கே.பி.குமராசிறி உத்தரவிட்டுள்ளார்.

குறித்த நிதி மோசடி தொடர்பில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலகத்தினால் விடுவிக்கப்பட்ட ஆலோசனைக்கமையவே மேற்படி அதிகாரிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் பெண்கள் மூவரும் உள்ளடங்குகின்றனர்.

சமுர்த்தி பயனாளிகளுக்கு கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்தும் இவர்கள் இந்த நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்கள் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-7)

# இடைத்தரகர்களால் நெல் விற்பனையில் பின்னடைவு

## விவசாயிகள் கவலை

(சிவநகர்)

விவசாயிகளால் தற்போது காலபோக நெல் அறுவடை செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இந்நெல் விற்பனையின் போது **சம்பா, ஆட்டக்காரி** போன்ற வகைகளைச் சார்ந்த நெல்லினங்கள் தனியாரினால் உடனடியாக கொள்வனவு செய்யப்படுகின்றது. இதனால் விவசாயிகளுக்கு இவ்வின நெல் விற்பனையில் இடையூறுகள் எதுவும் காணப்படுவதில்லை என தெரிவிக்கின்றனர்.

ஆயினும் 406 ரக நெல் விற்பனையின் போதே விவசாயிகள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இந்நெல் கொள்வனவிற்கு தனியார் துறை வரும் போது உள்ளூர் இடைத்தரகர்கள் குறுக்கீடு காணப்படுவதனால் விவசாயிகளால் தமது அறுவடை செய்யப்பட்ட நெல்லை நியாயமான விலைக்கு விற்க முடியாத நிலை காணப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்வாறான இடைத்தரகர்கள் மூலம் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை எடுப்பார்களா என எதிர்பார்த்திருப்பதாகவும் விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். (அ-7-254)

# இந்திய சுனாமி கோபுர பாகங்கள் இலங்கையில் மீட்பு!

இந்திய அரசாங்கத்தினால் சர்வதேச கடல் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சுனாமிக் கோபுரத்தின் பாகங்கள் இலங்கையில் மீட்கப்பட்டுள்ளன.

இலங்கையைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் இந்த கருவியை திருடிச் சென்றுள்ளதாகவும் ராடர்களின் மூலம் இந்தத் திருட்டுச் சம்பவம் அம்பலமாகியுள்ளதாகவும் இலங்கை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கோபுரத்தின் பாகங்கள் மாத்தறை கந்தர கொட்டியேகொட என்னும் பிரதேச காட்டுப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. சர்வதேச ரீதியில் தகவல்களை பரிமாறிக் கொள்ளக்கூடிய வகையில் இந்த கோபுரம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்தக் கருவியின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவைகள் இந்திய அரசாங்கத்திடம் மீண்டும் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாகங்களைக் கடத்திய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார் இது தொடர்பாக ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# தேசிய கொள்கை அடிப்படையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்

## ஆலோசனை வேண்டாம் என்கிறார் மொஹான்

(கொழும்பு)

புற சக்திகளின் ஆலோசனை அவசியமற்றது என முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் வெளிநாட்டு சக்திகள் இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்ய முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவின் பெரும்பான்மையான பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்கனவே அமுல்படுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு கிட்டத்தட்ட 250 பரிந்துரைகளை முன்வைத்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் நடவடிக்கைகள் தொடர்பில் வேறு எந்தவொரு நாடும் கண்காணிக்கவோ அல்லது ஆலோசனை வழங்கவோ தேவையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய கொள்கைகளின் அடிப்படையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார். ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தும் நடவடிக்கை பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கு இந்தியாவின் வாக்களிப்பு மிகவும் முக்கியமான ஏதுவாக அமைந்தது என அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவின் தீர்மானம் இலங்கைக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தியது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# சிரேஷ்ட பிரஜைகளுக்கு விசேட அடையாளஅட்டை


சிரேஷ்ட பிரஜைகளுக்கு விசேட அடை யாள அட்டைகளை விநியோகம் செய்யப் படஉள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சிரேஷ்ட பிரஜைகளுக்கு சில சலுகைகளை வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக சிரேஷ்ட பிரஜைகளுக்கான செயலகத்தின் பணிப்பாளர் திருமதி ஜே.கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2050 ஆம் ஆண்டளவில் நாட்டின் முதியோரின் எண்ணிக்கை 27 வீதமாக உயர்வடையும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே, வயது முதிர்ந்தவர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ-2)



பூநகரி பிரதேசத்தில் கால்நடை அபிவிருத்திக் கட்டடத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், பூநகரி 661 ஆவது படைப்பிரிவின் தளபதி கேணல் ஜெயசூரியா ஆகியோர் உரையாற்றுவதையும் திறந்து வைக்கப்பட்ட புதிய கட்டடத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூநகரிச் செய்தியாளர்)

# தெய்வீகத் தன்மையின் ஆறு சிறப்பு இயல்புகள்




ஆன்மீகம் 19

**5. மெஞ்ஞானம்**

அறிவு, செறிவான ஆழ்ந்த அனுபவத்தின் நன்றாக வேரூன்றப் பெற்றதால்- இது ஞானம். இந்த வகை அறிதல் வெறுமனே தலையிலிருந்து வருவதல்ல- அது உன் இருப்பின் ஆழத்திலிருந்து- இருப்பின் ஒவ்வொரு துளியிலிருந்தும் வருகிறது. ஞானம் உன்னிலிருந்து பிரிக்கப்பட் முடியாதபோது- அது மெய்ஞானம்- நீ அதைக் காண்கிறாயா? ஒருவித அறிவு உன்னுள் வருகிறது. ஆனால், மற்றதோர் வகை உன்னுள் ஒரு பகுதியாகிறது. அது இல்லாமல் உன்னால் இருக்க முடியாது, அது மூச்சைப்போன்றது. அறிவு நன்றாக ஆழமாக வேரூண்றிவிட்டபோது- மூச்சைப்போல -அது மெய்ஞானம்.

**6. துறவு**

துறவு ஆறாவது தன்மை. உன் மூச்சுக்கு, என்ன நடக்கிறது என்று சற்றுக் கவனித்துப்பார். உனக்குள் ஆழத்தில் இருக்கும் அதற்கு- குறிப்பாக உனக்கு வேண்டாத் சில நடக்கும்போது- என்ன ஆகிறது? யாராவது உன்னைப் புகழ்ந்தால், அது உனக்குள் ஆழமாக வேரூண்றுவதில்லை. அது உன் சுவாசத்தின் ஒருபகுதிபோல் மாறுவது இல்லை. ஆனால், யாராவது உன்னைக் கடுமையாகப் பேசினால், நீ உள்ளிழுத்து வெளிவிடும் ஒவ்வொரு மூச்சும்- 'சுடுகிறது, இல்லையா? மகிழ்ச்சியான விடயங்களும், உன்னில் ஒரு பகுதியாக மாறுகிறது. ஆனால், பொதுவாக மக்கள் நல்லவற்றைவிட, கெட்டவற்றில் அதிகமாகச் சிக்குண்டு போகிறார்கள். நீ யாரையாவது நேசிக்கும்போது, நேசம் உன்னில் ஆழமாகத்தான் இருக்கிறது. உனக்கு ஏதாவது பிடித்தால் அல்லது உனக்குக் கட்சி, கொள்கை இருந்தால் அதுவே உன் மூச்சாகிறது. சிலர் தன் சுற்றுப்புறத்திற்கு ஏதாவது செய்வதற்குப் பொறுப்பு எடுத்துக்கொள்கிறார்கள். அதைப் பற்றியே அல்லும் பகலும் சிந்திக்கிறார்கள். அந்தச்செயற்திட்டம் அவர்களின் ஒரு பகுதியாகவே மாறிவிடுகிறது. அவர்கள் அதிலேயே மூழ்கிவிடுகிறார்கள்; அதுவும் சரிதான்.



துறவு என்பது எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ஓய்வெடுக்கும் திறமை. பலர் தங்கள் செயல்முறைத் திட்டங்களில் வெற்றி பெறாததற்கு காரணம் அவர்களின் அதீதமான தவிப்புதான். அவர்களுக்குத்துறக்கும் திறன்இல்லை. உனக்குப்பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் ஒவ்வொரு இரவும் படுக்கைக்குப் போகுமுன் நீ எல்லாத் தவிப்புகளையும் துறக்கிறாய். அப்படியில்லையெனில் உன்னால் தூங்கமுடியாது. தூக்கமின்மை- துறக்காததின் அடையாளம். கவலை துறக்காததின் அடையாளம்- எதிலாவது தடைப்பட்டுப்போதல்- துறத்தல் என்பது விட்டுவிடுதல்.

நீ எதைப் பிடித்துகொண்டிருக்கிறாய்? நீ இங்கிருந்து போய்விடுவாய்! நீ எப்படி இங்கே வந்தாயோ, அதே அமைப்பில் அதே உடையில், அதே அலங்காரத்தோடு இங்கேயே நிலையாகத் தங்கப்போவதாக நினைத்துக் கொண்டிக்கிறாய்! இது சர்க்கஸில் வரும் கோமாளியும், ரிங்மாஸ்டரும் போல்- ரிங்மாஸ்டர் கோமாளியைச் சிறிது நேரம் மேடையில் நடுவில் இருக்கவிடுவார். ஆனால், அந்தக் கோமாளி மிக அதிகமாக ஏதாவது செய்தால் அவர் அவனைப்பிடித்து வெளியே தள்ளிவிடுவார். அது உனக்கு நடக்கும்போது, உன் காலம் முடிந்துவிடும். நீ இங்கிருந்து விரட்டப்படுமுன், வெளியே தள்ளப்படு-முன், எல்லாவற்றையும் விட்டுவிடு, எப்படியிருந்தாலும் நீ எல்லாவற்றையும் விட்டுத்தானாக வேண்டும்; இப்போதே விட்டு விடுவது நல்லது!


எதை உன்னால் பிடித்துக்கொள்ள முடியும்? உன் சொந்த உடலையும், வடிவத்தையும் கூடப்பிடித்து வைத்துக் கொள்ளமுடியாத நீ- உலகில் உள்ள மற்றவற்றைப் பிடித்து வைத்துக் கொள்ள முயல்கிறாய்! இது வினோதமாக இல்லை? இந்த உடல் உன் கட்டுப்பாட்டிலிருப்பதாக நீ நினைக்கிறாய். நான் சொல்கிறேன்- அதன் மேல் உன் கட்டுப்பாடு பூஜ்ஜியமே. மற்றவர்களின் எண்ணங்களை, உணர்வுகளை, நடத்தையை, நீ உன் கட்டுப்பாட்டில் கொண்டுவர நினைக்கிறாய்; முயற்சி செய்கிறாய்- அவர்கள் இப்படித்தான் நினைக்கவேண்டும். உணரவேண்டும். வாழவேண்டும் என்று அவர்களை கட்டுப்படுத்த முயல்கிறாய். எப்படி நீ மற்றொருவரின் வாழ்க்கையைக் கட்டுப்படுத்த முடியும்? இது முரண்பாடில்லையா? எவ்வளவு அதிகமாக ஒருவர் சுய

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**


கட்டுப்பாடில்லாமல் இருக்கிறாரோ, அந்த அளவு அதிகம் அடுத்தவர்களைக் கட்டுப்படுத்த முயற்சி செய்வார். தனக்குத்தானே சுய கட்டுப்பாட்டில் இருப்பவர் யாரையும் எதையும் கட்டுப்படுத்த மாட்டார். துறவு, நிறைய சுதந் திரத்தைக் கொண்டு வருகிறது. துறவு என்பது முழுமையான சுதந்திரத் துடன் வாழ்தலும், முழுமையான சுதந்திரம் எல்லாரிடமும் உதயமாக விடுதலும் தான்.

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள் 19



## புதன் மேட்டிலுள்ள இரேகைக் குறிகளின் பலாபலன்கள்



சுண்டு விரலுக்கு அடியில் அமைந்திருப்பது புதன்மேடாகும். ஒருவர் கையில் புதன்மேட்டில்,

1. ஒரு சிறிய இரேகை இருந்தால், அது அவருக்குத் திடீரென எதிர்பாராத விதத்தில் திரவிய சகாயம் கிடைப்பதைக்குறிக்கும். அந்த இரேகை அழுத்தமாய்ப் பதிந்திருந்தால், அவர் சாஸ்திர ஆராய்ச்சியில் ஆழ்ந்த சிந்தனையுடையவர் என்பதை அது குறிப்பதாகும்.

2. செங்குத்தாய் ஒரே அளவில் மூன்று சிறு இரேகைகள் முதல் ஆறு சிறு இரேகை வரை நன்றாய் பதிந்து இருந்தால், அவர் வைத்தியத் தொழிலில் ஈடுபடுவர் என்பதை அவை குறிக்கும். அம்மாதிரிக் குறிகள் ஒரு பெண்ணின் கையில் இருந்தால், அவள் ஒரு வைத்தியரை மணம் செய்துகொள்வாள் என்பதை அவை அறிவிப்பதாகும்.

3. அநேக சிறு கலப்பு இரேகை பட்டும்படாமலும் அமைந்திருந்தால், அவை அவருக்குக் கூர்மையான புத்தியைக் கொடுக்கும். ஆனால், அவர் விஞ்ஞான் ஆராய்ச்சியில் இறங்குவரானால், அவை அவரை ஆபத்தான வழியில் புகுத்திவிடும்.

4. பல சிறு இரேகைகள் உற்பத்தியாகி அவை இருதய இரேகை வரைச் சென்றிருந்தால், அவை அவர் பணத்தைத் தாராளமாகச் செலவிடுபவர் என்பதையும், ஆனால், அச்செய்கையில் புத்திசாலித்தனமானவை

### ரேகைகளும் கிரகங்களும்

களாய் இராது என்பதையும் குறிப்பதாகும்.

5. குறுக்காய் ஒரு சிறு இரேகை இருந்தால், அது கொள்ளையினால் அவருக்குப் பெரும் நஷ்டம் உண்டாகுவதைக் குறிக்கும்.

6. ஒரு கறுப்புப்புள்ளி காணப்பட்டால், அது அவருக்கு வியாபார நஷ்டம் உண்டாவதை அதுகுறிக்கும். ஒரு பெரிய கறுப்புப் புள்ளியிருந்தால், அது அவர் போகும் இடங்களில் எல்லாம் அவ்ருக்கு அடிக்கடி விபத்து அல்லது நோய்வரும் என்பதைக் குறிக்கும்.

7. ஒருகிராஸ் இருந்து, மற்றைய கிரகமேடுகள் நன்கு அமையாதிருந்தால், அவை அவர் வஞ்சிக்கும் குணமுடையவர் என்பதைக் காட்டும். இந்தக் கிராஸூம் இருந்து, மற்றைய கிரகமேடுகளும் நன்கு அமைந்திருந்தால், அவை அவர் அகடவிகட ஞானம் உள்ளவராய், எல்லார்க்கும் மகிழ்ச்சியைத் தருபவராய் இருப்பார் என்பதைக் காட்டுவதாகும்.

8. அநேக சிறு கிராஸ் குறிகள் இருந்தால், அவர் எல்லாவிதத் தீய ஒழுக்கமும் உடையவர் என்பதை அவை குறிப்பதாகும்.

9. நக்ஷத்திரக்குறியிருந்தால், அது அவர் மோசடி செய்யும் குணமுடையவர் என்பதையும், நம்பத்தகாதவர் என்பதையும் காட்டுவதாகும்.

(நன்றாக அமைந்துள்ள ஒருவர் கையில் புதன்மேட்டில் நக்ஷத்திரக் குறியிருந்தால், அது அவர் மற்றவர்களின் எண்ணங்களையும் குறிப்பையும் அறிந்து சமயோசிதமாய் நடப்பவர் என்பதையும் காட்டுவதாகும்)

10. புதன் இரேகை உற்பத்தியாகும் இடத்தில் அது ஆயுள்இரேகையைத்தொடாமல், நீளமாயும் அந்தப் புதன் இரேகையை புதன்மேட்டில் மத்தியில் தொடாமல், ஒரு நக்ஷத்திரக் குறியிருந் தால் அவை அவருக்கு தொழிலிலும் அபிவிருத்தியிலும் பெருங்கீர்த்தியும் வெற்றியும் உண்டாகும் என்பதையும் குறிப்பனவாகும்.

12. சதுரக்குறி காணப்பட்டால், அது அவர் பெரும் நஷ்டம் ஏற்படுவதிலிருந்து தப்பித்துக்கொள்வார் என்பதைக் குறிக்கும்.

13. முக்கோணக்குறியிருந்தால், அது அவர் இராஜீய விவகாரங்களில் இறங்குவார் என்பதைக் குறிக்கும். (இதுஉயர்த்தனமான தன்று)

14. வலைக்குறி இருந்தால், அது அவர் பண மோசடி வேலைகளைச் செய்துகொள்ளக்கூடியவர் என்பதைக் குறிப்பதாகும்.

15. தீவுக்குறியிருந்தால், அது அவர்கல்வியில் கீர்த்திபெற்றவராய் இருந்தாலும், அந்தக் காலம்வரை மந்த புத்தியை உடையவராய் இருப்பார் என்பதைக் குறிப்பதாகும்.

(தொடரும்)

# மற்றொரு பிரேரணை வருவதை தவிருங்கள்

## உலகத் தலைவர்கள் குழு வலியுத்து

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக மற்றுமொரு பிரேரணை கொண்டுவரப்படுவதை தவிர்ப்பதற்கு முயற்சிக்குமாறு முன்னாள் உலகத் தலைவர்கள் குழு வலியுறுத்தியுள்ளது.**

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் தலைமையிலான குறித்த குழு இலங்கை அரசாங்கத்திடம் இது தொடர்பான கோரிக்கையை முன்வைத்துள்ளதாக பி.பி.சி.செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத் தொடரின் போது இலங்கை தொடர்பில் அமெரிக்கா முன்வைத்த பிரேரணை மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை அரசாங்கம் நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதை குறித்த பிரேரணை வலியுறுத்தியிருந்தது.

இதற்கமைய குறித்த பிரேரணைக்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நெல்சன் மண்டேலா தலைமையிலான முன்னாள் உலகத் தலைவர்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையை முன்னாள் உலகத் தலைவர்கள் வரவேற்றுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் முன்னாள் உயர்ஸ்தானிகர் மாரி றொபின்சன் தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மேற்குலக நாடுகளின் அனுசரணையுடன் முன்வைக்கப்பட்ட பிரேரணை அல்ல எனவும் நாடொன்றை தாழ்த்தி செயற்படுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி அல்லவெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளத்தில் உள்ள ஆசிரியர் மத்திய நிலையத்தில் நடை பெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்தில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் இச் செயமர்வு நடைபெறவுள்ளதால் பாடசாலை அதிபர்கள் தங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களை தவறாது அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 11 இல் சைவநெறி கற்பிக்கும் ஆசிரியர்கள், சைவநெறி ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோருக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு மருதனார் மடத்தில் உள்ள வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

நடப்பாண்டில் க.பொ.த சாதாரண தரத்தில் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் சைவநெறிப் பார்டத்தில் அடைவுமட்டத்தை அதிகரிக்கும் நோக்குடன் துறை சார்ந்த வளவாளர்களினால் இச்செயலமர்வு நடைபெறுவதற்கு வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

தரம் 11 இல் சைவநெறிப் பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

# பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை அமெரிக்காவும் இந்தியாவும் விரும்பாது

## அடித்துக் கூறுகிறார் விக்கிரமபாகு

(கொழும்பு)

மன்மோகன் சிங்கின் மன்றாட்டம் இலங்கை அரசாங்கத்தின் இறுமாப்பை அதிகரித்துள்ளதோடு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கும் ஆப்பு வைத்துள்ளது என இடது சாரி முன்னணியின் தலைவரும் தெஹிவளை கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்தார். பரிந்துரைகளை அமுல்படுத்துவதை வலியுறுத்தி சர்வதேச ரீதியில் பிரசாரங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

அமெரிக்காவின் ஜெனீவா பிரேரணைக்கு ஆதரவளித்தோம். ஆனால், இலங்கைக்கு பாதகம் ஏற்படாத வகையில் திருத்தம் செய்தோம் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பி மன்றாடுகிறார், தாலாட்டுகிறார்.

ஆனால், இலங்கை அரசாங்கம் இந்த மன்றாட்டத்தை தூக்கியெறிந்து விட்டது. உண்மையில் இந்தியா தமிழ் மக்களுக்கு உரிமைகள் கிடைப்பதை விரும்பவில்லை. இதுவே இந்த மன்றாட்டத்திற்கு காரணமாகும்.

இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையின் காணிகளையும், கடல் வளங்களையும் சுவீகரிப்பதிலேயே நாட்டம் கொண்டுள்ளன. எனவே, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை நடைமுறைப் படுத்தப்போவதில்லை. இதனால் சர்வதேச ரீதியில் பரிந்துரைகளை அமுல்படுத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென பிரசாரங்கனை முன்னெடுக்கவுள்ளோம்.

விசேடமாக கியூபாவுக்கு இலங்கை அரசாங்கத்தின் தமிழர் விரோத உண்மையான முகத்தை தெளிவுபடுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அத்தோடு எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென வலியுறுத்தி நாடு தழுவிய ரீதியில் போராட்டங்களை நடத்தவுள்ளோம் என விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்தார். (அ-2)

## மின்தடை பற்றிய அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதனால் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரை பின்வரும் பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இணுவில், உப்புமடம், கோண்டாவில், சுதுமலை, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## மஹோற்சவம்

நயினாதீவு செம்மணத்தம்புலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இதன்போது 11 நாட்கள் மஹோற்சவமும் 12 ஆம் நாள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. இதில் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன்போது மறுநாள் சனிக்கிழமை காலை 6 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது.

இப்பூசை உற்சவங்களை மஹோற்சவ குருமணி சிவகிரியா கல்பநிதி சர்வாலங்கார பூஷணம் சிவ ஸ்ரீ இ. கமலபாதக் குருக்கள் நிகழ்த்தவுள்ளார் என ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது. (அ-7)

# குற்றச் செயலில் ஈடுபட்ட 6 பேர் கொண்ட குழு கைது

வடக்கு, கிழக்கு பகுதிகளில் பலரிடம் கப்பம் கோருதல், கொள்ளையடித்தல் ஒப்பந்த அடிப்படையில் குற்றச் செயல்களில் ஈடுபடுதல் ஆகிய பல குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள ஆயுதம் தாங்கிய குழுவொன்றை திருகோணமலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அதேவேளை, இந்த குழுவினர் காவற்றுறை அதிகாரிகள் உட்பட அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் இறப்பர் முத்திரைகளை போலியாக தயார் செய்து அவற்றை பயன்படுத்தி பெருமளவில் பணம் சம்பாதித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் இந்தக்குழுவை சேர்ந்த 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் காவற்றுறை சிப்பாய் ஒருவரும் அடங்குகிறார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கைதுப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்கள், தொலைநோக்கி, அதிரடிப்படையினர் அணியும் சீருடை, இறப்பர் முத்திரை என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-7)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சிவமணி (சமாதான நீதவான்)

(வர்த்தகர்- மாணிக்கம் பிறதேர்ஸ் மணி மாக்கட் கொழும்பு)



வேலணை மேற்கு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சிவமணி 26.03.2012 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் சந்திரவதனா (நிர்மலா) வின் பாசமிகு கணவரும் விவேக்காவின் அன்புத் தந்தையும் காலம் சென்ற சிவசம்பு மற்றும் கனகம்மா (மண்டைதீவு) ஆகியோரின் மருமகனும் மாசிலாமணி (கனடா- முன்னாள் தலைவர் ப.நோ.கூ. சங்கம், வேலணை), நடனசிகாமணி (வேலணை), நடராஜாமணி (காலி), புஸ்பமாலா (கனடா), பிரபுசிகாமணி (கனடா), கலையரசி (கனடா), மாதினியார் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காஞ்சனமாலா (கனடா), சிவகலை (வெள்ளவத்தை), ஞானசொரூபி, சுப்பிரமணியம் (கனடா), குகாநந்தி (கனடா), ஞானேஸ்வரன் (கனடா), விஜயன் (கனடா) மற்றும் மணி, மலர், தவநாயகி, உதயன், மோகன், உசா, கண்ணன், ஆனந்தி, பாலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

30.03.2012 வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் கிரியை ஆரம்பமாகி பின்னர் 12.00 மணிக்கு வேலணை 6 ஆம் வட்டாரத்தில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் பி.ப. 3.00 மணிக்கு வேலணை அம்பலவி இந்து மயானத்தில் தகன கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

"கனகாபுரி"
6-ம் வட்டாரம், மண்டைதீவு. (ஊ) தகவல்: சி. சந்திரவதனா (மனைவி)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 84



நேசநாடுகளின் சுவரொட்டி

**சிசிலி படையிறக்கு நடவடிக்கை (1943 ஜீலை 10- ஆகஷ்ட் 17)**

1943 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் இரண்டாம் பகுதியில் காசாபிளான்காவில் நடைபெற்ற அமெரிக்க, பிரிட்டிஷ் பிரதிநிதி களின் கூட்டத்தில், மேற்கு ஐரோப்பாவில் இரண்டாவது போர் முனையைத் தொடங்குவதை 1944 ஆம் ஆண்டிற்கு மீண்டும் ஒத்திப்போடுவது என்றும் 1943 கோடையில் சிசிலி படையிறக்கு நடவடிக்கையை மேற்கொண்டு, பின்னால் நேசநாட்டுத் துருப்புகள் நேரடியாக இத்தாலியப் பரப்பிற்குள் நுழைவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

நடவடிக்கையின் ஆரம்பத்தில் சிசிலியில் இரண்டு ஜேர்மனிய டிவிசன்களும் 6-வது இத்தாலியப் படையைச் சேர்ந்த 9 இத்தாலிய டிவிசன்களும் இருந்தன. மொத்தமாக இவற்றில் 2இலட்சத்து 55 ஆயிரம் பேர் இருந்தனர், இதுதவிர சிசிலி விமானத் தளங்களில் 600 விமானங்கள் நின்றுகொண்டிருந்தன. இவற்றில் இரண்டு இத்தாலிய டிவிசன்கள் பரவலான போர் முனையில்- தென்கரையோரமாக 250 கி.மீ. நீளத்திற்கு- தற்காப்பு நிலையில் இருந்தன. இந்த இடத்தில் தான், கடல் இறக்குப்படையை இறக்க நேசநாடுகளின் படைத் தலைமை முடிவுசெய்தது.

தீவிலிருந்த இறக்குப்படை எதிர்ப்பு, தற்காப்பு, பலவீனமாயிருந்தது. மிகமுக்கிய துறைமுகங்களுக்கான வாயில்களைப் பாதுகாத்த கரையோர பேட்டரிகள்தான் இதன் அடிப்படையாக விளங்கின. இத்தாலிய கடற்படைச் சக்திகள் தீவின் தற்காப்பில் பங்கேற்கவில்லை.


சிசிலியின் பிரஜைகள் இடம்பெயர்கின்றனர்.

சிசிலியைக் கைப்பற்றுவதற்காக நேசநாடுகளின் படைத்தலைமை 15-வது படைத்தொகுதியை ஒதுக்கியது. 7-வது அமெரிக்க, 8-வது பிரிட்டிஷ் படைகளை உள்ளடக்கியிருந்த, இதில் 4 இலட்சத்து 78 ஆயிரம் ஆட்கள் உடைய 13 பலப்படுத்தப்பட்ட டிவிசன்களும் 4000க்கும் மேற்பட்ட போர்விமானங்களும் 900 போக்குவரத்து விமானங்களும் இருந்தன. இறக்குப்படை நடவடிக்கை கடற்படையின் பெரும் சக்திகளால்-6 பெரிய போர்க் கப்பல்கள், 26 குரூசர்கள், 100க்கும் மேற்பட்ட நாசகாரிக் கப்பல்கள் உட்பட 1380 போர்க் கப்பல்கள் மற்றும் சரக்குக் கப்பல்கள் 1800க்கும் கூடுதலான தரையிறக்கு சாதனங்கள்- நடத்தப்பட்டது.

எனவே, நேசநாட்டுத் துருப்புகள் எதிரியை பலத்தில் கணிசமான அளவு விஞ்சியிருந்தன. சிசிலி ஒரு வெற்றுக் கோட்டையாக இருந்தது. அங்கே தற்காப்பு மோசமாக அமைக்கப்பட்டிருந்ததும் போதுமான அளவு ஆழ

பிஷேர்ட் துறைமுகத்தில் சிசிலியை ஆக்கிரமிக்கும் நேசப் படைகளின் தரையிறக்கம்



மின்றி இதன் படைவரிசைகள் அமைந்திருந்தும் இதற்கான காரணங்களில் ஒன்றாகும். முக்கியகுறை என்னவெனில் இத்தாலியர்களின் தாழ்வான ஆன்மீக பலமாகும்... அவர்கள் நாட்டின் இராணுவ நிலையை நம்பிக்கையற்றதாகக் கருதினர், பிரிட்டிஷ்- அமெரிக்க துருப்புகள் நாட்டை யுத்த நிலையிலிருந்து விடுவித்து வெறுப்புக்குகந்த ஜேர்மனியர்களை இத்தாலியிலிருந்து வெளியேற்றும் என்ற நம்பிக்கையில் இவை இத்தாலியினுள் நுழைவதைக்கூட வரவேற்றனர் என்று பின்னால் அமெரிக்க ஆசிரியர்கள் நிமிட்சும், போட்டரும் எழுதினார்கள்.

சிசிலியைக் கைப்பற்றி கண்டப் பரப்பிலுள்ள இத்தாலியினுள் நுழைவதற்கான தாக்குமுனையை ஏற்படுத்து வதுதான் நடவடிக்கையின் நோக்கமாக இருந்தது. இதன்படி சிசிலியின் தென்கிழக்குக் கரையில் கடல் மற்றும் வான் இறக்குப் படையினரை இறக்கவும் பின் முனைப்போடு வடக்கு நோக்கி முன்னேறி மெஸ்ஸினா துறைமுகத்தைக் கைப்பற்றவும் எதிரி துருப்புகளை அப்பெனீன் தீபகற்பத்திலிருந்து துண்டித்து அவற்றை ஒழிக்கவும் திட்டமிடப்பட்டது.

நேசநாட்டுத் துருப்புகளுக்கு பின்வரும் கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டன. 7-வது அமெரிக்கப்படை

# யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை

ஜேலா, லிக்கடா, ஸ்கோக்மெட்டி பிரதேசங்களில் போர்முனையின் 115-வது கி.மீ. இல் இறங்கவேண்டும். 8-வது பிரிட்டிஷ் படைக்கு சிரகூஸிக்குத் தெற்கே போர்முனையின் 70-வது கி.மீ. இல் இறங்குமாறு கட்டளையிடப்பட்டது. ஜேலா பிரதேசத்தில் 82-வது அமெரிக்க வான் இறக்குப்படை டிவிசனைக் கொண்டும் சிரகூஸி பிரதேசத்தில் முதலாவது பிரிட்டிஷ் வான் இறக்குப் படை டிவிசனைக் கொண்டும் படையிறக்கத்திற்கான பிரதேசத்தில் பக்கவாட்டுப் பகுதிகளுக்கு வகை செய்யும் கடமை வான் இறக்குப்படை டிவிசன்களுக்கு அளிக்கப்பட்டது.

நேசநாட்டினரின் கடற்படை இரண்டு யூனிட்டுக்களாக- அமெரிக்க துருப்புகளை இறக்க வகை செய்வதற்காக மேற்கு யூனிட்டாகவும் பிரிட்டிஷ் துருப்புகளின் இறக்கத்திற்காக கிழக்கு யூனிட்டாகவும்- உருவமைக்கப்பட்டது.

மத்தியதரைக் கடலில் நேசநாட்டு இராணுவங்களின் பொதுத் தலைமை ஜெனரல் ஐசன்ஹோவர் கையிலிருந்தது. தரைப்படைக்கு ஜெனரல் அலெக்சாந்தரும் வான் படைகளுக்கு பிரதான விமானப்படை மார்ஷல் தேட்டரும் கடற்படைகளுக்கு கடற்படை அட்மிரல் கேனிங்கமும் இவரது துணைவர்களாக இருந்தனர்.


பிரிட்டிஷ் ஜெனரல் அலெக்சாந்தர்

படையிறக்கு நடவடிக்கைக்கான தயாரிப்புகள் 1943 ஜனவரி முதல் ஜூலை வரை 6 மாதங்களுக்கு வட ஆபிரிக்கத் துறைமுகங்களில்

நடை பெற்றன. 7-வது அமெரிக்கப் படையின் பிரிவுகள் ஒரான், அல்ஜீரியா, பிஸேர்டா ஆகிய துறைமுகங்களிலும் 8-வது பிரிட்டிஷ் படையின் பிரிவுகள் பென்காசி, அலெக்சாந்திரியா, போர்ட்- சயீத், ஹாய்பா, பெய்ருட் ஆகிய துறைமுகங்களிலும் இறக்கப்பட்டன.

தயார்ப்படுத்திக் கொண்டிருந்த நடவடிக்கையை இரகசியமாக வைத்திருக்க நேசநாடுகள் முயன்றன. இத்தாலிய- ஜேர்மனியபடைத் தலைமைக்குத் தவறான விவரத்தை அளிப்பதற்காக படையிறக்கு நடவடிக் கைக்கான தயாரிப்பு சர்டினியா தீவில் நுழையும் போர்வையின் கீழ் நடைபெற்றது. பாசிச ஜேர்மனியப் படைத் தலைமையைக் குழப்புவதற்காக 1943 ஏப்ரல் 30 ஆம் திகதி ஸ்பெயின் அருகே கடலில் பிணம் ஒன்று வீசப்பட்டது. இப்பிணத்தின் வசம் பிரிட்டிஷ் கடற்படை அதிகாரி மேஜர் மார்டினின் அத்தாட்சிப்பத்திரங்கள் இருந்தன. இந்த அதிகாரி ஏதோ முக்கியக் கடிதங்கள் அடங்கிய கைப்பையுடன் பிரிட்டிஷ் தீவுகளிலிருந்து வட ஆபிரிக்கா சென்றது மாதிரி ஜோடிக்கப் பட்டிருந்

> இந்தக் காகிதங்களில் பிரிட்டிஷ்- அமெரிக்கத் துருப்புகள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கையின் மாதிரிகள் குறிப்பிடப்பட்டிருந்தன. மத்திய தரைக்கடலின் கிழக்குப் பகுதியில் பெலோபோனேஸ் கரையோரத்தில் இரண்டு பிரதேசங்களில் இறக்குதல்; மேற்குப்பகுதியில், சிசிலி திசையில் கவனத்தைத் திருப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு, சர்டினியாவில் உள்ள எதிரி துருப்புகளின் மீது பிரதான தாக்குதலைத் தொடுப்பது என்று திட்டமிடப் பட்டிருப்பதாகத் தெரியும்படி செய்யப்பட்டது.

(தொடரும்)

# யாழ்.மண்ணில் சைவமும் தமிழும் வளர்த்த சான்றோர்கள்

**ஆக்கம் :- மூ.சிவலிங்கம்**
**வெளியீடு:- இணுவில் சைவத் திருநெறிக் கழகம்**
**விலை ரூபா 300**

யாழ்.மண் சைவத்தமிழ்ச் சான்றோர்களால் செழிப்படையும் புண்ணிய பூமி. யாழ்ப்பாண அரச வம்சத்தவர் காலத்தில் இருந்து இன்று வரை இந்தப் பாரம்பரியம் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

வரலாறு பற்றிய பிரக்ஞை எம் சமூகத்தவரிடையே போதியளவில் இருந்தததாகக் கருதமுடியாது. ஈழவரின் வரலாறு பற்றிய தடயங்களை யாழ்ப்பாண மன்னர் காலத்தின் பின்னரே தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது. கிறிஸ்தவரின் வருகையின் பின்னர் மிசனறிகள் வழங்கிய கல்வி முறைமையால் வரலாறு பற்றிய அருட்டுணர்வு வலுப்பெற்றது. எனவே, எம் முன்னவரின் வரலாறு பற்றிய தேட்டங்களை தேடும் முயற்சி இன்றும் தொடர்கிறது.

ஈழத்தவர் வரலாற்றில் சமயத்திற்காகவும் மொழிக்காகவும் உழைத்த சான்றோரைப் பதிவு செய்யும் முயற்சி உன்னதமானது. இந்த வரிசையின் தொடக்க நூலாக சைமன் காசிச்செட்டியின் தமிழ் புளூட்டாக் (Tamil Plutarch) என்ற நூல் அமைந்திருக்கிறது.

இந்நூலில் தமிழுக்காக உழைத்த 202 புலவர்கள் பற்றிய விபரம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் இத்துறை சார்ந்த பல நூல்கள் எழுந்தன. சைவமும் தமிழும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க வியலாதவாறு இணைந்திருப்பதால் தனித்துச் சைவம் சார்ந்து பணியாற்றியவர்களை இனங்காண்பது அறிவுடைமையாகாது.

வரலாற்றில் தம்மைப் பதிவு செய்தவர்களுடைய பணிகளை நோக்கும் போது அவை ஒரு வகைப்




போராட்டமாகவே தென்படுகின்றது. பல்லவர்கால நாயன்மார்கள் சமண ஆதிக்கத்திற்கு எதிராகவும் சமூக அநீதிகளுக்கு எதிராகவும் போரிட்டனர். இப்போர் பக்தி இயக்கத்தின் பெயரால் இடம்பெற்றது. ஆறுமுகநாவலருடைய போராட்டத்தையும் இத்தகைய பகைப்புலத்தில் வைத்தே நோக்க முடிகின்றது. இவர்கள் ஒருவகையில் அறவழிப் போராளிகள். இன்றும் தீமையைக் கடிந்து நன்மைக்காகக் குரல் கொடுக்கும் சான்றோர் நம் மத்தியில் உள்ளனர்.

அந்த வகையில் அமைந்தது தான் இந்நூலாகும். இது மாணவர்களுக்கான தகவல் களஞ்சியமாகச் சமைக்கப்பட்டுள்ளது.

இருபத்தொரு ஆளுமைகள் பற்றிய விபரங்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. மதிப்பிற்கினிய மூ.சிவலிங்கம் தான் தேடிய விடயங்களை மாணவர்களுக்குப் பயன்படும் நோக்கில் பதிவு செய்துள்ளார்.

நூலாசிரியர் திரு மூ.சிவலிங்கம் நாடறிய ஆன்மீக எழுத்தாளர். தான் பிறந்த இணுவிற்பதிமீது ஆராக் காதலுடையவர். கிராம அலுவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1997 இல் இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலையை நிறுவி 2003 ஆம்

## நூல் நயப்புரை

ஆண்டு தொடக்கம் நற்றமிழ் நூல்களை வெளியிட்டு வருகின்றார்.

அறநெறிக் களஞ்சியம், சீரிணுவைத் திருவூர், திருமுறைத் தோத்திரப் பாடல்கள், இறையருட் செல்வர்கள், கழகத்தின் பத்தாம் ஆண்டு மலர், மழலைச் செல்வங்கள், ஈழத்துச் சக்தியின் அற்புதங்கள், தேவி பகவதக் கதைகள் என்ற வரிசையில் ஒன்பதாவது நூலாக இந்நூல் வெளியிடப்படுகின்றது .

இந்நூல் வெளியீடுகளுக்குத் தேவையான ஆலோசனைகளை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனிடம் பெற்று வருகின்றார்.

மனம் வாடித்துன்பம் மிக உழன்று பிறர் வாடப் பல செயல்கள் செய்து களிப்புறும் வேடிக்கை மனிதர் மத்தியில் இவர் வித்தியாசமானவர். அடக்கமாகக் கண்ணியமாகத் தன் சமயத் தமிழ்ப் பணிகளை சிறப்புற முன்னெடுத்த வண்ணம் உள்ளார்.

ஈழத்தில் சைவம் தமிழ் சார்ந்த வகையில் தமது இருப்பை நிலை நிறுத்தும் கிராமங்களுள் இணுவில் திருவூர் முதன்மையானது. இத்திருவூரின் சிறப்புக்குக் கட்டியம் கூறும் வகையில் செயற்படுகின்ற சைவத் திருநெறிக் கழக வெளியீடாக இந்நூல் அமைந்திருப்பதும் சிறப்பே.

நூலில் எழுத்தாளப்பட்டுள்ள ஆளுமைகள் தொடர்பாக ஒரு பொதுவான சட்டகத்தை நூலாசிரியர் கையாண்டிருக்கிறார்.

வேண்டிய விடத்து இலக்கண இலக்கிய நூல்களில் இருந்து மேற்கோள்களைக் கையாண்டுள்ளார் என்பதுடன் சான்றோர் வாழ்ந்த வழி பற்றிய பதிவுகள் இளஞ்சந்ததியினரின் மனத்திலும் அவ்வழியைப் பற்று வதற்கான ஒளியாக அமைகின்றது.

இந்நிலையில் மாணவர்கள் மாத்திர மின்றி யாவரும் போற்றிப் பயன் பெறவேண்டிய நூலாக இந்நூல் விளங்குகின்றது.

**ச.லலீசன்**
**விரிவுரையாளர்**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**

# பேருந்து விரைவாய் வாராதோ எம்மை ஏற்றிச் செல்லாதோ?

## காத்திருக்கும் அரச ஊழியர்கள்

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் நிறைவடைகின்ற போதி லும் வன்னிப்பிரதேசத்தில் பொதுப் போக்கு வரத்து சேவைகள் இன்னும் சீராகவில்லை என அரச ஊழியர்களும் பொதுமக்களும் தெரிவிக்கின்றனர். குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த நிலைமை மோசமாக இருப்பதாக தெரிவிக்கப் படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தை ஊடறுத்து நோக்கி செல்கின்ற ஏ 9 நெடுஞ்சாலையில் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பு, கண்டி உட் பட தென் பகுதி மாவட்டங்களுக்கும் இடையில் பல பேருந்துகள் நீண்ட தூர சேவையில் ஈடுபடுகின்றன.

ஆயினும் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்கு கரையோர பகுதிகளுக்கும் அதேபோன்று கிளிநொச்சி யில் இருந்து மேற்கு கரையோர பிரதேச ங்களுக்குமான பேருந்து சேவைகள் மிகவும் குறைவாக இருப்பதாக தெரிவிக்கப்படுகி ன்றது. கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் சென்று சங்குப்பிட்டி பாலம் ஊடாக பூநகரி வந்தடைய வேண்டியிருப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளில் யாழ். குடாநாட்டை சேர்ந்தவர்களே பெரும் எண்ணிக்கையில் கடமையில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

இவர்கள் தினசரி வீடுகளில் இருந்து வேலைத் தளங்களுக்குச் சென்று வருவதற்கு பேருந்து சேவைகளிலேயே தங்கியிருக்கின்றார்கள். எனினும் போக்குவரத்து சேவைகள் சீராக இல்லாத காரணத்தினால் அவர்கள் பெரும் சிரமங்களுக்க உள்ளாக நேரிட்டிருப்பதாகவும் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சியின் பல பகுதிகளுக்கும் வருபவர்களின் துயரங்கள் ஒருபக்கம் இருக்க கிளிநொச்சி நகரப் பகுதியில் இருந்து குறுகிய தொலைவில் அந்த மாவட்டத்தின் மேற்குப் பிரதேசமாகிய பூநகரிக்கு கடமைக்காகச் செல் பவர்களுக்கு உரிய பேருந்து சேவை நடைபெறவில்லை எனக் கூறுகின்றார்கள்.

கிளிநொச்சி பிரதேச போக்குவரத்து நிலைமைகள் குறித்து கருத்த வெளியிட்ட இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய பிரதம முகாமையாளர் கணேசபிள்ளை கிளிநொச்சி போக்குவரத்து சாலைக்கு ஏற்கனவே பயன் படுத்தப்பட்டு திருத்தியமைக்கப்பட்ட பேருந்துகளே வழங்கப்பட்டதாகவும் ஏனைய வசதிகளும் அந்த சாலைக்கு செய்து கொடுக்கப்பட வில்லை என்றும் கூறினார்.

அடிக்கடி பழுதாகின்ற பேருந்துகளை திருத்துவதற்கான உதிரிப்பாகங்களோ பழுது பார்க்கும் இட வசதிகளோ இல்லை. இதற்கென அரசினால் நிதியொதுக்கப்பட்டுள்ள போதிலும் அந்த நிதி இன்னும் வந்து சேரவில்லை என்றும் வடபிராந்திய பிரதம முகாமையாளர் தெரிவித்தார். எனினும் அடுத்த மாதமளவில் வட பகுதிக்கு புதிய பேருந்துகள் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

(அ-7)

# வீதி விபத்துக்கள் குறைவடைந்தன

(கொழும்பு)


கடந்த மூன்று மாத காலப்பகுதியினுள் வீதி விபத்துக்கள் குறைவடைந்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மூன்று மாத காலப்பகுதிக்கு முன்னர் நாளாந்தம் ஆறு வீதி விபத்துக்கள் பதிவாவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அந்த எண்ணிக்கையானது தற்சமயம் நான்காக குறைவடைந்துள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார்.

(அ-2)





யாழ்ப்பாணம் தேசிய கல்வியிபற் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பீடாதிபதி உள்ளிட்ட விருந்தினர்கள் மாலை அணிவித்து வரவழைந்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வியமைச்சின் தமிழ்ப் பாடசாலை அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் எஸ்.முரளிதரன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.




# வலையில் சிக்காத வயதான சிங்கம்

ஆங்கிலேயர்களுக்கெதிராக தன்மானமிக்க இந்தியர்கள் கிளர்ந்தெழுந்த காலம் அது. 1857 ஆம் ஆண்டு அந்நியர்களை எதிர்த்து ஆங்காங்கே பெருமளவில் கலவரங்கள் மூண்டன. இரும்புக்கரம் கொண்டு அனைத்துக் கலகங்களையும் முறியடிக்க முயன்ற ஆங்கிலேயர்களால் ஒரேயொரு வயதான சிங்கத்தை மட்டும் பிடிக்க இயலவில்லை. அந்தச் சிங்கத்தைப் பற்றி ஒரு நாட்டுப்புறப் பாடல் இவ்வாறு சித்திரிக்கிறது.



தாடி நரைத்து உடல் தளர்ந்து ஆண் சிங்கம் ஆனாலும் இளஞ் சிங்கங்கள் அதற்கோர் இணையாகாது! அத்தகைய வீரமிகுந்த சிங்கமாக வர்ணிக்கப்படுபவர் பீஹார் மாநிலத்து ஜகதீஷ் பூரை ஆண்ட ராஜா குன்வர்சிங்.

உஜ்ஜயினியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட விக்கிரமாதித்தனின் வம்சத்தில் உதித்தவர் என்று அவரைப் பற்றி கூறுவதுண்டு. சிறு வயதிலியே தன் நண்பர்களுடன் காடுகளில் விளையாடிக் காலம் கழித்தவர். வாலிபனான பின்பும் பகைவர்களை எதிர்பாராது தாக்கி விட்டு ஓடும் கொரில்லா போர் முறையைத்தான் காடுகளில் பயிற்சி செய்து வந்தார்.

## அம்புலி மாமா கதைகள்

இந்தியாவில் வர்த்தகம் புரிய வந்த கிழக்கிந்திய கம்பனி சிறிது சிறிதாக ஆட்சியைக் கைப்பற்ற முயன்றது. அந்தக் காலத்தில் இந்திய மன்னர்களிடையே நிலவி வந்த ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி பிரித்தாலும் சூழ்ச்சியின் மூலம் ஒவ்வொரு இராச்சியமாக ஆங்கிலேயர்கள் கைப்பற்றினர். அவர்கள் குன்வர்சிங் ஆண்ட ஜகதீஷ் பூரையும் விட்டு வைக்கவில்லை. ஆங்கிலேயர்கள் வெள்ளம் போன்ற படையைத் தன்னால் எதிர்கொள்ள முடியாது என்று உணர்ந்த குன்வர்சிங் தன்னுடைய வீரர்களுடன காடுகளில் தஞ்சம் புகுந்தார்.

அங்கிருந்தவாறே ஆங்கிலேயர்களுக்கு இடையறாத தொல்லை கொடுத்து வந்தார். ஒருநாள் ஆங்கிலேயர்கள் லக்னோவை கைப்பற்றும் நோக்கத்துடன் ஔத் பகுதி வழியே படையுடன் சென்று கொண்டிருந்த தகவல் குன்வர்சிங்கின் செவிகளை எட்டியது. அவ்வாறு செல்லும் வழியிலேயே அவர்களை எதிர்த்துப் போராட எண்ணிய அவர் திடீரென்று செல்லும் வழியில் எதிர்பாராமல் தாக்கினார். அவரது தாக்குதலால் ஆங்கிலேயர்கள் மிகவும் தடுமாறிப் போயினர். அவர்களுடைய படையில் அவ்வப்போது பலத்த சேதம் உண்டாக அவர்களால் லக்னோ நோக்கிச் செல்ல முடியவில்லை. அதனால் தங்கள் திட்டத்தை மாற்றிக் கொண்டு ஆங்கிலேயப் படை அசீம்கர் எனும் இடத்திலேயே நின்றுவிட்டன.

தங்களுடைய திட்டத்திற்குப் பெரும் இடையூறு விளைவித்த குன்வர்சிங்கை முதலில் சிறைபிடிக்க விரும்பிய ஆங்கிலேயர்கள் அதற்கான வழிகளில் கவனம் செலுத்தினர். அப்போது ஆங்கிலேயர்களின் கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு கானிங் பெருங்கவலையில் ஆழ்ந்தார். 'இந்தியன் மியூடினி' எனும் சரித்திர நூலை இயற்றிய மல்லிகன் என்பவர் இதைப்பற்றி,"குன்வர்சிங்கின் நெஞ்சுறுதி, வலிமை, தந்திரமான போர் முறைகள் ஆகியவை கவர்னர் ஜெனரலை சிந்திக்க வைத்தன. ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு குன்வர்சிங் முட்டுக் கட்டையாக இருப்பார் என்பதை அவர் நன்கு உணர்ந்தார்" என்று குறிப்பிடுகிறார். அவரை ஒடுக்கினாலேயொழிய நிம்மதியில்லை என்று உணர்ந்த லார்டு கானிங் லார்டு மார்க்கெர் என்பவரின் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பி குன்வர்சிங்கை சிறைபிடிக்கக் கட்டளையிட்டார்.

அசீம்கரிலுள்ள ஆங்கிலேயப் படைகளுக்குத் துணையாகவும் அதே சமயத்தில் தன்னைப்பிடிப்பதே பிரதான நோக்கமாகவும் கொண்டு ஒரு பெரும் படையைத் தடுத்து நிறுத்த நினைத்தார். பெரும் பீரங்கிப் படைகளுடன் வந்ததும் கெர் தலைமையிலான ஆங்கிலேய வீரர்களினால் குன்வர்சிங்கை எதிர்த்துப் போராட இயலவில்லை. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல ஆங்கிலேயர்களின் பீரங்கிகளின் முன்னால் குன்வர்சிங்கின் பலம் குன்றியது. கெர் தலைமையிலான ஆங்கிலேயர்கள் அசீம்கருக்குள் நுழைந்து அங்கு ஏற்கனவே இருந்த ஆங்கிலேயப் படையுடன் சேர்ந்து கொண்டனர்.

உடனே குன்வர்சிங் ஆங்கிலேயர்கள் இருந்த சுசீம்கரை முற்றுகையிட்டு அவர்களால் வெளியேற முடியாதபடி செய்து விட்டார். அதே சமயம் அவர்கள் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு ஜகதீஷ்பூர் சென்றடையவும் ஒரு திட்டம் தீட்டினார். அசீம்கரிலிருந்து வெளியேற தானு என்ற நதியின் பாலத்தை கடந்து வர வேண்டும். அதன் வழியே வெளியேற முயன்ற பகைவர்களை குன்வர்சிங்கின் வீரர்கள் தடுத்து நிறுத்தினர்.

திடீரென ஒருநாள் பாலத்தைக் கடக்க முயன்ற ஆங்கிலேயர்களைத் தடுக்க குன்வர்சிங்கின் வீரர்கள் யாருமில்லை. இனி அதன் வழியே சென்று குன்வர்சிங்கைப் பிடித்து விடலாம் என்று மனக்கோட்டை கட்டிய பகைவர்கள் ஏமாந்து போயினர். குன்வர்சிங் தன் வீரர்களுடன் காஜிப்பூர் வழியாக ஜகதீஷ்பூரை நோக்கிச் சென்று கொண்டிருந்தது தெரியவந்தது. அங்கிருந்து தப்பி ஓடும் குன்வர்சிங்கை பிடிக்க டக்ளஸ் என்பவர் தலைமையில் ஒரு பெரும் படை விரைந்தது.

சில நாட்களிலேயே குன்வர்சிங்கின் வீரர்களை ஆங்கிலேயர்கள் நெருங்கி விட மீண்டும் அவர்களிடையே பயங்கர போர் மூண்டது. போரில் குன்வர்சிங்கின் படைக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது. ஆனால் குன்வர்சிங் மனம் தளரவில்லை. தனது படையைப் பல சிறு அணிகளாகப் பிரித்து வெவ்வேறு திசைகளில் தப்பிச் சென்று மீண்டும் குறிப்பிட்ட இடங்களில் ஒன்று சேர்ந்தனர்.

அவர்கள் எந்த வழியில் தப்பிச் செல்கின்றனர். எங்கே மீண்டும் சந்திக்கின்றனர் என்பதெல்லாம் புரியாமல் ஆங்கிலேயர்கள் குழம்பினர். கடைசியில் குன்வர்சிங்கை நதியை நோக்கி செல்வதை அறிந்த ஆங்கிலேயர்களின் படை அவர்களைப் பின் தொடர்ந்து சென்றது.



தந்திரம் மிக்க குன்வர்சிங் தன் திட்டத்தை மாற்றிக் கொண்டார். கங்கை நதிக்கரையில் எண்ணிக்கையில் மிக அதிகமான ஆங்கிலேயர்களின் படையை நேருக்கு நேர் எதிர்த்துப் போரிட முடியாது என்று உணர்ந்தார்.

குன்வர்சிங் படகு களின் மூலம் கங்கையை கடக்காமல் யானைகளில் ஏறி பாலிலா என்ற ஒரு இடத்தில் கங்கையை கடக்கத் திட்டமிட்டுள்ளார் என்ற தகவல் ஆங்கிலேயர்களுக்கு தெரிந்தது.

உடனே அந்த இடத்தில் ஆங்கிலேயப் படை குவிந்தது. ஆனால் வெகுநேரம் காத்திருந்தும் குன்வர்சிங் அங்கே வரவேயில்லை. பின்புதான் குன்வர்சிங் தவறான வதந்தியைப் பரப்பியுள்ளார் என்றும் சிவபுரி என்ற இடத்தில் ஏற்கனவே படகுகளின் மூலம் கங்கையை கடந்து கொண்டிருக்கிறார் என்றும் தெரியவந்தது. உடனே ஆங்கிலேயர்கள் அந்த இடத்திற்கு விரைந்தனர்.ஆனால் அதற்குள் குன்வர் சிங்கின் வீரர்களில் பெரும்பாலானோர் கங்கையை கடந்து விட்டனர் என்று தெரிந்தது. ஆத்திரமடைந்த ஆங்கிலேயர்கள் பீரங்கிகளை இயக்கிப் படகுகளில் சென்று கொண்டு இருந்தவர்கள் மீது குண்டுமாரிப் பொழிந்தனர்.

துர்ப்பாக்கியவசமாக குன்வர்சிங்கின் மணிக்கட்டில் ஒரு குண்டு பட அவர் மணிக்கட்டு எலும்பு உடைந்து சுக்கு நூறாகியது. அவர் தப்பிச் சென்று ஜகதீஷ்பூரை அடைவதற்குள் காயம் ரணமாகி ஆபத்து ஏற்படும் என்று உணர்ந்த அவர் சற்றும் தயங்காமல் தனது வாளினால் காயம் பட்டதன் கையை தானே வெட்டி விட்டார். ஒருவாறாக குன்வர்சிங் பகைவர்களிடமிருந்து தப்பி தனது சொந்த இராச்சியமான ஜகதீஷ்பூரை அடைந்தார்.

கோபத்தில் கொதித்தெழுந்த பகைவர்கள் ஜகதீஷ்பூரை அடைந்து குன்வர் சிங்கின் வீரர்களோடு பயங்கரமாக போர் நிகழ்த்தினர். ஆனால் அவர்களினால் குன்வர் சிங்கை ஒன்றும் செய்ய முடியவில்லை. போரில் தோல்வியுற்ற ஆங்கிலேயர்கள் ஜகதீஷ்பூரை கைப்பற்றும் திட்டத்தை கைவிட்டனர். மீண்டும் அங்கு குன்வர்சிங் மன்னர் ஆனார். ஆனால் அதற்குப் பின்பு அதிக ஆண்டுகள் அவர் உயிருடன் இல்லை. குன்வர்சிங் இறந்த பின்பு அவருடைய சகோதரர் அமர்சிங் பதவியேற்றார். ஆனால் இறுதியில் ஜகதீஷ்பூரை ஆங்கிலேயர்கள் கைப்பற்ற அமர்சிங் தப்பியோடினார். அதன் பின்பு அவர் என்ன ஆனார் என்பது இன்று வரை மர்மமாக உள்ளது.



சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் வலி. தெற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வருவதையும் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், யாழ்.மவாட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# ஆணைக்குழு அறிக்கையை அமுல்படுத்த பூரண ஆதரவு அளிக்கப்படும்- திஸ்ஸ

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்திற்கு பூரணமான ஆதரவளிக்கப்படும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை மற்றும் அதன் முன் மொழிவுகள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி ஒரே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது.

எனினும் ஆளும் கட்சி மாறுபட்ட நிலைப்பாடுகளை காலத்திற்கு காலம் அறிவித்து வருகின்றது. ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் நேரடியாகவே நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை மற்றும் முன்மொழிவுகளை விமர்சனம் செய்கின்றனர். நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை முழுமையாக அமுல்படுத்தப்படமாட்டாது என அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் ஆணைக்குழு அறிக்கை வெளியிட்ட காலப்பகுதியில் அதன் மொழிவுகளை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பாராட்டி வந்ததாக திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார் (அ-2)

# ஜெனீவாவில் ஆதரவளித்த நாடுகளுக்கு நன்றிக்கடிதம் அனுப்புகிறார் பீரிஸ்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கெதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்த மற்றும் நடுநிலை வகித்த நாடுகளுக்கு நன்றி தெரிவித்து வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கடிதங்களை அனுப்பியுள்ளார். ஆனால் இந்தியாவுக்கு அவர் எந்த நன்றியையும் தெரிவிக்கவில்லை.

ஜெனீவாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்து இலங்கைக்கு ஆதரவாக நின்ற பங்களாதேஷ், சீனா, ரஷ்ய உள்ளிட்ட 15 நாடுகளுக்கும் அமைச்சர் நன்றி தெரிவித்துக் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இந்தியா எதிர்ப்பு தெரிவித்த பின்னர் தீர்மானத்தைத் தோற்கடித்து இலங்கையைக் காப்பாற்றும் முயற்சியில் சீன வெளிவிவகார அமைச்சர் யங்ஜீச்சி முக்கிய பங்கு வகித்ததாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

அணிசேரா நாடுகள் அமைப்புக்குத் தலைமை தாங்கும் எகிப்து வெளிவிவகார அமைச்சர். இஸ்லாமிய நாடுகள் அமைப்பின் இணைப்புச் செயலராக உள்ள பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஹினாரப்பானி கர் ஆகியோருக்கும் கியூபா, ரஷ்யா, சவுதி அரேபியா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கும் பீரிஸ் நன்றி தெரிவித்துள்ளார்.

எனினும் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தில் இருந்த கடுமையைக் குறைக்கும் திருத்தத்தை முன்வைத்த இந்தியாவுக்கு நன்றி தெரிவித்து இலங்கை கடிதம் அனுப்பவில்லை.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரி, இறுதி நேரத்தில் இந்தியா கொண்டு வந்த திருத்தத்தினால் இலங்கை மீதான அழுத்தம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தியாவின் திருத்தத்தை மதிக்கிறோம்.

இதன்மூலம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று இருந்த வாசகம் இலங்கை அரசின் விருப்பத்துடன் என்று மாற்றப்பட்டுள்ளது.

எனினும் விடுதலைப் புலிகளைத்தோற்கடிக்கும்போது பின்புலமாக இருந்து உதவிய இந்தியா முக்கியமான தருணத்தில் இலங்கையைக்கைவிட்டு விட்டதென தெரிவித்துள்ளார். தீர்மானத்தில் திருத்தங்கள் மேற்கொண்டு இந்தியா உதவியதற்கு இலங்கை இதுவரை நன்றி தெரிவித்து எந்தக் கடிதத்தையும் அனுப்பவில்லை.

அதேவேளை தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தது ஏன் என்று விளக்கமளித்து இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் இலங்கை ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். இதற்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதில் அனுப்பவில்லை. (அ-2)

# சட்டவிரோத வைத்தியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

சட்டவிரோதமாக மேற்கத்தேய வைத்திய முறையில் ஈடுபட்டுள்ள வைத்தியர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய ஔடதங்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

மேற்கத்தேய வைத்திய முறையில் ஈடுபடும் 40 ஆயிரம் சட்டவிரோத வைத்தியர்கள் உள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் முறைப்பாடு செய்துள்ளதாக அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த பௌரகம தெரிவித்தார்.

இத்தகைய வைத்தியர்களால் நோயாளர்களுக்கு பாரியளவிலான பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் பணிப்பாளர் நாயகம் சுட்டிக் காட்டினார்.

இதேவேளை ஹிம்புட்டான பிர தேசத்தில் சட்டவிரோத முறையில் இயங்கி வந்த சிகிச்சை நிலையமொன்று நேற்று முன்தினம் சுற்றி வளைக்கப்பட்டதோடு அங்கிருந்த மருந்துப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அங்கு கடமையாற்றிய வைத்தியர்கள் இலங்கை வைத்திய சபையில் பதிவு செய்திருக்கவில்லை என தேசிய ஔடதங்கள் அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

# தவக்காலம் எம்மை சிலுவையில் அறையும் காலம்



இயேசு சிலுவையில் அறையப்பட்டார். ஆனால் அங்கே அறையப்பட்ட நம் பாவங்கள், குற்றங்கள், நோய்கள், நம் அநீதிகள், அநியாயங்கள், ஏழ்மை ,வறுமை துன்பங்கள் இறுதியில் மரணம். இயேசுவில் இவை அனைத்தும் சிலுவையில் அறையப்பட்டதால் நாம் இந்த துன்பங்கள் அனைத்திலிருந்தும் விடுதலை பெற்றோம். பாவ இயல்பும் அதன் விளைவுகளும் இயேசுவின் சிலுவையில் அறையப் பட்டதால் அவைஅனைத்தும் அழிந்து போயின. ஆகவே இன்றும் நாம் இவைகளைச் சிலுவையில் அறையும்போது விடுதலை பெறுகிறோம். புது வாழ்வைப் பெறுகிறோம். பாவத்துக்கு அடிமைகளாய் இராதபடி,நம்முடைய பழைய மனித இயல்பு அவரோடு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. இவ்வாறு பாவத்துக்கு உட்பட்டிருந்த நம் இயல்பு அழிந்து போகும். ஆகவே எங்கள் பாவ வாழ்வை சிலுவையில் அறையவேண்டும். தனிநபர் வாழ்விலும் ,குடும்ப வாழ்விலும் ,சமூக வாழ்விலும் உள்ள இத்தகைய பாவங்களையும் குற்றங்களையும் தீமைகளையும் சிலுவையில் அறையைச் சொன்னால், அன்றிலிருந்து இன்றுவரை மனிதன் இயேசுவையும், நல்லவர்களையும் நீதிநியாயத்தையும்சிலுவையில் அறைகின்றான். ஆலயத்தை சந்தையாக்குகின்றான். இறை தூதர்களை ஏளனம் செய்கிறான் ,இறை வாக்குகளைப் புறக்கணிக்கின்றான். அதன் விளைவு, அன்று அந்த மக்கள் நாடிழந்து, வீடிழந்து அடிமையாக பாபிலோன் சென்றதுபோல இன்றும் நாம் பலவிதமான இன்னல்களுக்கும் இக்கட்டுகளுக்கும் இலக்காகிறோம். இருப்பினும் இரக்கமே வடிவான இறைவன் எழுபது ஆண்டுகளுக்குப் பின் பாரசீக மன்னன் சைரசின் முதல் ஆண்டில் அவனது மனதை தூண்டி எழுப்பி, மீண்டும் எருசலேம் ஆலயத்தைக் கட்டி எழுப்பி.எருசலேம் நகரைப் புதுப்பித்து அம்மக்களுக்கும் புது வாழ்வு அளித்தார். அதுபோல நமக்கும் இந்த நாற்பது நாட்களுக்குப் பின் நல்வாழ்வு கிடைக்க நாம் செய்ய வேண்டியதுசிலவற்றையாகிலும் சிலுவையில் அறைவதுதான். தவக்காலம் சிலுவையில் அறைகின்ற காலம் . அது எமக்கு, எம் குடும்பத்துக்கு, எம் சமுதாயத்துக்கு புது வாழ்வு கொடுக்கும்

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி

# கொழும்பு நாடாளுமன்ற ஆசனம் குறைக்கப்படும்

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்துக்கான நாடாளுமன்ற ஆசனங்களில் ஒன்று குறைக்கப்படவுள்ளதாக இலங்கைத் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

வாக்காளர் பட்டியலில் இரட்டைப்பதிவு வழக்குகள் சீர்செய்யப்பட்டதை அடுத்து கொழும்பு மாவட்ட வாக்காளர் எண்ணிக்கை குறைந்துள்ளதால் ஒரு ஆசனத்தை கொழும்பு மாவட்டம் இழக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட வாக்காளர் பட்டியலில் 62 ஆயிரத்து 700 இரட்டைப் பதிவுகள் இருப்பதை தேர்தல் திணைக்களம் கண்டுபிடித்துள்ளது. இதனால் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதையடுத்து கொழும்பு மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 19 இல் இருந்து 18 ஆக குறையவுள்ளது.

இதேவேளை இலங்கை முழுவதும் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் பேர் இரண்டு இடங்களிலும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர் மூன்று இடங்களிலும் வாக்காளர்களாக பதிவு செய்துள்ளதும் தேர்தல் திணைக்களத்தினால் கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் வெவ்வேறு மாவட்டங்களில் வாக்காளர்களாக பதிவு செய்துள்ளோர் ஏதாவது ஒரு மாவட்டத்தில் தமது பதிவை நீக்குவதற்கு தேர்தல் திணைக்களம் கொடுத்திருந்த காலக்கெடு கடந்த 20 ஆம் திகதி முடிவுக்கு வந்துள்ளது.

இதையடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் வாக்காளராகப் பதிவு செய்துள்ள வாக்காளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக இலங்கை தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணை நாளை

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள மூவரும் தண்டனையை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்த வழக்கு நாளையதினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றவாளியாகக் காணப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரும்சமர்ப்பித்த கருணைமனுவை இந்திய ஜனாதிபதி நிராகரித்திருந்தார்.

இதனை ஆட்சேபித்து குறித்த மூவரும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததுடன் இதன் போது தூக்குத் தண்டனைக்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போது விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய ராஜீவ் காந்தி வழக்கின் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூவரது தண்டனையை இரத்துச் செய்வது தொடர்பான வழக்கு விசாரணையை நாளையதினம் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ-2)

# கால்,கைகளை உடைப்பது குறைந்த தண்டனையே

## மேர்வின் அடாவடி

தன்னைப்பற்றிய வதந்திகளை பரப்புவதன் மூலம் விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்காக தனது பெயரை ஊடகங்கள் பயன்படுத்த விரும்பினால் அப்படி செய்து கொள்ளட்டும் என பொதுமக்கள் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

பண்டைய மன்னர்கள் காலத்தில் வழங்கப்பட்ட தண்டனைகளுடன் ஒப்பிடும்போது கை,கால்களை உடைப்பது குறைந்த தண்டனையாகும் என்பதை நான் கூற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டை காட்டிக் கொடுக்கும் துரோகிகளுக்கு பண்டைய மன்னர்கள் கருணை காட்டவில்லை என சமய வழிபாடுகளில் கலந்து கொள்வதற்காக களனி விகாரைக்கு சென்றிருந்த அமைச்சர் மேர்வின் சில்வா அங்கு செய்தியாளர்களை சந்தித்த போதே இவ்வாறு கூறினார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு எனக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக கேள்விப்பட்டேன் ஆனால் அது தொடர்பாக எனக்கு முறைப்படி அறிவிக்கப்படவில்லை.

ஊடகங்கள் தமது விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்காக பொய்களை பிரசாரப்படுத்துகின்றன. அவர்கள் மேர்வின் சில்வாவை விற்க முடிந்தால் விற்கட்டும்.

வெளிநாட்டவர்களின் டொலர்களில் தங்கியுள்ள எந்த நபரும் சிங்கள சமூகத்தை நாசமாக்குவதற்கான தேவையற்ற வேலைகளை செய்வதற்கு நான் அனுமதிக்கப் போவதில்லை.

ஏனைய அரசாங்கங்கள் பயங்கரவாத இயக்கங்களின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து அவர்களின், கோரிக்கைகளை நிறைவேற்றியபோது இந்நாட்டை பயங்கரவாதத்திலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காப்பாற்றினார் எனவும் அவர் கூறினார். (அ-2)

# ரயில் நிலைய வளாகத்திநுள் விற்பனை நிலையங்கள்

(கொழும்பு)

புகையிரத நிலைய வளாகத்திற்குள் பல்பொருள் விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

சித்திரை புதுவருட பிறப்பிற்கு முன்னர் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக புகையிரத திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்க குறிப்பிட்டார்.

பொதுமக்கள் மற்றும் பயணிகளின் வசதி கருதி குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்யக்கூடிய வகையில் பல்பொருள் விற்பனை நிலையங்களை அமைக்கவுள்ளதாக ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

(அ-2)

# வவுணதீவில் ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டபத்தடி பிரதேசத்தில் ஒரு தொகுதி ஆயுதங்களை நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் லீமா என அழைக்கப்பட்ட முகாம் அமைந்திருந்த இடத்திலிருந்தே இவ் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதில் ஒரு கைக்குண்டு ரி 56 ரக துப்பாக்கித் தோட்டாக்கள், 213 மகசின்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே இவ் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் மேலும் பல ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற வகையில் தேடுதல்கள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பின் பல்வேறு இடங்களிலும் நடத்தப்பட்டு வருகின்ற தேடுதல்களில் விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டு வந்த, மறைத்து வைக்கப்பட்டுள்ள பெருந்தொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 2012.03 29 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1632-கியூபெக் ஆங்கிலேயரிடம் இருந்து பிரெஞ்சுக்களிடம் கைமாறியது.

★ 1792-13 நாட்களின் முன்னால் சுடப்பட்ட சுவீடனின் மூன்றாம் குஸ்தாவ் மன்னன் இறந்தான்.

★ 1807-4 வெஸ்டா என்ற இதுவரை அறிந்தவற்றில் மிக வெளிச்சமான சிறுகோளை ஜேர்மனிய வானியலாளர் ஹைன்ரிக் ஒல்பர்ஸ் கண்டுபிடித்தார்.

★ 1831-துருக்கிக்கு எதிராக பொஸ்னிய எழுச்சி ஆரம்பமானது.

★ 1849-பஞ்சாபை ஐக்கிய இராச்சியம் கைப்பற்றியது.

★ 1857-பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் வங்காள இராணுவத்தைச் சேர்ந்த மங்கல் பாண்டே என்ற சிப்பாய் பிரித்தானிய ஆட்சிக்கெதிராக கிளர்ச்சியை ஆரம்பித்தார். இதுவே பின்னர் இந்திய விடுதலைப் போருக்கு முன்னோடியாக அமைந்தது.

★ 1867-கனடா கூட்டமைப்பை ஜூலை 1 இல் உருவாக்குவதற்கான பிரித்தானிய வட அமெரிக்க சட்டத்தை பிரித்தானியாவின் விக்டோரியா மகாராணி அரச ஒப்புதலை அளித்தார்.

★ 1879-ஆங்கிலோ- சூலு போர்: தென்னாபிரிக்காவில் கம்பூலா என்ற இடத்தில் பிரித்தானியப் படைகள் 20 ஆயிரம் சூலுக்களை வென்றனர்.

★ 1886-ஜோர்ஜியாவின் அட்லாண்டாவில் ஜோன் பெம்பேர்ட்டன் என்பவர் முதல் தொகுதி கொக்கக் கோலா மென்பானத்தைத் தயாரித்தார்.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: வி-1பறக்கும் குண்டு கடைசித் தடவையாக இங்கிலாந்தைத் தாக்கியது.

★ 1971-மை லாய் படுகொலைகள் அமெரிக்காவின் லெப்டினன்ட் வில்லியம் கலி என்பவன் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை பெற்றான்.

★ 1973-வியட்நாம் போர்: அமெரிக்கப் படைகள் தெற்கு வியட்நாமை விட்டு முற்றாக வெளியேறின.

★ 1974-நாசாவின் மரைனர் 10 விண்கலம் புதன் கோளை அண்மித்த முதலாவது விண்கலம் என்ற பெயரைப் பெற்றது.

★ 2004- பல்கேரியா, எஸ்தோனியா, லாத்வியா, லித்துவேனியா, ருமேனியா, சிலவாக்கியா, சிலொவேனியா ஆகியன நேட்டோ அமைப்பில் முழுமையான அங்கத்துவம் பெற்றன.

★ 2004-அயர்லாந்து புகைத்தலை உணவகங்கள் உட்பட எல்லா வேலையிடங்களிலும் தடை செய்த முதல் நாடானது.

★ 2005-யாஹூ! $360^0$ சேவை ஆரம்பிக்கப்பட்டது.

★ 2007-கணிதத்தில் நோபல் பரிசு எனப்படும் நோர்வே நாட்டின் ஏபல் பரிசு தமிழரான சீனிவாச வரதனுக்கு அறிவிக்கப்பட்டது.

★ 2008-பூமி மணித்தியாலம் அனைத்துலக மயப்படுத்தப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1918-சாம் வோல்ற்றன், அமெரிக்க விற்பனை நிறுவனங்களான வோல் மார்ட், சாம்ஸ் கிளப் ஆகியவற்றின் நிறுவனர் (இ.1992)

★ 1927-ஜோன் வேன், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேயர் (இ.2004)

★ 1941-ஜோசப் டெய்லர், இளையவர் நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்


### இறப்புக்கள்

★ 1985-ஜார்ஜ் பீட்டர் மர்டாக் மானிடவியலாளர் (பி.1897)

★ 2000-சி.கே.சரஸ்வதி, தமிழ்த் திரைப்பட நடிகை

### சிறப்பு நாள்

★ தாய்வான் இளைஞர் தினம்



★ 1790- 10 ஆவது அமெரிக்க ஜனாதிபதி ஜோன் டைலர் பிறந்த தினம் (இ.1862)

# அதிசய உலகம்...




## ஒரே விரலில் உடலைத் தாங்கி படைக்கப்பட்ட உலக சாதனை




உடற் பயிற்சிகளின் போது இரு கைகளில் உள்ள விரல்களை பலப்படுத்தும் பொருட்டு உடலின் பாரம் முழுவதையும் விரல்களில் தாங்கி செய்யப்படும் உடற்பயிற்சியை கொண்டு ஒருவர் உலக சாதனை நிகழ்த்தியுள்ளார்.

பத்து விரல்களையும் பயன்படுத்தி குறித்த உடற்பயிற்சியை மேற்கொள்வதே கடினமாக காணப்படும் வேளையில் ஒரே ஒரு விலை பயன்படுத்தி 30 செக்கன்களில் அதிகதடவைகள் குறித்த பயிற்சியை மேற்கொண்டு உலகசாதனை நிகழ்த்தியுள்ளார்.

## விநோதமான முறையில் பாதைகளை துப்புரவு செய்யும் சீனநாட்டு மக்கள்



வல்லரசு நாடுகளுக்கு சவால்விடும் வகையில் வளர்ச்சிய டைந்த நாடுகளில் ஒன்றான சீனா தனது போக்குவரத்து சாலைகளை துப்புரவு செய்வதற்கு விநோதமான முறையில் தயாரிக்கப்பட்ட இயந்திரம் ஒன்றை பயன்படுத்துகின்றனர்.

வான் ஒன்றின் பின்னால் இணைக்கப்பட்டு இயக்கப்படும் இந்த இயந்திமானது சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தா வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளதோடு மிகவும் துல்லியமாக சாலைகளை துப்புரவு செய்கின்றது .எனினும் இவ்வாறு துப்புரவு செய்யும் போது யாரும் சாலையில் நிம்மதியாக செல்ல முடியாது.

## புதிய இன காட்டுநாரை கண்டுபிடிப்பு மடகஸ்காரில்



ஆபிரிக்க கண்டத்தின் தென்கிழக்கே இந்திய பெருங்கடலில் அமைந்துள்ள பெரிய தீவான மடகஸ்கார் தீவில் புதிய காட்டு நாரை ஒன்றை பறவையியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.இத்தீவில் வாழும் விலங்களும் தாவரங்களும் மிகவும் அரியவை. உலகில் வேறெங்கும் காண இயலாதவை. இந்நிலையில் இத்தீவில் வாழ்கின்ற புதிய காட்டு நாரை பறவையினத்தை முனைவர் ஸ்டீவன் குட்டன் தலைமையிலான பறவையியல் அறிஞர் கண்டுபிடித்து இதற்கு No.69 mentocrex beankaensis என்று பெயர்சூட்டியுள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறியதாவது, பொதுவாக காட்டு நாரைக்குள் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒன்று மடகஸ்கார் தீவின் குளிர் நிரம்பிய கிழக்குப்பகுதியிலும் நடபகுதியிலும் வாழும். மற்றொன்று தீவின் வடகிழக்கில் உள்ள வெப்பமான இலையுதிர் காடுகளிலும் வாழும்.

அண்மையில் மத்திய மேற்குப் பகுதியில் ஒரு சுண்ணாம்புக்கல் பிளவிற்குள் ஒரு தாய்ப் பறவையும் அதன் குஞ்சையும் கண்டுபிடித்தோம். இதுவும் காட்டு நாரை வகையைச் சேர்ந்தது தான். ஆனாலும் இந்தப் பறவை ஏற்கனவே அறியப்பட்ட பறவையாகத் தெரியவில்லை.

இது இருவகை காட்டு நாரைகளிலும் வேறுபட்டுத் தோன்றியது. இதன் இறகுகளின் நிறம் வித்தியாசமாக தோன்றியதாம்.

இறகு மற்றும் DNA வேறுபாடு கொண்டு அறிந்ததில் இந்தப் புதிய வகை காட்டு நாரை பெரிதாகத் தோன்றுகிறது. சூழலால் தனிமைப்பட்டு காணப்படுகிறது.

இது பெமாரஹா மற்றும் பியாங்கா மலைப் பகுதிகளில் நூறு முதல் 320 மீற்றர் உயரத்தில் தனித்து வாழ்கின்றது.

## விண்ணிலிருந்து விழுந்த மர்மப்பொருள்-200கிலோ



சைபீரியாவில் விண்ணில் இருந்து 200 கிலோ எடை கொண்ட மர்மப்பொருள் விழுந்ததால் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.


சைபீரியாவில் உள்ள ஓட்ராட் நெஸ்கி என்ற கிராமத்தின் அடர்ந்த காட்டுப்பகுதியில் விண்ணில் இரந்து திடீரென மர்மப் பொருள் சமீபத்தில் விழுந்துள்ளது.

அதை அப் பகுதியில் இருந்த கிராமவாசிகள் பார்த்து அதிர்ச்சி அடைந்தனர். பின்னர் காவற்றுறை அதிகாரிகளுக்கு உடனடியாக தகவல் அளித்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த காவற்றுறை அதிகாரிகள் யுவடிவில் இருந்த அந்த மர்மப் பொருள் ஏதோ ஒரு சாதனத்தின் உடைந்த பொருள் என்பதை அறிந்தனர். இது குறித்து ரஷ்ய ஆராய்ச்சியாளர்களுக்கு தகவல் அளித்தனர்.

வெள்ளியை போல் பளபளப்பாக உள்ள அந்த மர்மப் பொருளை ஆய்வு செய்து வருகின்றனர். இது குறித்து ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில், விண்ணில் இருந்து விழுந்த பொருள் 200 கிலோ எடை உள்ளது. உலோகத்தால் ஆனது. செயற்கைக்கோள், ஏவுகணை அல்லது விண்கல்லாக இருக்க வாய்ப்பில்லை என்பது முதல் கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.மர்மப் பொருள் குறித்த தொடர் ஆய்வு நடைபெற்றுவருகிறது என்றனர்.

## காற்பந்தாட்டத்தில் கலக்கும் யானைகள்



நிலத்தில் வாழும் விலங்குகளுள் பெரியதாக கருதப்படும் யானைகளின் கூட்டம் ஒன்று மிகவும் அழகாக காற்பந்து விளையாடு கின்றது.

சுற்றுலாப்பயணிகளையும் ஏனைய மக்களையும் மகிழ்விப்ப தற்காக பயிற்றுவிக்கப்படும் இந்த யானைகள் விலங்குகளிலேயே அதிக நாள் வாழும் உயிரினமாக கருதப்படுவதுடன் புலி, சிங்கம் என்பவற்றை விடவும் பலம் பொருந்தியனவாகவும் காணப்படுகின்றன.

இன்று எஞ்சியுள்ள யானைகள் ஆபிரிக்க புதர்வெளி யானைகள்இ ஆபிரிக்கக் காட்டு யானைகள் மற்றும் ஆசிய யானைகள் என வகைப்படுத்தப்படுகின்றன. மேலும் இவை 70 ஆண்டுகள் வரை உயிர் வாழக்கூடிய என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பிலிப்பைன்ஸ் நாட்டின் நீர்வீழ்ச்சி உணவகம்



நீங்கள் உங்கள் இரவு உணவை மிகவும் வித்தியாசமான சூழலில் உண்ண விரும்புகின்றீர்களா? இதற்கு மிக பொருத்தமான இடம் பிலிப்பைன்ஸ் நாட்டில் அமையப் பெற்று உள்ளது.

Villa Escudero Resort அமையப் பெற்று உள்ள நீர் வீழ்ச்சி உணவகம்தான் நாம் சொல்கின்ற ரம்மியமான இடம். நேரில் செல்ல முடியாவிட்டாலும் படங்களைப் பார்த்து மகிழுங்கள்.

## விடத்தல் தீவில் வெடிபொருள் மீட்பு

மன்னார் பொலிஸ் பிரிவிற்குட் பட்ட விடத்தல் தீவில் உள்ள ஆலய மொன்றிற்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டுகள் சில வற்றை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே குண்டுகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட குண்டுகள் இராணுவ அதிகாரிகள் ஒத்துழைப்புடன் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருவதாக மன்னார் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# ஐ.நா.பிரேரணைக்கு பின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றது ஏன்?

## லக்ஸ்மன் கிரியல்ல கேள்வி

(கொழும்பு)

ஜெனிவாவில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு எதிராக என்ற பேரில் இலங்கை அரசு அண்மையில் எதிர்ப்பு ஆர்பாட்டங்களை நாட்டின் பல பகுதிகளிலும் நடத்தியிருந்தது. இந்நிலையில் பிரேரணை தற்போது நிறைவேற்றப்பட்ட பின்னர் ஏன் ஆர்பாட்டங்களை நடத்தாமல் அமைதியாக இருக்கிறது அரசு? என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல என கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் வாழ்க்கைச் சுமை வேலையில்லா பிரச்சினை மற்றும் ஊழல் என்பனவற்றிற்கு பதிலளிக்க முடியாமல் அவற்றை மூடி மறைப்பதற்காகவே ஜெனிவா பிரேரணைக்கு எதிராக என்ற பேரில் மஹிந்த அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நாட்டின் பல பகுதிகளிலும் நடத்தியிருந்தது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட விமர்சனங்களை ஜெனிவா செல்வதற்கு முன் வெளியிட்டிருந்தனர்.

இதன் மூலம் அமைச்சரவையின் ஒட்டு மொத்த பொறுப்பு என்னவாகிறது? என்று கேட்கி றேன். நல்லிணக்க ஆணைக்குழு தொடர் பாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஜெனிவாவில் எத்தகைய விடயங்களை குறிப்பிட்டாலும் இலங்கை அரசாங்கத்தினுள் பாரிய கருத்து முரண்பாடுகள் நிலவுவதாக ஜெனிவா செல்வதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

மஹிந்த அரசு ஒருமித்த கருத்துடன் செயற்படாமல் இருந்ததனாலே நாடு இந்த அவல நிலையைச் சந்தித்துள்ளது.

அமைச்சரவை ஒன்றுகூட்டி ஒருமித்த கருத்துடன் ஜெனிவா கூட்டத் தொடர்களில் பங்கு பற்றச் சென்றிருந்தால் ஓரளவு வெற்றி கிடைத்திருக்கும் என்றார். (அ-2)

# சவுதி அரசு அமைத்த சுனாமி வீடுகளை முஸ்லிம் மக்களுக்கு தந்துதவுங்கள்

## முஸ்லிம் உலமாகட்சி ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சவுதி அரேபியா ஆதரவாக செயற்பட்டமைக்கு நன்றிக்கடனாக குறித்த நாட்டு அரசாங்கத்தினால் அக்கரைப்பற்றில் கட்டப்பட்ட சுனாமி வீடுகளை முஸ்லிம்களிடம் கையளிக்குமாறு முஸ்லிம் உலமா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு முஸ்லிம் உலமா கட்சியின் தலைவர் மௌலவீ முபாரக் அப்துல் மஜீத் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் உலமாகட்சி தலைவரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் சவுதி அரேபியாவானது அரசியல் நலன்களை பொறுத்த வரை அமெரிக்காவின் அரசியல் ஆதரவு நாடு என்பதை முழு உலகும் அறியும். அவ்வாறான நிலையில் ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் அமெரிக்காவினால் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு சவுதி அரேபியா எதிராக வாக்களித்தது.

இதன்மூலம் அமெரிக்காவுக்கு எதிராக சவுதி அரேபியா செயற்பட்டமை ஒரு வரலாற்று திருப்பமாகும். இவ்வாறு செயற்பட்ட சவுதி அரேபியாவிற்கு இலங்கை மிகவும் கடமைப் பட்டுள்ளது.


சவுதி அரேபியா இலங்கைக்கு சார்பாக செயற்பட்டதன் மூலம் எமது நாட்டில் நிலவிய பயங்கரவாதம் காரணமாக முஸ்லிம்கள் பாரிய பாதிப்புக்குள்ளானதை புரிந்து கொண்டுள்ளமையை காட்டுகிறது. அத்துடன் சவுதி அரேபியா இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் பல உதவிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்த அடிப்படையில் முன்னாள் அமைச்சர் பேரியல் அஷ்ரபின் வேண்டுகோளுக்கிணங்க சுனாமியால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட முஸ்லிம்களுக்காக சவுதி அரேபிய அரசாங்கம் அக்கரைப்பற்றில் 500 வீடுகளை கட்டிக்கொடுத்துள்ளது.

ஆனால், குறித்த வீடுகள் இதுவரை சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கையளிக்கப்படவில்லை. அம்பாறை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிங்கள மக்கள் அனைவருக்கும் வீடுகள் கிடைத்துள்ளன.

இந்நிலையில் குறித்த வீட்டுத் திட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரடியாக தலையிட்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் வீடுகளை பெறுவதற்கு உதவ வேண்டும்.

இதன் மூலம் இலங்கை அரசு, சவுதி அரேபியாவுக்க நன்றிக்கடனை மேற்கொண்டதாக முடியும் என்பதை ஓர் ஆலோசனையாக முஸ்லிம் உலமாகட்சி முன்வைக்கிறது என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

## 45 கோடி ரூபா பெறுமதியான கேக்



ஒன்றை அஹுன்கல்ல ஹெரிடன்ஸ் ஹோட்டலின் பிரதான சமையற்காரரான திமுது குமாரசிங்க 45 கோடி ரூபா பெறுமதியான கேக் ஒன்றை தயாரித்துள்ளார். கப்பல் வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த கேக் மோட்டார் ஷெல் ஒன்றின் மேல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் நீல மாணிக்கக் கற்கள் 10, தங்க நகைகள் 10, 10 வகையான சுவைகளைக் கொண்ட சொக்லேட்டுக்கள் உள்ளடக்கிய வகையில் இந்த கேக் தயாரிக்கப்பட்டுள்ளது.

# மாகாணசபைகளுக்கு கூடுதல் அதிகாரம்; புலிகள் சார்பானோர் மகிழ்ச்சியாம்

கோதுமைமாவின் விலையை அதிகரிக்கும் ஒப்பந்தத்தை அரசசார்பற்ற நிறுவனங்கள் ஏற்றுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். ஒரு கிலோ நெல்லுக்கு 40 ரூபாவை வழங்க வேண்டும் என்ற போராட்டத்தை இந்த நிறுவனங்களே மக்கள் மத்திக்கு கொண்டு சென்றுள்ளன எனவும் அமைச்சர் கூறியுள்ளார். குருணாகல் இப்பாகம்முவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டு முக்கியமான விடயங்களை உள்ளடக்கியே இந்தியா மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு ஆதரவு வழங்கியதாக இந்திய பிரதமர் மன்மோகன் சிங் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இந்தியா கூறுவது போல் இரண்டு சமாதான விடயங்களை உள்ளடக்கியே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தைகளில் அமெரிக்காவுக்கு எந்த தேவையுமில்லை. அவர்களுக்கு தேவையானவற்றை அவர்கள் செய்கின்றனர். குறைந்தது இணக்கப்பாடு என்ற வார்த்தையை யோசனையில் சேர்ந்திருந்தால் மிகவும் நல்லது. மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என அமெரிக்காவின் யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் சர்வதேச நாடுகளில் உள்ள புலிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

# சர்வதேச எம்.பிக்கள் மாநாட்டுக்கு ஜயலத் எம்.பி. உகண்டா விஜயம்

(கொழும்பு)

உகண்டா கம்பாலா நகரில் நடைபெற ஏற்பாடாகியுள்ள 126 ஆவது சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் மாநாட்டின் 137 ஆவது மனித உரிமைகள் தொடர்பிலான கூட்டத்தில் பங்கேற்க ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன உகண்டாவிற்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் என்டர்ஸன் பீ ஜோன்சனின் அழைப்பை ஏற்று இவர் விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரை உகண்டா கம்பாலா நகரில் இந்நிகழ்வு இடம்பெறும்.

அத்துடன் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் நாடாளுமன்ற சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி வில்லியம் சிஜாவினை சந்திப்பதற்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி லண்டனுக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்தச் சந்திப்பு பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்றச் சங்கத்தின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது. (அ-2)

# மூவேந்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

ஐ.தே.கவின் தலைமை காரியாலயமான சிறிகொத்த கடந்த வருடம் தாக்கப்பட்டமை தொடர்பாக மேல்மாகாண சபை உறுப்பினர் ஷிரால் லக்திலக்க, தென்மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன, லால் பெரேரா ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள ஐ.தே.கவின் செயற்குழு தீர்மானித்துள்ளது.

இதற்காக முன்னாள் அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் ஒழுக்காற்று குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (அ-2)

# ஜெனீவாவில் இலங்கை அடைந்தது அச்சுறுத்தலுடனான வெற்றியே

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பான அமெரிக்கப் பிரேரணை நிறைவேற்றபட்ட, கடந்த 22.03.12 அன்றே, அதே பேரவையில் இஸ்ரேல் மேற்குக் கரையில் குடியேற்றங்களின் மூலம் பலஸ்தீன மக்களின் மனித உரிமைகளை மீறுவதற்கு எதிராகவும் ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டது. விந்தை என்னவெனில், இலங்கை மனித உரிமைகளை பாதுகாக்கவென பிரேரணை ஒன்றை முன்மொழிந்த அமெரிக்கா மட்டுமே, பலஸ்தீன மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்கவெனக்கொண்டு வரப்பட்ட பிரேரணையை எதிர்த்தது.

இலங்கை தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்படுவதற்கு முதல் நாள் ஊடகவியலாளர்களுடன் உரையாடிய ஆப்கான் வெளிநாட்டமைச்சர் சல்மய்ரசூல், அமெரிக்கப் படையினரால், ஆபாகானிஸ்தானில் 16 அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட சம்பவத்தைப் பற்றியும் குர்ஆன் எரிக்கப்பட்ட சம்பவத்தைப் பற்றியும் விசாரணை மேற்கொள்ளுமாறு அமெரிக்காவை கேட்டுக் கொண்டனர்.

தமக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணையில் உண்மையான



நோக்கம் மனித உரிமை விடயத்திலான அக்கறையல்ல என்ற இலங்கை அரசாங்கத்தின் வாதத்திற்கு இவையும் ஆதாரமாகிவிட்டன.

ஆனால், இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படவில்லை என்று இதனால், அர்த்தமாகாது. ஏனெனில், இலங்கை அரசாங்கமே நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலேயே மனித உரிமை மீறப்பட்டிருக்கலாம், அவற்றைப் பற்றி விசாரணை செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பிரேரணையும் அந்த மனித உரிமை மீறல்களைப்பற்றி விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்றே கூறுகிறது.

மஹிந்தராஜபக்ஷ அரசாங்கத்திற்கெதிரான இந்தப்பிரேரணை தொடர்பாக எல்லோரும் மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனைய எல்லோரும் அரசியல் காரணங்களைக்கொண்டே அவ்வாறு மகிழ்ச்சியடைகிறார்கள். ஆனால், இந்த விடயத்தில் அவர்களைப்போலவே அரசாங்கத்திற்கும் மகிழ்ச்சியடைவதற்கு காரணங்கள் இருக்கின்றன. அரசாங்கம் ஜெனிவாவில் வாக்கு எண்ணிக்கையில் தோல்வியடைந்த போதிலும் அரசியல் ரீதியாக பாரிய அபாயமொன்றை தவிர்த்துக்கொண்டது. முன்பு ஒரு கட்டுரையில் கூறியதைப்போல இந்தப் பிரேரணையானது அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையாகும். இது அரசாங்கமே நியமித்த ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுலாக்குமாறு அரசாங்கத்தையே வலியுறுத்தும் பிரேரணையாகும். அரசாங்கமும் அதற்கு முடியாது என்று கூறவில்லை. ஆனால், அரசாங்கம் அதன் ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுலாக்குவதை நாம் மேற்பார்வை செய்ய வேண்டும் என இந்தப் பிரேரணை மூலம் சர்வதேச சமூகம் கூறுகிறது.

சர்வதேச சமூகத்திற்கு அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லை என்பதையே இந்தப் பிரேரணை கூறுகிறது. எங்களுக்கு அவகாசம் தாருங்கள் என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்கவும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸூம் ஜெனிவாவில் வைத்து கேட்டார்கள். அதற்கு பதிலளிப்பதைப்போல நாம் இலங்கைக்கு மூன்று ஆண்டுகள் அவகாசம் கொடுதோம் என்று மனித உரிமை பேரவையின் அமெரிக்கப் பிரதிநிதி தமது உரையின்போது கூறினார்.

இந்தப்பிரேணையைப் பற்றிய செய்தி முதன் முதலாக வெளிவந்த போது அரசாங்கம் மனித உரிமைச் செயற்பாட்டுத்திட்டம் ஒன்றை தயாரிக்க முற்பட்டது. இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத்ஜயசூரிய நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில சம்பவங்களைப் பற்றி விசாரிக்கவென நீதிமன்றமொன்றை நியமித்தார். ஆனால், அவை சர்வதேச நெருக்குதலை சமாளிக்க அரசாங்கம் எடுத்த மேல்தோற்ற நடவடிக்கைகளே என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியது.

எனவே, நாட்டுக்குள் இருந்து கொண்டு நாம் ஏகாதிபத்தியவாதிகளின்முன் மண்டியிடுவதில்லை என அரசாங்கத்தின் தலைவர்கள் எவ்வளவுதான் மார்தட்டிக்கொண்டாலும் நெருக்குதலுக்குப்பணிந்து சில நடவடிக்கைகளை எடுக்க இணக்கம் தெரிவித்தார்கள்.

வழக்கு விசாரணைகளின் சாட்சியாளர்களை பாதுகாக்க சட்டம் கொண்டு வருதல், திருகோணமலை மாணவர்கள் கொலை மற்றும் மூதூர் தொண்டர் அமைப்பு உறுப்பினர்களின் கொலை ஆகியவற்றைப் பற்றி புதிதாக விசாரணை மேற்கொள்ளல் ஆகியன அவ்வாறு அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளாகும்.

ஆனால், பிரேரணையைக் கொண்டு வந்தே தீருவோம் என அமெரிக்கா விடாப்பிடியாக இருந்தது. தனித்தனி நாடுகள் விடயத்தில் மனித உரிமை பேரவையில் பிரேரணைகளை கொண்டு வருவதை தாம் எதிர்ப்பதாக இந்தியா கூறியதே இலங்கைக்கு பெரும் ஆறுதலாக இருந்தது.

ஆனால், இந்தியா தமது இந்த வெளிநாட்டுக் கொள்கைக்கும் முரணாக இலங்கை தொடர்பான பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்க, பின்னர் முற்பட்டது. இதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து விலகுவோம் என கருணாநிதி செய்த மிரட்டல்தான் காரணம் என்றுபலர் கூறனாலும் அது தான் ஒரே காரணம் திட்டவட்டமாக கூறமுடியாது. தி.மு.க. மத்திய அரசாங்கத்திலிருந்து விலகினால் அரசாங்கம் கவிழும். அப்போது புதிதாக தேர்தல் நடத்த வேண்டிவரும். இதனை தி.மு.க. விரும்புமா?

இலங்கையில் போர் உச்ச கட்டத்தில் இருக்கும்போது கருணாநிதி ஆறு மணித்தியாலம் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தார். தி.மு.க. வின் அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களும் போரை நிறுத்த இலங்கைக்கு காலக்கெடு விதித்து இராஜினாமா செய்ய இருந்தனர். ஆனால், அமைச்சர் பசில் ராஜபக்ஷ புதுடில்லிக்குச் சென்று நாங்கள் பாரிய ஆயுதங்களைப்பாவிப்பதை நிறுத்துவோம் என்று கூறியவுடன் அவர்கள் இராஜினாமா திட்டத்தை ஒத்திப் போட்டார்கள். போர்முடிந்துவிட்டது ஆயுதப்போராட்டம், அழிக்கப்பட்டது அவ்வளவுதான்.

இந்த முறையும் கருணாநிதி ஒரு கட்டத்தில் தமது நெருக்குதலை ஏதோ காரணத்துக்காகத் தளர்த்தினார். பின்னர் மீண்டும் இறுகப்பிடித்தார். எனவே தமிழ் நாட்டில் நெருக்குதலை சமாளிக்கமுடியும் என பிரதமர் மன்மோகன் சிங்கிற்குத் தெரியும். ஆனால், ராஜதந்திர நடவடிக்கைகள் விளையாட்டல்ல. அவற்றின் நம்பகத் தன்மையானது, மிகமுக்கியம் என்று இலங்கைக்கு உணர்த்தவும் இந்தியாவுக்கு தேவைப்பட்டதா என்ற சந்தேகம் எழுகிறது.

ஏனெனில், அண்மையில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கைக்கு வந்தபோது 13வது அரசியல் அமைப்புத் திட்டத்திற்கு அப்பால் செல்வதாக ஜனாதிபதி தம்மிடம் கூறினார் என அவர் ஊடகங்களுக்குக் கூறினார். தாம் அவ்வாறு இந்தியாவுக்கு வாக்குறுதி அளிக்கவில்லை என சில நாட்களுக்குப் பின்னர் ஜனாதிபதி பத்திரிகையாளரிடம் கூறினார்.

காரணம் எதுவாக இருந்தாலும், இந்தியாவின் நிலைப்பாடு மாறியதன் காரணமாகவே ஜெனீவாவில் அமெரிக்கப் பிரேரணை நிறைவேறியது. இந்தியா நடுநிலை வகித்தாலும் பிரேரணை நிறைவேறியிருக்காது. பிரேரணை நிறைவேறியமை இலங்கைக்கு ஏற்பட்ட தோல்வி என்றே பொதுவாகக் கருதப்படுகிறது.

ஆனால், ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்த நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஜெனீவாவில் இலங்கைக்குக் கிடைத்திருப்பது வெற்றியே. ஒரு வருடத்திற்கு முன்னர் இலங்கையில் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கோரிக்கையே சர்வதேச அரங்கில் ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால்,



அமெரிக்கப் பிரேரணைமூலம் உள்நாட்டு விசாரணையே வலியுறுத்தப்படுகிறது. சர்வதேச சமூகமும் அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழ் தலைவர்களும் தமிழ்நாட்டுத் தலைவர்



களும் மனித உரிமை ஆர்வலர்களும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். அது இலங்கைக்கு சாதகமான நிலைமையாகும்.

ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரணையை அமெரிக்கா பின்னர் திருத்தியே வாக்கெடுப்பிற்கு விட்டது. அதுவும் இலங்கைக்கு சாதகமாகியது. ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரணையின் 2-வது மற்றும் 3-வது வாசகங்களே இலங்கைக்கு பிரச்சினையாகவிருந்தன. 2-வது வாசகத்தின்படி மனித உரிமை பேரவையின் அடுத்தத அமர்வின் போது இலங்கை மனித உரிமை விடயத்தில் தாம் என்ன நடவடிக்கை எடுத்தோம் என்று அறிக்கை சமர்ப்பிக்கவேண்டியிருந்தது.

நிறைவேற்றபட்ட பிரேரணையில் அடுத்த அமர்வில் என்பதற்கு பதிலாக கூடியவிரைவில் என்று கூறப்பட்டிருக்கிறது.

முன்னைய 3-வது வாசகத்தின் படி நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுலாக்குவதற்காக இலங்கை ஐ.நா. மனித உரிமை ஸ்தானிகரின் ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக் கொள்ளவேண்டும். இது இலங்கையின் இறைமையை அச்சுறுத்தும் வாசகமொன்றாகும்.

ஆனால், நிறைவேற்றப்பட்ட பிரேரணையின்படி இலங்கை அரசாங்கத்தின் இணக்கத்துடனேயே ஐ.நா. மனித உரிமை ஸ்தானிகர் தமது ஆலோனைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை இலங்கைக்கு வழங்க முடியும். இந்த இலங்கை அரசாங்கத்தின் இணக்கத்துடனேயே என்ற மூன்று சொற்களின் மூலம் இலங்கையின் இறைமை பாதுகாக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்தியாவே திரைமறைவில் செயற்பட்டதாகக் கூறப்படுகிறது.

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமை ஸ்தானிகர் மனித உரிமைப்பேரவையின் அடுத்த அமர்வின்போது அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும் என முன்னைய பிரேரணையில் இருந்தது. நிறைவேற்றப்பட்ட பிரேரணையின்படி அந்த அறிக்கை மனித உரிமைப் பேரவையின் 22-வது அமர்வின் போதே சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இறுதியில் சர்வதேச விசாரணையையும் தவிர்த்துக்கொண்டு உள்நாட்டு விசாரணைகளின்போது ஏற்படவிருந்த கட்டாய வெளிநாட்டுத் தலையீட்டையும் தவிர்த்துக்கொள்ள இலங்கையால் முடிந்துவிட்டது. இது இலங்கை பெற்ற பாரிய வெற்றியே. ஆனால், நம்பிக்கை பற்றிய பிரச்சினை தொடர்ந்தும் ஏற்பட்டால், பாரிய பிரச்சினை ஏற்படுவதற்குள்ள வாய்ப்புகளும் அதிகமாக இருக்கின்றன.

**ஐயூப்**

# வாக்குறுதிகளை நிறைவேற்றாத இலங்கைக்கு

# பிரேரணை மூலம் பாடம் புகட்ட எண்ணிய இந்தியா

பிரேரணை நிறைவேற்றப்பட்டவுடன் இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலும் இதனையே காணக்கூடியதாக இருந்தது. அதாவது தமிழக நிர்ப்பந்தம் அமெரிக்கா பக்கம் சாய வேண்டிய நிலையை இந்தியாவுக்கு ஏற்படுத்தியிருந்தாலும் கொழும்புக்கு அஞ்சும் நிலையில்தான் டில்லி இன்னமும் உள்ளது என்பதுதான் உண்மை! இலங்கை விவகாரத்தில் கூட இந்தியாவின் ஆதரவுடன் செயற்படுவதைத்தான் அமெரிக்கா விரும்பியது. அதனால்தான் இந்தப் பிரச்சினைக்குள் இந்தியாவையும் இழுக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா அக்கறை காட்டியது. மறுபுறத்தில் இலங்கைக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்ற தேவை ஒன்றும் இந்தியாவுக்கு இருந்தது. போர் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த மூன்று வருட காலத்தில் இந்தியாவுக்கு வழங்கிய எந்தவொரு வாக்குறுதியையும் இலங்கை நிறைவேற்றவில்லை. இந்தியாவை ஒரு பொருட்டாகவே தான் கருதவில்லை என்பதை கொழும்பு பல தடவைகளில் வெளிப்படுத்தியிருந்தது. இறுதியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் 13 பிளஸ் என உறுதியளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பின்னர் அவ்விடயத்தில் வெளிப்படுத்திய கருத்துக்கள் இந்தியாவுக்கு பெரும் சீற்றத்தைக் கொடுத்திருந்தது. இருந்த போதிலும் இதனைக் காட்டிக்கொள்ளக் கூடிய நிலையில் இந்தியா இருக்கவில்லை. இலங்கை தொடர்பில் கருத்துக்கூறுகையில் ஒரு அச்சம் கலந்த தயக்கத்தையே டில்லியிடம் காண முடிந்தது. இந்தியாவின் இந்த அச்சத்தை கொழும்பு நன்கு பயன்படுத்திக் கொண்டது. சீனாவைப் பயன்படுத்துவது உட்பட பல்வேறு விடயங்களில் இலங்கை தமக்கு விரோதமாகச் செயற்படுவதை தெரிந்து கொண்டிருந்த போதிலும் கூட டில்லி மௌனமாக இருப்பதையே விரும்பியது. இவ்வாறான ஒரு பின்னணியில் இலங்கை தொடர்பான பிரேரணையை அமெரிக்கா கொண்டு வருவது இந்தியாவுக்குப் பெரிதும் சங்கடமான ஒரு நிலையைக் கொடுப்பதாகவே அமைந்திருந்தது. அமெரிக்காவின் பிரேரணையின் மூலப்பிரதி மூன்றாவது தடவையாகத் திருத்தப்பட்டிருக்கின்றது. இந்தத் திருத்தங்கள் அனைத்தும் இலங்கைக்குச் சாதகமானவையாகவே இருந்துள்ளன. இந்தத் திருத்தங்கள் அனைத்துக்கும் பின்னணியிலிருந்து செயற்பட்டது இந்தியாதான் என்பது இந்தியாவின் இரட்டை வேடத்துக்குச் சாட்சி! இந்த இடத்தில் ஜெனீவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இந்தியா எவ்வாறான ஒரு பாத்திரத்தை வகித்தது என்பதை அறிந்து கொள்வது அவசியம். இதன் மூலமாகவே எதிர்காலத்தில் இந்தியா வகிக்கப்போகும் பாத்திரம் என்ன என்பதைப் புரிந்துகொள்ள கூடியதாக இருக்கும்!

இலங்கைக்கு எதிரான பிரேரணை ஒன்றை மனித உரிமைகள் பேரவையில் முன்வைப்பதற்கு தீர்மானித்து உடனடியாகவே இந்தியா இவ்விடயத்தை எவ்வாறு அணுகும் என்பதை அறிந்து கொள்வதிலேயே அமெரிக்கா அக்கறை காட்டியது. அத்துடன் இதனை இந்தியாவின் ஆதரவுடன் நிறைவேற்ற வேண்டும் என்ற அவசியமும் அமெரிக்காவுக்கு இருந்தது.

இதற்கு இரு காரணங்கள் இருந்தன.

ஒன்று தெற்காசிய பிராந்தியத்தில் குறிப்பாக இந்தியாவின் கொல்லைப் புறத்தில் மேற்கொள்ளும் நடவடிக்கை ஒன்றுக்கு இந்தியாவின் ஆதரவைப் பெற வேண்டுமென்ற தேவை அமெரிக்காவுக்கு இருந்தது.

இரண்டு இலங்கையைச் சுற்றியுள்ள ஏனைய தெற்காசிய நாடுகள் தமக்கு ஆதரவளிக்காது என்பதால் இந்தியாவையாவது தக்கவைக்க வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு இருந்தது.

இலங்கையில் கால் பதிக்க: "அமெரிக்கா" புலிகளையும் வளைத்துப் போடப் பார்த்தது. அது நடக்கவில்லை. ஆனால், இப்போது அதன் கையில் உள்ள ஒரே ஆயுதம்...

இந்தப் பின்னணியில்தான் டில்லியுடன் வோஷிங்டன் தொடர்புகளை ஏற்படுத்தியது!

அமெரிக்காவைப் பொறுத்தவரையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் கொண்டு வந்து மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்ற வேண்டும் என்பதில் செலுத்திய அக்கறையை பிரேரணையின் உள்ளடக்கம் வலுவானதாக இருக்க வேண்டும் என்பதில், செலுத்தவில்லை. பிரேரணை வலுவானதாக இருக்கும் நிலையில் அதனை நிறைவேற்றுவது கடினமாகலாம் என்ற அச்சமும் அமெரிக்காவுக்கு இருந்திருக்கலாம். பிரேரணை தொடர்பில் அமெரிக்கா நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடித்தமைக்கு இதுவும் காரணமாக இருந்திருக்கலாம். அமெரிக்காவால் தயாரிக்கப்பட்ட முதலாவது வரைபில் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்கள் தொடர்பாக சுதந்திரமானதும் நம்பகத் தன்மையைக் கொண்டதுமான விசாரணைகளை அந்நாட்டு அரசு மேற்கொள்ளவில்லை என அமெரிக்கா தனது ஏமாற்றத்தை அழுத்தமாகப் பதிவு செய்திருந்தது. இருந்தபோதிலும் அமெரிக்கா தாக்கல் செய்த பிரேரணையின் வரைபில் போர்க் குற்ற விசாரணைக்கான உரிய அழுத்தங்களை அமெரிக்கா பதிவு செய்யவில்லை என மனித உரிமை அமைப்புகள் சிலவற்றால் குறை கூறப்பட்டது.

இந்தியாவின் ஆதரவைக் கோருவதற்காக அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகளாலேயே பிரேரணையை வலுவிழக்கச் செய்வதற்கான முதலாவது திருத்தத்தை இந்தியா செய்தது.

அமெரிக்க பிரேரணையின் 3 ஆவது பகுதியே இவ்வாறான சர்ச்சைக்குரிய பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

அதில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

"மேற்படி நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கான ஆலோசனைகள், தொழில்நுட்ப உதவிகளை மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரின் அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட விசேட தொடர்புடைய நடைமுறைகளை வழங்குவதையும் அவற்றை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதையும் ஊக்குவிக்கின்றது. அத்துடன் அத்தகைய உதவி வழங்கல் குறித்து 22 ஆவது கூட்டத் தொடரில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தைக் கோருகின்றது." இந்தப் பிரேரணை வெளிநாட்டுத் தலையீட்டுக்கு வழிவகுப்பதாக அமையும் என்பதால் இலங்கை அரசு இதனைக் கடுமையாக எதிர்த்தது.

பிரேரணை கொண்டு வரப்பட விருப்பதாகத் தீர்மானிக்கப்பட்டபோது இந்தியாவுக்கு அது சங்கடமான நிலையைத்தான் கொடுத்தது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்ட விடயத்தில் தமிழகத்திலிருந்து உருவாகக்கூடிய அழுத்தங்களுடன் மேற்கு நாடுகளும் இந்தியாவின் ஆதரவை எதிர்பார்த்தன. இந்தியாவின் கொல்லைப் புறத்தில் பிரவேசிப்பதற்கு இதன் (இந்தியாவின்) ஆதரவு அவசியம் என்பதை அமெரிக்கா தெரிந்து கொண்டேயிருந்தது.

அமெரிக்காவைப் பொறுத்வரையில் தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் மேலாதிக்க நிலையை ஏற்றுக்கொள்ளும் வகையிலேயே அதன் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது. அந்த வகையில் இப்போது இலங்கை விவகாரத்தில் கூட இந்தியாவின் ஆதரவுடன் செயற்படுவதைத்தான் அமெரிக்கா விரும்பியது. அதனால்தான் இந்தப் பிரச்சினைக்குள் இந்தியாவையும் இழுக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா அக்கறை காட்டியது.

மறுபுறத்தில் இலங்கைக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்ற தேவை ஒன்றும் இந்தியாவுக்கு இருந்தது. போர் முடிவுக்கு வந்த பின்னரான கடந்த மூன்று வருட காலத்தில் இந்தியாவுக்கு வழங்கிய எந்தவொரு வாக்குறுதியையும் இலங்கை நிறைவேற்றவில்லை. இந்தியாவை ஒரு பொருட்டாகவே தான் கருதவில்லை என்பதை கொழும்பு பல தடவைகளில் வெளிப்படுத்தியிருந்தது.

இறுதியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் 13 பிளஸ் என உறுதியளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பின்னர் அவ் விடயத்தில் வெளிப்படுத்திய கருத்துக்கள் இந்தியாவுக்கு பெரும் சீற்றத்தைக் கொடுத்திருந்தது. இருந்த போதிலும் இதனைக் காட்டிக்கொள்ளக் கூடிய நிலையில் இந்தியா இருக்கவில்லை.

இலங்கை தொடர்பில் கருத்துக் கூறுவதில் ஒரு அச்சம் கலந்த தயக்கத்தையே டில்லியிடம் காண முடிந்தது. இந்தியாவின் இந்த அச்சத்தை கொழும்பு நன்கு பயன்படுத்திக் கொண்டது. சீனாவைப் பயன்படுத்துவது உட்பட பல்வேறு விடயங்களில் இலங்கை தமக்கு விரோதமாகச் செயற்படுவதை தெரிந்து கொண்டிருந்த போதிலும் கூட டில்லி மௌனமாக இருப்பதையே விரும்பியது. இவ்வாறான ஒரு பின்னணியில் இலங்கை தொடர்பான பிரேரணையை அமெரிக்கா கொண்டு வருவது இந்தியாவுக்கு பெரிதும் சங்கடமான ஒரு நிலையைக் கொடுப்பதாகவே அமைந்திருந்தது. இவ்விடயத்தில் இந்தியா எந்தளவுக்கு குழம்பிப்போயிருந்தது என்பது இவ்வார முற்பகுதியில் இந்தியப் பாராளுமன்றத்தில் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் முரண்பாடான நிலைப்பாடுகளைப் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்கள்.

தமிழகக் கட்சிகள் அனைத்தும் ஒருமித்த குரலில் கொடுத்த அழுத்தமும் குறிப்பாக தமிழக காங்கிரஸ் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டமையும் இந்திய மத்திய அரசுக்குப் பெரும் நெருக்கடியைக் கொடுத்தது. குறிப்பாக சக்தி வாய்ந்த அமைச்சராக உள்ள ப.சிதம்பரம் தமிழக நிலைமைகளை நன்கு அவதானித்துள்ளார். இந்த நிலை தொடருமானால் அவரது அரசியல் எதிர்காலம் மட்டுமன்றி தமிழகத்தை தளமாகக் கொண்ட அவரது அரசியல் வாரிசான மகனின் அரசியல் எதிர்காலமும் கேள்விக்குறியாகலாம் என்ற நிலையில் பிரதமர் மன்மோகன் சிங், சிரேஷ்ட அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசிய பின்னரே பிரேரணையை ஆதரிப்பது என்ற நிலைப்பாட்டை டில்லி எடுத்தது.

இந்த நிலைப்பாட்டை டில்லி எடுத்த அதேவேளையில் அமெரிக்காவின் பிரேரணையில் இரண்டாவது திருத்தம் ஒன்றுக்கும் இந்தியா தயாரானது. பிரேரணையின் மூன்றாவது பிரிவின் மீதுதான் மீண்டும் கத்தி வைக்கப்பட்டது. அதாவது இலங்கை அரசின் சம்மதத்துடன் அமுல்படுத்துவதற்கான ஆலோசனைகள், தொழில்நுட்ப உதவிகளை மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகரின் அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட விசேட தொடர்புடைய நடைமுறைகளை வழங்குவதையும் இதில் இலங்கையின் சம்மதத்துடன் என்ற பதம் இறுதி வரைபில் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இது இலங்கையைத் திருப்திப்படுத்துவதற்காக இந்தியாவால் சேர்க்கப்பட்டதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இருந்தபோதிலும் இது பிரேரணையில் வலுவான தாக்கம் எதனையும் ஏற்படுத்தக் கூடியதாக இருக்காது எனவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் அமெரிக்காவுடன் இணைந்து வாக்களித்தமையால் கொழும்புக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சீற்றத்தைத் தணிப்பதில் தான் அதன் முழுக் கவனமும் இப்போது இருக்கின்றது. பிரேரணை நிறைவேற்றப்பட்டவுடன் இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலும் இதனையே காணக்கூடியதாக இருந்தது. அதாவது தமிழக நிர்ப்பந்தம் அமெரிக்கா பக்கம் சாய வேண்டிய நிலையை இந்தியாவுக்கு ஏற்படுத்தியிருந்தாலும் கொழும்புக்கு அஞ்சும் நிலையில்தான் டில்லி இன்னமும் உள்ளது என்பதுதான் உண்மை!

**இந்தியாவைப் பொறுத்தவரையில் அமெரிக்காவுடன் இணைந்து வாக்களித்தமையால் கொழும்புக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சீற்றத்தைத் தணிப்பதில் தான் அதன் முழுக் கவனமும் இப்போது இருக்கின்றது.**

*இன்போ தமிழ்*

# மன்மோகன்- கிலானி சந்திப்பு; பேச்சுவார்த்தை நடத்தவும் விருப்பம்

(சியோல்)

தென் கொரியாவில் பிரதமர் மன்மோகன்சிங்கும் பாகிஸ்தான் பிரதமர் கிலானியும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இரு நாடுகளுக்கிடையேயான பிரச்சினைகள் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று அப்போது இருவரும் விருப்பம் தெரிவித்தனர். தென்கொரியா நாட்டின் தலைநகர் சியோலில் சர்வதேச அணுசக்தி பாதுகாப்பு மாநாட்டின் 2 ஆவது நாள் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொள்ள சென்றிருந்த போது பிரதமர் மன்மோகன் சிங்கும் ,பாகிஸ்தான் பிரதமர் யூசுப்ரஷா கிலானியும் திடீரென சந்தித்துக் கொண்டனர். அப்போது இருவரும் சிறிது நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இந்த பேச்சுவார்த்தை முன்கூட்டியே திட்டமிடப்படாத அதிகார பூர்வமில்லாத சந்திப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

**பேச்சுவார்த்தை**

இந்தியா- பாகிஸ்தான் இடையே காஷ்மீர் பிரச்சினை ,தீவிரவாதிகள் ஒழிப்பு பிரச்சினை,எல்லை பிரச்சினை உட்பட பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அவை தொடர்பாக பலமுறை பேச்சுவார்த்தை நடத்தியும் இது வரை சரியான தீர்வு ஏற்படவில்லை. பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தன.



ஆகவே இரு நாட்டு பிரதமர்களும் இந்த பிரச்சினைகள் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தலாம் என இச்சந்திப்பின் போது விருப்பம் தெரிவித்தனர்.

**அறிக்கை வெளியீடு**

இது தொடர்பாக பாகிஸ்தான் பிரதமரின் செய்தி தொடர்பு அதிகாரி கூறுகையில், இரு நாட்டு பிரதமர்களும் முன்கூட்டியே திட்டமிடாத அதிகார பூர்வமில்லாமல் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அப்போது இருவரும் இரு நாட்டு பிரச்சினைகள் குறித்தும் மீண்டும் பேச்சுவார்த்தை தொடங்கலாம் என்று விருப்பம் தெரிவித்தனர் என்று கூறினார்.

பின்னர் அவர் இது குறித்து ஒரு சிறிய அறிக்கையையும் வெளியிட்டார்.(அ-2)

# கட்சிசார்பு பத்திரிகைகளுக்கு மம்தா தடை விதித்தார்



மேற்குவங்க மாநிலத்தில் உள்ள நூலகங்களில் கட்சி சார்பு பெற்ற மற்றும் அனைத்து ஆங்கில பத்திரிகைகள் வைக்க தடைவிதித்த அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி உத்தரவிட்டுள்ளார்.

மேற்கு வங்கத்தில் தற்போது அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் நூலகங்கள் என்று மொத்தம் 2ஆயிரத்து 842 நூலகங்கள் சேவையாற்றுகின்றன.

இந்நிலையில் கடந்த மார்ச் 14 ஆம் திகதி அரசு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் பொதுமக்கள் நலன் கருதி இனி நூலகங்களில் கட்சி பத்திரிகைகள் அவை தேசிய பத்திரிகையாகவோ மாநில பத்திரிகையாகவோ இருந்தாலும் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் இனி ஆங்கிலப் பத்திரிகைகள் வாசகர்களுக்கு கிடைக்காது என கூறப்பட்டிருந்து.


அதன்படி மொத்தம் மாநிலத்தில் வெளியாகும் அனைத்து ஆங்கிலப் பத்திரிகைகள் அனுமதியில்லை. வங்கமொழி,இந்தி உட்பட 8 பத்திரிகைகள் மட்டுமே நூலகங்களில் வைக்கப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டிருந்தன.

இவற்றில் திரிணாமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராஜ்யசபா எம்.பி ஸ்ரீன்ஜாப் போஸ் என்பவரின் சங்க்பாத் பிரதீன் பத்திரிகை, சன்மார்க் என்ற இந்தி பத்திரிகை ஆகியவற்றிற்கு அனுமதி அளித்தார்.

அதேநேரத்தில் எதிர்க் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வெளிவரும் ஞான சக்தி என்ற பத்திரிகை மற்றும் ஆனந்தபஜார் பத்திரிகா, பரதமான் ஆகிய பத்திரிகைகள் வைக்க அனுமதிமறுக்கப் பட்டுள்ளது.

அரசின் இந்த முடிவிற்கு எதிர்க்கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து சட்டசபையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சார்பில் பிரச்சினை எழுப்பப்பட்டது. அதில் அரசும் இம்முடிவை திரும்ப பெற வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பிரிட்டன்,அவுஸ்திரேலிய தூதர்கள் ஜெயாவுடன் சந்திப்பு



பிரிட்டன், அவுஸ்திரேலிய தூதர்கள் நேற்று முன் தினம் தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்து தமிழ்நாட்டின் தொலை நோக்குத்திட்டம் 2023 இற்கு வாழ்த்தி பாராட்டுத் தெரிவித்தனர்.

டில்லியில் உள்ள இந்தியாவிற்கான பிரிட்டன் தூதர் ஜேம்ஸ் பீவன் மற்றும் சென்னையில் உள்ள துணைத் தூதர் மைக் நிரித விரியானாகீஸ் ஆகியோர் நேற்று முன் தினம் தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை நேரில் சந்தித்தனர். அப்போது தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்ற வைத்து முன்னேறிய மாநிலமாக தமிழகம் திகழ அரும்பாடுபடும் முதல்வரை ஜேம்ஸ் பீவன் பாராட்டினார். முதல்வரின் இத்தகைய முயற்சியில் தாங்களும் தங்கள் நாடும் பங்கு பெற ஆவலாக இருப்பதாவும் அவர் தெரிவித்தார்.

அதற்கு நன்றி தெரிவித்த முதல்வர் ஜெயலலிதா தமிழகத்தில் முதலீடு செய்ய ஆர்வமாக இருக்கும். அவர்களுக்கு தேவையான உதவி செய்ய அரசு நிர்வாகம் தயாராக இருப்பதாக தெரி வித்தார்.

அவுஸ்திரேலியத் தூதுவர் சந்திப்பு இதேபோல இந்தியாவிற்கான அவுஸ்திரேலியத் தூதர் பீட்டர்வர்க்கீசும் துணைத்தூதர் டேவிட் ஹோலி மற்றும் வர்த்தகத் துறை துணைத் தூதர் மைக்கேல் கார்ட்டர் ஆகியோர் நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை நேரில் சந்தித்தனர்.

முதல்வருடன் நடத்திய விவாகரத்தின் போது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அதிக வளர்ச்சி விகிதத்தை பெற்றுள்ள தமிழகத்தின் பங்கு மிகவும் முக்கியமானது என்றும் தமிழகத்தின் இந்த வளர்ச்சிப் பாதையில் தொழில்கல்விப்பயிற்சிகள், எரிசக்தி ஆழ்கடல் மீன் பிடிப்பு குறைந்த செலவிலான வீட்டுவசதிகட்டுமானம் மற்றும் கலாசார பரிமாற்றத் திட்டங்கள் போன்ற பலதுறைகளில் தமிழகத்துடன் ஒத்துழைப்பு அளிக்க தயாராகியிருப்பதாக பீட்டர் வர்க்கீஸ் தெரிவித்தார். இறுதியில் தமிழக வளர்ச்சியில் பங்கேற்க முன்வரும் அவுஸ்திரேலிய முயற்சிக்கு முதல்வர் ஜெயலலிதா நன்றி தெரிவித்தார். (அ-2)




# சூரியன் மீது வெள்ளிக்கிரகம் ஜூன் 6ஆம் திகதி பார்க்கலாம்

(சென்னை)

சூரியக்குடும்பத்தில் சூரியனில் இருந்து இரண்டாவதாக அமைந்துள்ள கிரகம் வெள்ளி.மிக்கும் சூரியனுக்கும் இடையில் இந்த கிரகம் சுழ ன்று வருகிறது. மி உட்பட எல்லா கிரகங்களும் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சுழல் கின்றன.

இதனால் சூரியன் கிழக்கு திசையில் உதித்து மேற்கில் மறைகிறது.

ஆனால், வெள்ளிக் கிரகம் மட்டும் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சுழல் கின்றது. இதனால் வெள்ளிக்கிரகத்தில் மட்டும் சூரியன் மேற்கு திசையில் உதிக்கும்.

இத்தகைய சிறப்புடைய வெள்ளிக் கிரகம் சூரியன் உதிக்கும் சமயத்திலும் சூரியன் மறையும் சமயத்திலும் அதிக பட்சத்தின் வெளிச்சத்தைக் காட்டி மிளிரும்.

இரவு நேரத்தில் சந்திரனுக்கு அடுத்தபடியாக நட்சத்திரங்களிலேயே வெள்ளி தான் அதிக ஒளியுடன் திகழும். வெள்ளி கிரகத்தின் நகர்தலை வைத்து அதை அழைக்கிறார்கள்.

சூரியன் இதுபுறம் வெள்ளி இருக்கும் போது வானத்தில் அது மேற்கு திசையில் காட்சி அளிக்கும்

எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி வெள்ளிக்கிரகம் மிக ஆர்வமான ஒரு நிலையில் காட்சியளிக்க உள்ளது. சூரியன் மீது வெள்ளிக்கிரகம் கறுப்பு பொட்டு போல தோன்றும். வெள்ளியின் சுழற்சி பாதையில் இத்தகைய நிகழ்வு மிக மிக அரிதாகவே ஏற்படும்.

சூரியன் மீது கறுப்பு பொட்டுபோல தோன்றும் வெள்ளி சிறிது நேரத்துக்குப் பின்னர் மெல்ல மெல்ல விலகும்.

இந்த அரிய அபூர்வக் காட்சியை சென்னை மக்கள் காணலாம்.

சென்னையிலுள்ள பிளானிடோரியத்தில் இதைக் காணலாம். சூரியன் மீது வெள்ளிக்கிரகம் கறுப்பு பொட்டு போல தோன்றும் நிகழ்ச்சிஇனி 105 ஆண்டுகளுக்கு பின்னரே நிகழ உள்ளது. ஆககையால் இப்போதைய தலைமுறையினர் இனி இதைக்கண்டு காண்பது அரிதாகும். (அ-2)

# அணு ஆயுதம் இல்லாத உலகமே அணுபாதுகாப்புக்கு உத்தரவாதம்

## மன்மோகன்சிங் ஆலோசனை

அணு ஆயுதம் இல்லாத உலகமே அணு பாதுகாப்புக்கு ஒரு சிறந்த உத்தரவாதம் என்று பிரதமர் மன்மோகன்சிங் ஆலோசனை கூறியுள்ளார். தென்கொரியா நாட்டின் தலைநகர் சியோலில் அணுபாதுகாப்பு உச்சி மாநாடு இரண்டுநாட்கள் நடைபெற்றது.

இந்தியா சார்பாக பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொண்டு உரையாற்றினார் அப்போது அவர் கூறுகையில், அணு ஆயுதம் இல்லாத உலகமே அணு பாதுகாப்புக்கு ஒரு சிறந்த உத்தரவாதம் என்று கூறி மேற்கத்தேய நாடுகள் மற்றும் சீனா நாடுகளின் நெற்றியில் ஒரு போடு போட்டார். அணு ஆயுதத்தை குறைக்கவும் அணு ஆயுதத்தை முதலில் பயன்படுத்துவதில்லை என்பதிலும் ஒரு சர்வதேச விதிமுறைகளை உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கினால் அணு ஆயுத உற்பத்தி குறையும். அணுபாதுகாப்புக்கு உத்தரவாதமும் கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

உலகில் அணு ஆயுத்தை அடியோடு ஒழிக்க ஒரு குறிப்பிட்ட கால வரம்பிற்குள் நடடிவக்கை எடுக்கக்கோரி இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு திட்டத்தை அமுல்படுத்த வலியுறுத்தினார்.



அணுஆயுதமற்ற உலகை உருவாக்க அணு ஆயுத நாடுகள் உள்ளடக்கிய ஒரு திட்டத்தையும் விதிமுறைகளையும் வகுத்து செயற்படுத்த வேண்டும். ஜெனீவாவில் நடைபெற்ற மாநாட்டில் அணு எரிபொருள் கழிவை அணு ஆயுதம் தயாரிக்க பயன்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தும் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதை விரைவில் அமுல்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் மன்மோகன் சிங். வலியுறுத்தினார். அணு விநியோக நாடுகள் குழு, ஏவுகணை தொழில் நுட்பம் மற்றும் கட்டுப்பாடு நாடுகள் கூட்டமைப்பு, அவுஸ் திரேலியா குழு உட்பட 4 அமைப்புகளில் இந்தியாவுக்கு உறுப்பினர் பதவி கொடுக்க வேண்டும் என்று மன் மோகன் சிங் வலியுறுதினார். அணு ஆயுதம் தொடர்பான உயர் தொழில் நுட்பம் பரவ இந்தியா ஒரு போதும் காரணமாக இருந்ததில்லை. அதேசமயம் சர்வதேச தரத்தில் எங்கள் நாட்டு தொழில் நுட்பத்தை ஏற்றுமதி செய்ய தயாராக இருக்கிறோம் என்றும் மன்மோகன் சிங்மேலும் கூறினார். (அ-2)

# இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே ஜெனீவா பிரேரணை நிறைவேற்றம்

## இலங்கை அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)—

**அமெரிக்காவின் தீர்மானமானது இலங்கையில் தேசிய இனங்கள் நீண்டகால நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதாகவே கொண்டுவரப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் ஜனாதிபதியின் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையினை முழுமையாக வாசித்துப் புரிந்து கொள்ளாதவர்களே இது சம்பந்தமான பிரச்சினைகளை உருவாக்குகிறார்கள் என கொழும்பிலுள்ள அமெரிக்க துாதரகத்தின் பணிப்பாளர் கிறிஸ்டோபர் ரீல் தெரிவித்தார்.**

மட்டக்களப்பிற்கு நேற்று முன்தினம் விஜம் செய்து உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்த ஜெனீவா மாநாட்டின் தாக்கம் உள்ளூர் பாதுகாப்பு நிலைமைகள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் தேசிய நல்லிணக்கம் உருவாவதற்கான பங்களிப்புக்கு அமெரிக்க நிலையம் தயாராக உள்ளது. ஜெனீவாவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமானது இலங்கையில் தேசிய இனங்கள் நீண்டகால நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்காகவே கொண்டுவரப்பட்டது.

அமெரிக்காவுக்கு தேசிய நல்லிணக்கம் தொடர்பில் 15 வருடமாக நீடித்த மோதலுக்கு பின்னர் உண்மையை கண்டறியும் குழுவின் முயற்சியின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட நல்லிணக்கம் இன்றும் நீடிக்கிறது.

அமெரிக்காவுடனான மாணவர் பரிமாற்றத் திட்டத்தில் கூடுதலாக பங்கெடுக்க வேண்டும். அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு வந்து அறிஞர்கள் பணிபுரிய வேண்டும். அத்துடன் இலங்கையிலிருந்து அதிகமானவர்கள் அமெரிக்கா சென்று கல்வி கற்க வேண்டும். அதேநேரம் சுற்றுலாத்துறை சார்ந்த விடயத்தில் சிறிய , நடுத்தர தொழில் துறைகளை ஆரம்பிப்பதற்கு அமெரிக்கா அதிகளவான அக்கறை கொண்டுள்ளது எனவும் தெரிவித்தார். அமெரிக்க நிலையத்தின் பணிப்பாளருடன் நிலையத்தின் கலாசார உத்தியோகத்தர் கொன்சலர்ஸ், அதிகாரி சாமினி சின்னையா ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-2)

## பாம்புக்கடிக்கு இலக்கானார்

புடையன் பாம்புக்கடிக்கு இலக்கான பாடசாலைச் சிறுமியொருவர் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பாம்புக்கடிச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கொழும்புத்துறை உதயபுரம் 10ஆம் குறுக்குத்தெருவில் இடம் பெற்றுள்ளது. அதே இடத்தினைச் சேர்ந்த பாடசாலையில் கல்வி கற்ற ஒருவரே பாம்புக்கடிக்கு இலக்கானவராவார்.

இதேவேளை தற்போது பாம்புக்கடி அதிகரித்து காணப்படுவதாகவும் இரவு வேளைகளில் வெளியில் செல்வோர் அவதானத்துடன் செல்லமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

பாம்பு கடித்தவுடன் அரச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் படியும் கடித்த பாம்பினை இயன்றளவிற்கு அடையாளம் காண வேண்டும் என யாழ்.போதனா வைத்திய சாலை மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். (அ-2-4)

# தந்தை செல்வா ஜனனதினத்தை யாழில் அனுஷ்டிக்க ஏற்பாடு

தந்தை செல்வாவின் 114 ஆவது ஜனன தின நிகழ்வுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.தந்தை செல்வா சதுக்கத்தில் அமைந்துள்ள அன்னாரது உருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்படுவதுடன் மாலை 3 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

இதன் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் ஏனைய கட்சிகளின் தலைவர்கள், தொண்டர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், உறுப்பினர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள்,தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், அரச ஊழியர்கள், வர்த்தக பிரமுகர்கள், அனைவரையும் இந் நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறும் தமிழர் விடுதலைக் கூட்டணி அழைப்பு விடுத்துள்ளனர். (அ-7)

# ஆயிரக்கணக்கான விவசாய நிலங்கள் மேய்ச்சல் தரைகளாக தரம்பிரிக்கப்பட்டன

## கிழக்கு முஸ்லிம் விவசாயிகள் கவலை

(மட்டக்களப்பு)

கிழக்கில் ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள முன்னாள் விவசாய நிலங்கள் கால்நடைகளின் மேய்ச்சல் தரையாக அதிகாரிகளால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு ஏறாவூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காணி பிரச்சினைகள் தொடர்பான நடமாடும் சேவையில் பெருமளவிலான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

ஏறாவூர்பற்று பிரதேசத்திலுள்ள சில பகுதிகளில் தமது குடியிருப்புக்கள் மற்றும் வயல் காணிகளின் உரிமை தொடர்பாக தொடர்ந்தும் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக இந்த நிகழ்வில் கலந்து கொண்ட மாகாண காணி அமைச்சர் விமலவீர திசாநாயக்கவிடம் முஸ்லிம் விவசாயிகள் முறையிட்டனர்.

போர்க் காலத்தில் முஸ்லிம்களினால் விவசாயத்தில் ஈடுபட முடியாமல்போன சுமார் 5000 ஏக்கர் பரப்பளவு கொண்ட வயல் நிலங்கள் கால் நடைகளின் மேய்ச்சல் தரையாக அதிகாரிகளினால் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் தங்களுக்கு அங்கு பயிர்ச் செய்கை மேற்கொள்ள அனுமதி மறுக்கப்படுவதாக முஸ்லிம் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதனையடுத்து பல தசாப்தங்களாக மக்களின் குடியிருப்பு பகுதிகளாகவும் விவசாய நிலங்களாகவும் விளங்கிய பிரதேசங்களை கால்நடைகளின் மேய்ச்சல் தரையாக அதிகாரிகள் அடையாளப்படுத்துவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவித்ததுடன் இவ்வாறான பிரச்சினைகளே மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு நியாயம் வழங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் போருக்கு பின்னர் சுதந்திரமான சூழ்நிலை காணப்படுவதாகக் கூறப்பட்டாலும் மூவினங்களும் செறிந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் காணிப்பிரச்சினை தொடர்ந்தும் பாரதூரமான விவகாரமாக இருப்பதாக மாகாண காணி அபிவிருத்தி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-7)

# பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளின்போது பொதுமக்கள் இழப்புக்களை ஏற்க முடியாது

## பிளேக் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலி பயங்கரவாத இல்லாதொழிப்பு நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக்கூடியது என்ற போதிலும் பொது மக்கள் இழப்புகளை அனுமதிக்கமுடியாது என தற்போதைய அமெரிக்க துணை இராஜாங்க செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் எனினும் அதற்காக பொது மக்கள் கொல்லப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என பிளேக் தற்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் அமெரிக்க தூதரக அதிகாரிகளினால் அந்நாட்டு இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட குறிப்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களை அமைதியான முறையில் சரணடைய செய்வதற்கு அமெரிக்கா முயற்சி மேற்கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. விசேட பிரதிநிதி ஒருவரின் ஊடாக சரணடைதல் தொடர்பில் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என பிளேக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் விசேட பிரதிநிதியை புலிகள் பணயக் கைதியாக சிறைபிடிக்க மாட்டார்கள் என்பதனை எவ்வாறு உறுதி செய்ய முடியும் என பசில் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியள்ளார். பொது மக்கள் உயிரிழப்புக்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென பிளேக் வலியுறுத்தியுள்ளார்.

விசேட பிரதிநிதி ஒருவரை யுத்த வலயத்திற்குள் அனுப்பி பிரபாகரனுடன் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தி பொதுமக்களை பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே அமெரிக்காவின் கோரிக்கை என அவர் அறிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி இந்தக் குறிப்பு இராஜாங்க திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

48 மணித்தியாலங்களுக்கு படையினரின் நடவடிக்கைகளை தற்பாதுகாப்பு நோக்கங்களுக்கு மட்டும் வரையறுக்க முடி யும் என இலங்கை அரசாங்கம் உறுதி மொழியளித்திருந்ததாக பிளேக் தெரிவித்துள்ளார். (அ-2)



கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இதில் இடம்பெற்ற கபடிப் போட்டியிலும் உதைபந்தாட்டப் போட்டியிலும் முதலாம் இடங்களைப் பெற்ற உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகத்தின் இரு அணியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

# தனிச்சிங்களச் சட்டம் சிறுபான்மை இன மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி

## களனி பல்கலை. தத்துவவியல் பேராசிரியர் எதிரிசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 1956 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட தனிச்சிங்கள மொழிச் சட்டத்தால் நாடு பாரிய பின்னடைவைச் சந்தித்தது. இது தமிழருக்கு மட்டுமல்ல நாட்டுக்கு இழைக்கப்பட்ட பெரும் அநீதி. இதனால் ஆங்கில மொழியை இழந்தோம். சமூக நல்லிணக்கத்தை இழந்தோம். நிம்மதியை இழந்தோம்.

இவ்வாறு களனிப் பல்கலைக்கழக தத்துவவியல் சிரேஷ்ட பேராசிரியர் தயா எதிரிசிங்க தெரிவித்தார். முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி கொழும்பில் நடத்திய சமயங்களுக்கிடையிலான நல்லிணக்க செயலமர்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 30 வருட கால போர் நிகழ்ந்து அமைதியை சமாதானத்தை இழந்து நிற்கிறது. அப்போர் சடுதியாக இடம் பெறவில்லை. போர் நடைபெறுவதற்கு பல்வேறு காரணங்களை கூறமுடியும். ஆனால் போரால் முழு இலங்கையையும் முழு சமூகம் பாதிக்கப்பட்டதென்பது உண்மை. அது கடந்தது. கடந்து விட்டது. இன்று நாம் அதற்கு என்ன செய்யலாம்? என்பது பற்றி ஆராய வேண்டும் போருக்கான ஒரு காரணம் மொழி உரிமை மறுக்கப்பட்டதாகும். எனவே மொழி பற்றிய முரண்பாட்டிற்கு தீர்வு காண வேண்டும்.

ஆங்கிலேய மொழி அவர்களது ஆதிக்கத்திலிருந்து சுதேசத்தை மீட்டெடுக்க எண்ணி 1956 இல் ஆட்சியாளர்களால் வரப்பட்ட தனிச் சிங்கள சட்டம் நாட்டிற்கு பாரிய பாதிப்பை உண்டு பண்ணியதை மறக்க முடியாது. இச்சட்டம் சிறுபான்மை தமிழ் சமூகத்துக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதி என்பதற்கப்பால் நாடு ஆங்கிலத்தை இழந்தது.

சகலரும் சிங்கள மொழியை பயிலக் கட்டாயப்படுத்தப்பட்ட காரணத்தினால் உயர் கல்வி பெறக் காரணமாக ஆங்கிலக் கல்வி மெது மெதுவாக நாட்டை விட்டு ஒதுங்கி கொண்டது.

1963 இல் பேராதனை பல்கலைக் கழகத்தில் இறுதி ஆங்கில மொழி மூல பாடநெறி இருந்தது. அதன் பின்னர் சகல நெறிகளும் சிங்கள, தமிழ் மொழி மூலங்களிலேயே இருந்தன. அதனால் அதன் பிறகு உயர் கல்வியை ஆங்கிலத்தில் தொடர முடியாத துர்ப்பாக்கிய நிலை நிலவியது.

இது துன் பமான நிகழ்வு. இது பாரிய இழப்பை ஏற்படுத் தியது. எமது நாட்டுக்கு அருகிலுள்ள இந்தியாவில் பல்வேறு இனங்கள் பல்வேறு மொழிகளை பேசுகின்றன. ஆனால் அமெரிக்காவை போல் தொழில் நுட்பத்தில் முன்னணியில் நிற்கின்றன. அதற்கு அடிப்படை காரணம் அங்கு அவர்கள் ஆங்கிலத்தை உபயோகிக்கின்றமை.

அமெரிக்காவுக்கே தொழில்நுட்ப வல்லுனர்கள் ஏற்றுமதி செய்கின்ற வல்லமை இந்தியாவுக்குரியது. அந்தளவுக்கு அவர்கள் ஆங்கில மொழியில் தொழில் நுட்பத்தை வளர்த்திருக்கின்றனர். இந்தியா எம்மை விட வறுமையானது தான். வறுமை என்பது அங்கு சனத்தொகை கூடியதனால் மட்டுமே தவிர அறிவியல் வறுமை அல்ல.

ஆனால் எம்மை பொறுத்தமட்டில் சனத்தொகையும் இல்லை. அறிவியலும் இல்லை அதற்கு காரணம் 1956 ஆம் ஆண்டு சட்டமே அன்று யாழ்ப் பாணத்தில் ஆங்கில மொழித் தேர்ச்சி பெற் றோர் ஏராளம். தமிழ் மக்கள். பொதுவாக ஆங் கிலத்தில் வல்லமை உடையவர்கள். மிஷனரிப் பாடசாலைகள் அங்கு ஆரம்பிக்கப்பட்டமையால் ஆங்கில அறிவுக்கு அங்கு பஞ்சமிருக்கவில்லை. ஆனால் இன்று யாழ். நிலைமை ஆங் கிலத்தில் கவலைக்குரியது யுத்தம் காரணமாக இளம் சந்ததி ஆங்கி லத்தில் தேர்ச்சி பெறத்தவறிவிட்டது.

ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து ஜனாதிபதி மும்மொழிக்கல்வியை போதனையை வலியுறுத்தியுள்ளார். நாட்டில் பல பாடசாலைகளில் இரு மொழிப்போதனை நடைபெறறு வருகின்றது. அந்தளவிற்கு இப்போது ஆங்கிலத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது என்றார். (அ-7)

# வடக்கு, கிழக்கு மீள்நிர்மாண பணிகளுக்கு 2006-2012 வரை 160 பில்லியன் செலவு

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தகவல்

கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை அரசாங்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மீள்நிர்மாண நடவடிக்கைகளுக்காக 160 பில்லியன் ரூபாவை செல்விட்டிருக்கிறது எனவும் பொருளாதார அபிவிருத்தி துறை அமைச்சின் மேலதிக செயலாளர் நிஹால் சமரவீர வடமாகாண மக்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் 15 மில்லியன் ரூபாவை செலவிட்டி ருக்கிறதென்று கூறினார்.

கிழக்கு மாகாணம் தேசிய பொருளாதாரத்திற்கு 6 சதவீத பங்களிப்பை இப்போது வழங்குகின்றது. இது வடமத்திய மாகாணம் மற்றும் ஊவா மாகாணம் பெற்றுக் கொடுக்கும் பங்களிப்பை விட கூடுதலாகும்.

வடமாகாணம் தேசிய பொருளாதாரத்திற்கு 3 சதவீத பங்களிப்பை வழங்குகின்றது. நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்வேறு அமைச்சுக்கள் பலதரப்பட்ட அபிவிருத்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. தற்போது பல குறுகிய கால திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன் நடுத்தர அளவிலான அபிவிருத்தி திட்டங்களும் இப்போது முடிவுபெறும் நிலையை எட்டியிருக்கின்றது.

மின்சார எரிசக்தி துறை அமைச்சு, நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு, நெடுஞ்சாலைகள் அமைச்சு, போக்குவரத்து அமைச்சு ஆகியன பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை வடக்கு, , கிழக்கு மாகாணங்களில் நடைமுறைப்படுத்தி வருகின்றன். இம் மாகாணங்களில் நடுத்தர அளவிலான அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்துமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதில் கண்ணிவெடி அகற்றுதல், மீள்குடியேற்றம், வாழ்வாதார அபிவிருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இலங்கை இராணுவம் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரை கண்ணிவெடி அகற்றுவதற்காக பயன்படுத்தி வருகின்றது. இவற்றிற்கு மேலதிக 6 அணிகள் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

அரசாங்கம் 800 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இவ்விரு மாகாணங்களில் உள்ள 250 கிலோமீற்றர் நீளமான புகையிரதப் பாதைகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இத்துடன் வடக்கு, கிழக்கின் மின் விநியோகத்திட்டத்திற்காக அரசாங்கம் 65 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் செலவிட்டுள்ளது.

இவ்வாண்டு இறுதிக்குள் யாழ். குடாநாடு தேசிய மின்விநியோக வலையமைப்பில் இணைத்து கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. அரசாங்கம் இரணைமடு நீர் விநியோகத்திட்டத்திற்கு ஆயிரத்து 64 மில்லியன் ரூபாவையும் வட மாகாண கிராமிய அபிவிருத்தி திட்டத்திற்கு 600 மில்லியன் ரூபாவையும் செலவிட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் அனைத்துமே 2013 ஆம் ஆண்டில் நிறைவுபெறும் என்று பொருளாதார அபிவிருத்தி துறை அமைச்சு தெரிவித்தது. (அ-2)

# கல்வி பொதுத் தராதர (சா/த) முன்னணிப் பெறுபேறுகள்

(நேற்றைய தொடர்ச்சி....)

யா/ அம்பன் அ.த.க.பாடசாலை

க.அனுஜா (5ஏ3பிஎஸ்), த.மனோகரன் (5ஏ2பிசிஎஸ்)

யா/ யாழ்ப்பாணக் கல்லூரி

*தமிழ்மொழிமூலம்*

எம்.பிரபு (9ஏ), பி.வைஷ்ணவன் (9ஏ), ரி.ஆதர்சனா (9ஏ), ஆர்.காயத்திரி (8ஏபி), பி.தர்சன் (8ஏசி),ஏ. டுனோர்கஸ் (7ஏ2பி), எஸ்.நிரோஜன் (6ஏ2பிசி), பி.யதுர்ஷனா (6ஏ2பிசி), எஸ்.லிங்கராஜ் (5ஏ4பி), பி.சிவ ரூபன் (5ஏ3பிசி)

*ஆங்கிலமொழிமூலம்*

ஏ.பாலமுரளிகிருஷ்ணா (9ஏ), எஸ். ராகு லன் (6ஏ3பி), பி.அபிராமி (6ஏ2பிசி), பி.சிந்து ராஜன் (5ஏபி3சி), கே.சாரங்கன் (4ஏ2பி2சி), எஸ்.சஜனா (4ஏ2பி2சி எஸ்), ரி.அபர்ணா (4ஏபி2சி2எஸ்), ஜே.ஹில்ரன் (3ஏ3 பி2 சிஎஸ்), வி.தேனுகா (3ஏ3பி2சிஎஸ்), எஸ். சுலக்ஷனா (3ஏ2பி3சிஎஸ்), எஸ்.ராஜினி (3ஏபி5சி), எஸ்.தினேசினி (3ஏபி3சிஎஸ்)

யா/இடைக்காடு மகா வித்தியாலயம்

*ஆங்கிலமொழிமூலம்*

க.தர்ஷிகா (7ஏ5பி), ந.கயேந்தினி (2ஏ 4சி3எஸ்), ம.கிரிசாந் (ஏ4பி3சிஎஸ்), க. சிவ தர்சன்(ஏ3பி5சி).

*தமிழ்மொழி மூலம்*

ச.சதிஸ்ஜா (6ஏபிசிஎஸ்), இ.கயேந்திரன் (5ஏ3பிஎஸ்).

யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியால யம்

க.பொ.த(சா/த) பரீட்சை-2011 பெறுபேறுகள்

மு.வாகீசன் (5ஏ2பிசிஎஸ்), கு.லக்சிகா (5ஏபிசி2எஸ்).

யா/ மத்திய கல்லூரி

எஸ்.சாமுவேல் (9ஏ), எஸ்.கோபிநாத் (8ஏசி), யு.கிருசாந் (7ஏ2பி),வி.பிரசாந் (7ஏபிசி), வி.பி.ஸ்ரீபன் (7ஏபிஎஸ்), கே.யதுசன் (7ஏபிஎஸ்), எஸ்.கஜரூபன் (6ஏ2பிசி), எஸ்.கபில்சன் (6ஏபிசி), கே.சஞ்சயன் (5ஏ3பிசி), வி.கவுத்யமன் (5ஏ2பி2சி), பி.விதுசன் (5ஏ3சிஎஸ்), யு.சங்கீத் (5ஏ2பி2சி), கே.யனகேசன் (5ஏபி2சிஎஸ்). (தொடரும்)


**கல்வாரிக் களம்**

சாவகச்சேரி ,கச்சாய் வீதி

புனித லிகோரியார் ஆலய

பங்கு மக்கள் தயாரித்து வழங்கும்

**"திருப்பாடுகளின் காட்சி"**

இடம்:- ஆலய வளாகம்

திகதி:- 30.03.2012-வெள்ளிக்கிழமை

நேரம்:- இரவு 7.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்

(8021)

மேடை

மேடை அலங்காரம்

ஒப்பனை ஒலி, ஒளி

சாள்ஸ்

மீசாலை

பங்குத் தந்தையும், பங்கு மக்களும்

நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே
– திருமந்திரம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## காளை மாட்டை பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள்

யாழ்ப்பாணத்தில் இப்போது காளை மாட்டு விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. திருநெல்வேலி அரச கால்நடைப் பண்ணையில் பராமரிக்கப்பட்டுவந்த ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த நல்லினக் காளை மாட்டை கொள்வனவு செய்தவர் அதனை இறைச்சிக்காக வெட்டுவது தொடர்பில்,

விளம்பரத் துண்டு பிரசுரங்கள் வெளியிட்டமை மற்றும் காளை மாட்டை காட்சி பொருளாக்கியமை தொடர்பில் இந்து மதத்தவர்கள் தங்கள் ஆழ்ந்த கவலையை யாழ்.அரச அதிபருக்குத் தெரிவித்தனர். இதனையடுத்து காளை மாடு வெட்டப்படுவது தடைசெய்யப்பட்டது.

காளை மாடு வெட்டப்படுவது தடைசெய்யப்பட்டால், அதனைக் கொள்வனவு செய்தவரிடம் இருந்து மீள்கொள்வனவு செய்து அதனைப் பராமரிப்பது கட்டாயமானதாகும்.

நியாயத்துவ அடிப்படையில் காளை மாட்டை கொள்வனவு செய்தவர், தனித்து நட்டமடைவதை அனுமதிக்க முடியாது. எனவே குறித்த காளை மாட்டை மீள்கொள்வனவு செய்து அதனை நல்லமுறையில்–இந்து மக்களின் வழிபாட்டுக்குரியதாக பராமரிக்கும் புண்ணிய பணியை இந்து அமைப்புகள் செய்தாக வேண்டும்.

இதில் யாழ்ப்பாணத்தில் இருக்கக் கூடிய வரலாற்றுப் பெருமைமிக்க சிவன் கோவில்கள் இந்தக்காளை மாட்டை பராமரிக்கும் பணியை மேற்கொள்ளலாம் என்பது பொதுவான கருத்தாக உள்ளது.

உதாரணமாக கீரிமலை தற்போது ஒரு சுற்றுலாத் தலமாக இருப்பதனால் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், குறித்த காளை மாட்டை பராமரிக்கும் பட்சத்தில் அங்கு செல்கின்ற யாத்திரியர்கள் மற்றும் பிதிர்கடன் நிறைவேற்றுபவர்கள் காளை மாட்டை பார்வையிடவும் – வழிபடவும்– அதற்கு பச்சிலைக் கொடுத்து நம்முன்வினை அறுக்கவும் வாய்ப்பு ஏற்படும்.

தேவையாயின் காளைமாட்டை பார்வை இடுபவர்கள் அதன் பராமரிப்புச் செலவுக்காக நிதி உதவியை செய்யவும் முன்வருவார்கள்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெட்டப்படவிருந்த அந்த மிகப்பெரிய காளை மாட்டின் உயிர் பாதுகாக்கப்பட்டதற்குள் ஏதோ ஒரு தெய்வீக சக்தி உண்டென்றே கருதவேண்டும்.

அந்தக் காளை மாட்டை பார்வையிடுபவர்கள் சிவாலயங்களின் பலிபீடத்தில் உள்ள கருங்கல்லாலான நந்தியைப்போல் இருப்பதாகக் கூறுகின்றனர்.

கடல் நீரில் உப்புக் கலந்திருப்பதை நாம் கண்களால் கண்டதில்லை. ஆனால் அதனை ஏற்றுக்கொள்கின்றோம் அல்லவா?

அதுபோல, வெட்டப்படவிருந்த இந்தக் காளை மாடு காப்பாற்றப்பட்ட சந்தர்ப்பம், அதன் உயரம், அதன் வடிவம் யாவும் அதற்குள் ஏதோவொரு தெய்வீகச் சக்தியிருப்பதை உணர்த்துகின்றது.

எனவே இந்தக் காளை மாட்டை, சிவாலயத்தில் வைத்து பராமரிப்போம். அது பெரும் புண்ணியப் பேறாகும். வாருங்கள்.

# காணாமல்போன குகனின் குடும்பத்தினருக்கு மிரட்டல்

(கொழும்பு)

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலும், இலங்கை அரசு தனது மனித உரிமை மீறல்கள் செயற்பாட்டை நிறுத்தவில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மறுநாளே யாழில் கடத்தப்பட்ட மக்கள் போராட்ட இயக்கச் செயற்பாட்டாளர் குகனின் மனைவி, பிள்ளை ஆகியோருக்கு இராணுவத்தினர் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர் என்று கடத்தல் மற்றும் காணாமல்போதலுக்கு எதிரான ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் முக்கியஸ்தரும் மக்கள் போராட்ட இயக்கத்தின் செயலாளருமான ஜயக்கொடி தெரிவித்துள்ளதாவது,

'மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்பாட்டாளர்களான லலித் மற்றும் குகன் ஆகிய சகோதரர்கள் யாழ்ப்பாணத்தில் வைத்து கடத்தப்பட்டு மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. அவர்களை இராணுவத்தினரே கடத்தி வைத்துள்ளனர்.

தனது கணவரின் விடுதலைக்காகப் போராடிவரும் குகனின் மனைவிக்கும் இராணுவத்தினர் கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

கடந்த 23 ஆம் திகதி அச்சுவேலியில் உள்ள குகனின் வீட்டுக்கு சென்ற நான்கு இராணுவத்தினர் குகனின் மனைவியிடம் சிங்களத்தில் ஒரு படிவத்தைக் கொடுத்து அதில் கையெழுத்திடுமாறு கூறியுள்ளனர்.

இதற்கு அவர் மறுத்துவிட்டார். இதனால் அவரையும் அவரது குழந்தையையும் புகைப்படம் எடுத்துச் சென்றுள்ளார்கள்.

இதன் பின் குகனின் மனைவி பாதுகாப்புக் கருதி கொழும்புக்கு வந்துவிட்டார். மீண்டும் இராணுவத்தினர் அச்சுவேலி இல்லத்திற்குச் சென்று அவரைத் தேடி இருக்கின்றனர். அவரது உறவினர்களிடம் விசாரித்திருக்கின்றனர். அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்திருக்கின்றனர்' என்றார்.

இது தொடர்பாக மேற்படி அமைப்பின் முக்கியஸ்தரும் ஐக்கிய சோஷலிஸ கட்சியின் செயலாளர் நாயகமுமான சிறிதுங்க ஜயசூரிய கூறியவைவருமாறு,

'இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து ஜெனிவாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் கூட இங்கு மனித உரிமை மீறல்கள் தொடரவே செய்கின்றன. ஜெனிவாத் தீர்மானத்தைக் காட்டி மகிந்த அரசு தெற்கு சிங்கள மக்களை பிழையாக வழி நடத்துகின்றது' என்றார் ஐக்கிய சோஷலிச கட்சியின் செயலாளர் நாயகமான சிறிதுங்க ஜயசூரிய.

இதேவேளை, இது தொடர்பில் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் கூறியவை வருமாறு,

'அரசியல் தலையீடு இல்லாவிட்டால், எமது பொலிஸார் குற்றவாளிகளை 24 மணிநேரத்திற்குள் கைது செய்து விடுவர். ஆனால், அரசியல் தலையீடு இருப்பதால் அவர்களால் குற்றவாளிகளையோ, காணாமல்போனவர்களையோ கண்டுபிடிக்க முடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட மக்கள் போராட்ட இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள் இருவரும் உயிருடன்தான் உள்ளனர் என்று நாம் நம்புகின்றோம்.

அவர்களை விடுவிக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதை விட்டுவிட்டு கடத்தப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு கொலை மிரட்டல் விடுப்பது பிரச்சினையை மேலும் பெரிதாக்கும்' என்றார் கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன். (எ–1)

## பல்கலைக்கழக மாணவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஒருவர் வடமராட்சி கிழக்கு கடலில் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தார்.

இச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவத்தில் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முள்ளியானைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை றொபேர்ட் எல்ட்டன் (வயது 27) என்பவரே உயிரிழந்தவராவார்.

நண்பர்களுடன் கடலில் குளித்துக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி குறித்த இளைஞன் உயிரிழந்தார் என ஒரு சாராரும் கடற்றொழிலுக்குச் சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்தார் என ஒரு சாராரும் தெரிவிக்கின்றனர்.

காலை 9 மணியளவில் குறித்த இளைஞன் கடலில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட போதும் பிற்பகல் 2 மணி வரை சடலம் கடற்கரையைவிட்டு அப்புறப்படுத்தப்படவில்லை.

பொலிஸார் வந்து விசாரணை மேற்கொள்ளும் வரை சடலத்தை அந்த இடத்தைவிட்டு அப்புறப்படுத்த குறித்த இளைஞனின் பெற்றோர் சம்மதம் தெரிவிக்காததனாலேயே இவ்வாறு சடலம் அந்த இடத்திலேயே காணப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் பட்டப்படிப்பு மேற்கொண்டு இறுதிப் பரீட்சை எழுதிவிட்டு குறித்த இளைஞன் வீட்டில் இருந்தார் என பெற்றோர் தெரிவித்தனர்.

இளைஞனின் மரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ–6)

## தொலைபேசிக் கம்பம் முறிந்ததால் இணைப்புகள் செயல் இழந்தன

(யாழ்ப்பாணம்)


வீதியோரமாக இருந்த தொலைபேசி இணைப்புக் கம்பம் திடீரென முறிந்து கீழே விழுந்ததனால் போக்குவரத்து தடைப்பட்டதுடன் தொலைத்தொடர்பு சேவைகளும் செயலிழந்தன.

இந்த சம்பவம் நேற்று முற்பகல் 10.15 மணியளவில் நாவலர் வீதியும் கஸ்தூரியார் வீதியும் இணையும் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

வீதியின் குறுக்கே தொலைபேசிக் கம்பம் முறிந்து விழுந்து கிடந்ததையும் பொருட்படுத்தாது பலர் தமது வாகனத்தை கம்பத்தின் மேலாக செலுத்தியதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை தொலைபேசிக் கம்பம் முறிந்து கீழே விழுந்ததனால் தொலைபேசி இணைப்புவயர்கள் வீதியின் குறுக்கே போக்குவரத்துக்கு இடையூறாக கிடப்பதை அவதானிக்காத வாகனச் சாரதிகள் வேகமாக தமது வாகனங்களை செலுத்தியதால் தொலைபேசி வயர்கள் சேதமடைந்தன.

இவ்வாறு சேதமடைந்த இணைப்புகளை திருத்தும் பணிகள் நேற்றிரவு வரை மேற்கொள்ளப்பட்டன. (அ–6)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## ஆரத்தி எடுப்பதன் பின்னுள்ள இரகசியம் என்ன?

விஞ்ஞானமும் நவீனவாதமும் முற்போக்கு வாதமும் எல்லாம் நம் சமூகத்தில் மிகவும் செல்வாக்கு செலுத்தியிருந்த போதிலும் சில நம்பிக்கைகள் இன்றும் தவிர்க்க முடியாதவையாக நீடித்து நிற்கின்றன. இதில் ஒன்றுதான் ஆரத்தி எடுப்பது.

தூரத்துப் பயணங்கள் கழிந்து வரும் குடும்பத்தினர் திருமணம் முடிந்து மணமகன் வீட்டுக்கு வரும் தம்பதிகள், மகப்பேறு முடிந்திருக்கும் தாய் முதலியோரைப் பொதுவாக ஆரத்தி எடுப்பதுண்டு.

தண்ணீரில் மஞ்சள் அரைத்துச் சேர்த்து அதில் சிறிது சுண்ணாம்பு சேர்க்கின்றனர். மஞ்சளும் சுண்ணாம்பும் கலந்த தண்ணீருக்கு சிவப்பு நிறம் வருகின்றது.

இதை ஒரு பரந்த பாத்திரத்தில் எடுத்து அதற்கு இரு பக்கங்களிலும் இரண்டு தீச்சுடர்கள் எழுப்பி சம்பந்தப்பட்ட நபரின் உடலுக்குச் சுற்றும் மூன்றுமுறை சுற்றிவிடுவதையே ஆரத்தி என்று கூறுகின்றோம்.

மஞ்சள் மற்றும் சுண்ணாம்புக்கு கிருமிகளை அழிக்கும் திறன் உண்டு என்பதை நாம் கண்டறிந்துள்ளோம். அந்தநபரின் மேல்வந்து சேர்ந்திருக்கும் விஷ அணுக்களை அழிப்பதே ஆரத்தியின் உத்தேசம்.

# ஒலிம்பிக் போட்டியில் சயனைட் மூலம் பொதுமக்களை கொல்ல சதித்திட்டம்

## த சன் பத்திரிகை அதிரடித் தகவல்

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் எதிர் வரும் ஜுலை மாதம் 27ஆம் திகதி ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகள் நடைபெற உள் ளன.

இதற்கான ஏற்பாடுகள் வெகு விமரிசை யாக நடந்து தற்போது இறுதி கட்டத்தை அடைந்துள்ளது.

ஏற்கனவே தீவிரவாத அச்சுறுத்தல் இருப் பதால் இங்கிலாந்து பாதுகாப்புப் படையினர் பொலிஸ் கொமாண்டோக்கள் தீவிர கண்கா ணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஒலிம்பிக் போட்டிக்கு வரும் வீரர்கள், பார்வையாளர்களை சயனைட்மூலம் கொல்ல அல்கொய்தா தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக தி சன் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் கூறியிருப்பதாவது, சயனைட் மூலம் எப்படி தாக்குதல் நடத்துவது என்பது குறித்து விரிவான திட்டத்தை 2 தீவிரவாதிகள் இணையதளங்களில் வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் 2 பேரும் சமீபத்தல் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டவர்கள். கைகளுக்கு தடவிக் கொள்ளும் ஸ்கின் கிரீம்களில் சயனை ட்டை கலந்து மற்றவர்களுக்கு வழங்க தீவிர வாதி கள் திட்மிட்டுள்ளனர்.

கீரிம்களில் சயனைட் கலக்கும் போது கைகளில் கிளவுஸ் அணிந்து கெள்ளுங்கள் என்று சக தீவிரவாதிகளுக்கு யோசனை தெரி வித்துள்ளனர்.

தோல் மூலம் கிரீமில் உள்ள சயனைட் உடலுக்குள் செல்லும். அதன் மூலம் பலர் இறப்பார்கள் என்று அபு ஹிஜா அன்சாரி என்ற தீவிரவாதி திட்டம் தீட்டி கொடுத்துள்ளார்.

கடைசியில் இந்த தாக்குதல் திட்டம் மிக சிறந்தது. இதை கச்சிதமாக செய்து முடிக்க வேண்டும் என்று அரபு மொழியில் கூறியு ள்ளனர். (அ-2)

## 10 பேர் உயிரிழப்பு; 50 வாகனங்கள் நாசம்

பாகிஸ்தானின் கராச்சி நகரில் ஏற்பட்ட வன்முறையில் 10 பேர் கொல்லப்பட்ட தாகவும் அரசுப் பேருந்துகள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரை யானதாகவும் தகவல்கள் வெளியாகியுள் ளன.

பாகிஸ்தானின் முத்தாகிதா குவாமி இயக்கம் எனப்படும் கட்சியின் உள்ளூர் தலைவர் மன்சூர் முக்தார் என்பவர் தனது வீட்டு வளாகத்திலேயே சில மர்ம நபர்க ளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த அவரது ஆத ரவாளர்கள் திடீர் வன்முறையில் இறங்கி னர். கராச்சியின் முக்கிய நகரங்களில் இந்த வன்முறை சம்பவங்கள் நடந்தன.

இதில் 10 பேர் கொல்லப்பட்டதாகவும் அரசுப் பேருந்துகள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரையானதாக வும் உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. (அ-2)

# துருக்கியில் ஹிட்லர் ஷம்பூவிற்கும் விளம்பர படத்துக்கு எதிர்ப்பு

ஜேர்மனியின் சர்வாதிகாரியாக திகழ்ந் தவர் அடால்ப் ஹிட்லர். இவரது வீடியோ காட் சிகள் மூலம் துருக்கியை சேர்ந்த ஒரு ஷம்பூ நிறுவனம் விளம்பர படம் தயாரித்துள்ளது. அதில் ஹிட்லர் தலைமையில் பேரணி நடக் கிறது. அதில் பங்கேற்றுள்ளவர்களிடம் பெண் கள் பயன்படுத்தும் ஷம்பூவை ஆண்கள் கட்டாயம் பயன்படுத்தக் கூடாது. இந்த விளம் பரம் தயாரித்த ஷம்பூவைதான் அவர்கள் பயன்படுத்த வேண்டும் என உத்தரவிடுவது போன்று உள்ளது.

கறுப்பு, வெள்ளையில் தயாரிக்கப்பட்ட இந்த விளம்பரம் சுமார் 13 விநாடிகள் ஓடுகி றது. இதற்கு துருக்கியில் வாழும் யூதர்களின் மத்தியில் கொந்தளிப்பையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து இஸ்தான்புல்லில் இருந்து ஒளிபரப்பாகும் யூதர் மத வெப்சைட்டில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் இந்த விளம்பரம் அபத்தமானது. இலட்சக்கணக் கான் மக்களை கொன்று குவித்த ஹிட்லரை மையமாக வைத்து விளம்பரம் தயாரித்து இருப்பது கண்டனத்துக்குரியது.

எனவே, இதை அந்த ஷம்பூ நிறுவனம் வாபஸ் பெறவேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது. இதுகுறித்து கருத்து தெரிவித் துள்ள ஷம்பூ நிறுவனம் நகைச்சுவை உண ர்வுடன்தான் இந்த விளம்பரம் தயாரிக்கப் பட்டுள்ளது. அதில் உள்நோக்கம் இல்லை என தெரிவித்துள்ளது. (அ-2)




இந்தோனேசியாவில் பெற்றோல் விலையை அரசு உயர்த்தியதை கண்டித்து வடக்கு சுமத்ரா தீவில் மாணவர்கள் ரயர்களை கொளுத்தி வன்முறையில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

# உலக தரிசனம்

## சீனா, இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது தடைவிதிப்பது குறித்து முடிபெடுக்கப்படும்

(வோஷிங்டன்)

ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்து வரும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் மீது பொருளாதாரத் தடை கள் விதிப்பது குறித்து விரைவில் முடிவெடுக் கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஈரானின் அணுசக்தி திட்டங்களை சந்தே கித்து வரும் அமெரிக்கா சர்வதேச அரங்கில் அந்நாட்டைத் தனிமைப்படுத்த பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. மேலும் அந்நாட்டிற்கு நெருக்டி கொடுக்கும் வகையில் அந்நாட்டிடம் இருந்து கச்சா எண் ணெய் இறக்குமதி செய்யும் நாடுகள் மீதும் பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவ தாக சமீபத்தில் தெரிவித்தது.

இதை உறுதிப்படுத்தும் விதத்தில் அமெ ரிக்க வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர் பாளர் விக்டோரியா நுலண்ட் நேற்று முந்தி னம் அளித்த போட்டியில் கூறியதாவது,

ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் நாடுகளிடம் இறக்குமதியை குறை ப்பது குறித்து பேசி வருகின்றோம். இதில் இறுதி முடிவு எடுப்பதற்கு இன்னும் 180 நாட் கள் உள்ளன. அதுவரை அந்நாடுகளிடம் தொடர்ந்து பேசுவோம். ஜுன் மாத இறுதிக்குள் அந்நாடுகள் மீது பொருளாதாரத் தடைகள் விதிப்பது குறித்து வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் முடிவெடுப்பார் என அவர் தெரிவித்தார்.

- (அ-2)

# சிரிய வன்முறையை முடிவுறுத்த ஐ.நாவின் ஆறு அம்ச திட்டம்

சிரியாவில் நடந்து கொண்டிருக்கும் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வரச் செய்யும் ஆறு அம்சத்திட்டத்தை சிரியா ஏற் றுக் கொண்டுள்ளது. இத்தகவலை ஐ.நா. மற் றும் அரபு லீக்கின் தூதராக செயற்படும் கோபி அன்னானின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆறு அம்ச திட்டத்தில் ஐ.நா. கண் காணிப்பின் கீழ் போர் நிறுத்தம் செய்வது எதிர்க்கட்சியினர் கட்டுப்பாட்டில் இருக்கும் நகரங்களில் இருந்து அரச துருப்புக்களை திரும்பப் பெறுவது மனித நேயப் பணிகளை மேம்படுத்துவது போன்றவை அடங்கும்.

மேலும் இந்தத் திட்டத்தின் வெற்றி அது எந்த அளவுக்கு முறையாக அமுல்படுத்தப் படுகிறது என்பதைப் பொறுத்தே அமையும் என்றும் கோபி அன்னானின் பேச்சாளர் கூறியுள்ளார்.

இத்திட்டத்திற்கு சீனாவும் ரஷ்யாவும் ஆத ரவு அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சிரியாவில் நடந்த தாக்கு தல்களில் இதுவரை 9 ஆயிரத்திற்கும் மேற் பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா. தெரி வித்துள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் அப்பாவி பொதுமக்கள் ஆவர். (அ-2)

# வானிலை ஆய்வுக்காகவே செயற்கைக்கோள் ஏவுகிறோம்

வடகொரியா தங்களது நாட்டின் நிறு வுனரின் நூற்றாண்டு விழாவை முன்னி ட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் செயற்கைக் கோளை தாங்கிய ரொக்கைற்றை ஏவப் போவதாக அறிவித்தது.

இதற்கு தென்கொரியா, ஜப்பான் ஆகிய நாடுகள் கடுமையான எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

அணு ஆயுத ஏவுகணை சோதனைக் காகவே இதை நடத்த திட்டமிட்டு இரு ப்பதாக குற்றம் சாட்டுகின்றன.

சியோலில் நடைபெறும் உலக தலை வர்கள் மாநாட்டில் இது பெரிய விதமாக இடம்பெறுகின்றது.

இந்நிலையில் வடகொரியா அர சாங்கம் சார்பில் தற்போது திடீர் விளக்கம் அளிக்கப்பட்டது. அதில் வானிலை ஆய்வு நோக்கத்துடன் தான் செயற்கைக் கோளை ஏவுவதற்கு திட்டமிட்டிருக்கிறோம்.

விவசாயம் மற்றும் பொருளாதார வள ர்ச் சிக்கு வானிலை ஆய்வு அவசியமாகும் என்று தெரிவித்துள்ளது. (அ-2)

# ஜப்பானில் 6.3 ரிக்டரில் பூமியதிர்வு மக்கள் அச்சத்தில் தப்பியோட்டம்

ஜப்பானில் நேற்று முன்தினம் மீண்டும் பலத்த நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் அச்சத்தில் உறைந்தனர். வடகிழக்கு ஜப்பா னில் உள்ள ஹோன்சு தீவில் ஏற்பட்ட நிலந டுக்கத்தால் தலைநகர் டோக்கியோவில் வீடு கள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. இதனால் அச்சம் அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் வந்து நின்று கொண் டனர். இந்நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 630 ஆக பதிவானதாக அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்நிலநடுக்கத்தின் காரணமாக வழக்க த்தை விட மிகப்பெரிய அளவில் கடல் அலைகள் எழும்பின. எனவே, சுனாமி ஏற்படலாம் என்று மக்கள் அச்சமடைந்தனர். ஆனால், சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. (அ-2)

# காலி டெஸ்ட்; இங்கிலாந்து அணிக்கு 340 ஓட்ட இலக்கு



இலங்கை அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெறுவதற்கு இரண்டாவது இன்னிங்ஸில் 340 ஓட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி கடந்த திங்கட்கிழமை காலியில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல்நாள் ஆட்ட நேர முடிவில் 90 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 289 ஓட்டங்களை எடுத்திருந்தது.

2-ம்நாள்தொடர்ந்து விளையாடிய இலங்கை அணி 318 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. ஜெயவர்த்தன 180 ஓட்டங்களை எடுத்தார்.


இங்கிலாந்து அணி தரப்பில் ஜேம்ஸ் அண்டர்சன் 5 விக்கெட் வீழ்த்தினார். பின்னர் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸை தொடங்கியது.

இலங்கை அணியின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் இங்கிலாந்து அணி 193 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சுருண்டது.

இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக இயன் பெல் 52 ஓட்டங்களை எடுத்தார்.

இலங்கை தரப்பில் ரங்கன ஹேரத் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தி அசத்தினார். இலங்கை அணி 125 ஓட்டங்கள் முன்னிலையில் தனது 2-வது இன்னிங்ஸை தொடங்கியது.

நேற்று முன்தின ஆட்டநேரமுடிவில் இலங்கை அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களை எடுத்திருந்தது.



இதையடுத்து ஆட்டத்தின் 3-ம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 214 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இலங்கை அணியின் சார்பில் ஆகக் கூடுதலாக பிரசன்ன ஜெயவர்த்தன ஆட்டமிழக்காமல் 61 ஓட்டங்களைப் பெற்றார். இங்கிலாந்து பந்துவீச்சாளர்களில் கிறேம் சுவான் 82 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

மொன்டி பனேசர் 59 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஸ்ருவெட் பிரோட் 33 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்நிலையில் இங்கிலாந்து அணி வெற்றி பெறுவதற்கு இரண்டாவது இன்னிங்ஸில் 340 ஓட்ட இலக்கு இலங்கை அணியால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து 2-வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய இங்கிலாந்து அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஸ்றொரஸ் 27 ஓட்டங்களையும் குக் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

திரோட் 40 ஓட்டங்களுடனும் பீற்றர்சன் 29 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

போட்டியின் 4-ம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# தொடரை வென்றது தென்னாபிரிக்கா



நியூசிலாந்து அணிக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியது.

நியூசிலாந்து தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே மூன்று இருபது - 20 போட்டிகள், மூன்று ஒருநாள் போட்டிகள், மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் நியூசிலாந்தில் நடைபெற்று வந்தது.

ஒருநாள் போட்டிகள் மற்றும் இருபது - 20 போட்டிகள் முடிந்த நிலையில் அடுத்து நடைபெற்ற இரண்டு டெஸ்ட் போட்டிகளில், முதல் போட்டி சமன் செய்யப்பட்டது. இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இரண்டு போட்டிகள் முடிந்த நிலையில், மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கியது. இரு அணிகளும் மோதிய இந்த கடைசி டெஸ்ட் போட்டி வெலிங்டனில் நடைபெற்றுவந்தது.

தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸில் 474 ஓட்டங்களைக் குவித்தது. நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 275 ஓட்டங்களை எடுத்தது.

இதனையடுத்து 199 ஓட்டங்கள் முன்னிலையில் 2-வது இன்னிங்ஸை விளையாடிய தென்னாபிரிக்க அணி 4ஆவது நாள் ஆட்டநேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 75 ஓட்டங்களை எடுத்திருந்தது.

கடைசிநாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி தொடர்ந்து விளையாடி 3 விக்கெட் இழப்பிற்கு 189 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதனால் நியூசிலாந்து அணிக்கு 389 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஏபி டி வில்லியர்ஸ் 68, கிரேம் ஸ்மித் 41, அல்விரோ பீற்றர்ஸன் 39 ஓட்டங்களை குவித்தனர்.

நியூசிலாந்து தரப்பில் டக் பிரஸ்வெல், டானியல் விட்டோரி ஆகிய இருவரும் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

389 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு நியூசிலாந்து அணி 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்தது.

மோர்னி மோர்க்கலின் அபாரமான பந்துவீச்சால் நியூசிலாந்து அணியின் விக்கெட்டுக்கள் மளமளவென சரிந்தன. ஒரு கட்டத்தில் 83 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

கேன் வில்லியம்ஸன், வான் வியூக் ஜோடி சிறிது தாக்குப் பிடித்து ஆடியது. அணியின் எண்ணிக்கை 163 ஆக இருந்தபோது 6-வது விக்கெட்டாக வான் வியூக் 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இந்த விக்கெட்டையும் மோர்னி மோர்க்கலே கைப்பற்றினார். வில்லியம்ஸன் தோல்வியை தவிர்க்கப் போராடினார்.

இறுதியில் 5-ம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. 4 விக்கெட்டுக்கள் மீதமுள்ள நிலையில் வில்லியம்ஸனின் அபாரமான சதத்தால் நியூசிலாந்து அணி தோல்வியிலிருந்து நழுவி, போட்டியை சமன் செய்தது.

நியூசிலாந்து அணியில் கேன் வில்லியம்ஸன் 102 ஓட்டங்களுடனும் டக் பிரஸ்வெல் 20 ஓட்டங்களுடனும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் களத்திலிருந்தனர்.

தென்னாபிரிக்க. தரப்பில் மோர்னி மோர்க்கல் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதன்மூலம் தென்னாபிரிக்க அணி 1:0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. ஏற்கெனவே 20 ஓவர் போட்டி, ஒருநாள் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பல்கலை நடத்தும் கிரிக்கெட் போட்டி; முதல் போட்டியில் கே.சீ.சீ.சீ வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் நடத்தும் 2012ஆம் ஆண்டுக்கான 50 பந்து பரிமாற்ற அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதலாவது போட்டியில் யாழ்.பல்கலைக் கழக அணியும் கே.சீ.சீ.சீ. விளையாட்டு கழக அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். பல்கலைக்கழக அணி கே.சீ.சீ.சீ அணியை துடுப்பெடுத்தாட அழைத்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சீ. சீ.சீ. விளையாட்டுக் கழக அணி 40.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அதிகபட்சமாக கே.சீ.சீ.சீ. அணியின் சிலோஜன் 41 ஓட்டங்களையும், கிருபவன் 29, துஷியந்தன் 21 மற்றும் உமாநாத் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பல்கலைக்கழக அணி சார்பாக கிரிசாந்தன் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் விதுஷ் 34 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் ஜனார்தனன் 42 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அடுத்து 176 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் யாழ்.பல்கலைக் கழக அணி பதிலெடுத்தாடியது.

ஆனால் யாழ்.பல்கலைக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களையே பெற, கே.சீ.சீ.சீ. அணி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக அணி சார்பாக ஜனார்த்தனன் 38 ஓட்டங்களையும்தறன்ஜி 32 ஓட்டங்களையும் லவன் 17 ஓட்டங்களையும் பெற்ற அதேவேளை,

கே.சீ.சீ.சீ யின் உமாகாந் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சாம்பவன் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும், பிரதீஸன் 25 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தி கே.சீ.சீ.சீ (கொக்குவில் மத்திய சன சமூக நிலையம்)யின் வெற்றிக்கு உதவினர்.

# மேற்கிந்தியத் தீவுகளுடனான தொடரை சமன் செய்தது அவுஸ்திரேலியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கான அவுஸ்திரேலியச் சுற்றுலாவின் ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களின் அதிரடி ஆட்டத்தை முறியடித்து அவுஸ்திரேலிய அணி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இதன்காரணமாக 5 போட்டிகள் கொண்ட தொடர் 2:2 என்ற கணக்கில் சமனிலையில் நிறைவடைந்துள்ளது.

சென்.லூசியாவில் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 281ஓட்டங்களைப்பெற்றது.

துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய அணி சார்பில் டேவிட் வேர்னர் 69 ஓட்டங்களையும், அணித்தலைவர் ஷேன் வோட்சன் 66 ஓட்டங்களையும், பீற்றர் பாரஸ்ட் 53 ஓட்டங்களையும், மத்யூ வேட் இறுதிநேரத்தில் 17 பந்துகளில் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்திய அணி சார்பில் அன்ரூ ரசல் 4 விக்கெட்டுக்களையும், கேமர் றோச்3, சுனில் பிலிப் நரேன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

282 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி ஆரம்பம் முதல் விக்கெட்டுக்களை இழந்து வெகுவாகத் தடுமாறியது. 31.1 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 118 ஓட்டங்கள் பெற்று தடுமாறிய மேற்கிந்தியத் தீவுகள் அணியை ரசல் மற்றும் டரன் சமி ஜோடி போராடக் கூடிய அளவுக்கு எடுத்துச் சென்றது. 41-வது ஓவரில் ரசல் 8ஆவது விக்கெட்டாக




219 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தபோதிலும் அணித் தலைவர் டரன் சமி தொடர்ந்து போராடினார். எனினும் இறுதி விக்கெட்டாக அவர் 251 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டமிழக்க மேற்கிந்தியத் தீவுகளின் போராட்டம் தோல்வியில் முடிபடைந்தது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் சமி 50 பந்துகளில் 84 ஓட்டங்களையும், அட்ரியன் பரத் 74 பந்துகளில் 42 ஓட்டங்களையும் அன்ரூ ரசல் 33 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஆஸி சார்பில் பிறெட் லீ 3விக்கெட்டுக்களையும் வோட்சன், டோஹெர்டி, மெக்காய் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் டரன் சமியும், போட்டித் தொடரின் தொடர் நாயகனாக மேற்கிந்தியத் தீவுகளின் கிரான் பொல்லார்டும் தெரிவாகினர்.

## அரசிலிருந்து வெளியேற ...

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய கால்நடைகள் அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர் ஒருவரின் நியமனம் தொடர்பில் எழுந்த முரண்பாட்டை அடுத்து அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

பணிப்பாளர் நியமன விவகாரத்தால் ஜனாதிபதிக்கும் அமைச்சர் தொண்டமானுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது என்றும், இதனையடுத்தே தொண்டமான் இவ்வாறனதொரு முடிவில் இறங்கியதாக கூறப்படுகின்றது.

தொண்டமானின் இந்த அறிவிப்பபை அடுத்து அவரை சமாதானப்படுத்தும் நோக்கில் சிரேஷ்ட அமைச்சர்களில் சிலர் சமரசப் பேச்சுகளில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் இந்த விடயம் தொடர்பில் அந்த அமைச்சர்கள் ஜனாதிபதியுடனும் கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதியுடன் சிரேஷ்ட அமைச்சர்கள் கலந்துரையாடும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர், பலவந்தமாக எவரையும் தாங்கிக் கொண்டிருக்க வேண்டிய தேவைப்பாடு எமக்குக் கிடையாது.

தொண்டமான் அரசிலிருந்து வெளியேற விரும்பினால் வெளியேறட்டும்.

அதில் எமக்கு எதுவித ஆட்சேபனையுமில்லை. வெளியேறுவதற்கு கதவு திறந்தே வைக்கப்பட்டுள்ளது.

தொண்டமான் என்னிடம் இராஜினாமாக் கடிதம் சமர்ப்பிக்கவில்லை.நான்தான் ஜனாதிபதி..

அப்படியானால் அவர் வேறு எவரிடமாவது அதைச் சமர்ப்பித்திருப்பார்.இதற்கு முன்னரும் பல தடவைகள் அவர் இந்த பல்லவியைப் பாடியுள்ளார்.ஆனால் சொன்னதைச் செய்யவில்லை. எனவே அரசிலிருந்து வெளியேற விரும்புவோர் தாராளமாக வெளியேறலாம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாக தெரியவருகிறது. (எ-11)

## வாக்குறுதியை...

யின்போது நாம் முன்வைத்த பிரதான விடயங்களில் பொது உடன்பாடு எட்டப்படும் என்பதை நாம் ஒப்புக் கொண்டிருந்தோம்.

அவ்வாறு பொது உடன்பாடு எட்டப்பட்ட பின் நாம் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்றுவோம் எனக் கூறியிருந்தோம்.

இந்த விடயங்கள் கூட்டறிக்கையில் பதியப்பட்டுள்ளன.

அரசாங்கம் தனது வாக்குறுதியை கைவிட்டுள்ளது.இதற்குப் பின் பல்வேறு அமைச்சர்கள், நாம் தடையாக இருப்பதாகக் கூறித் திரிகின்றனர். எட்டப்பட்ட உடன்பாட்டை மதித்து நடவுங்கள். அப்படியானால்தான் எம்மால் மேலே நகர முடியும் என்பதையே நாம் அவர்களுக்குக் கூற விரும்புகின்றோம் என சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.(எ-11)

## நல்லிணக்க ஆணைக்குழுவின்...

நல்ல பல அம்சங்கள் அடங்கியிருப்பதாகவும் தேவையற்ற தலையீடுகள் மேற்கொள்ளப்படாதபட்சத்தில் அதை நடைமுறைப்படுத்துவதில் சிரமம் எதுவும் இருக்கமாட்டாது எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஏற்கெனவே இனங்களுக்கிடையில் காணப்படும் விரிசல்கள் தீவிரவாத சிந்தனை உள்ளோரின் செயற்பாடுகளின் விளைவாக மேலும் அதிகரித்து துருவப்படுத்தலை மோசமான நிலைமைக்கு தள்ளிவிடக்கூடிய அபாயம் நிலவுவதாகவும் அமைச்சர் கவலை வெளியிட்டார்.

வடக்கிலிருந்து அகதிகளாக வெளியேறிய முஸ்லிம்களின் தற்போதைய நிலைமை பற்றி நெஸ்பி பிரபு வினவியபோது, அவர்களில் கணிசமான தொகையினர் யுத்தம் முடிபடைந்த சூழ்நிலையில் மீண்டும் சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்று மீள்குடியேறி வருவதாகவும் அவர்களுக்கான போதிய உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டிய தேவை இருப்பதாகவும் அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்து மீள்குடியேறி வருவோரை பொறுத்தவரை அவர்களை நீண்டகாலமாக இடம்பெயர்ந்து வாழ்வோர் என்றும் குறுகிய கால இடப்பெயர்வுக்கு உள்ளானோர் என்றும் இருவகைப்படுத்தப்பட்டுள்ளது.

வடபுலத்து முஸ்லிம்கள் மிக நீண்ட காலமாக 1990ஆம் ஆண்டிலிருந்தே அங்கிருந்து வெளியேற்றப்பட்டு நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இன்னல்களுக்கும் வசதியீனங்களுக்கும் மத்தியில் அவல வாழ்வை அனுபவித்து வருகின்றனர்.

நீண்ட காலத்திற்கு முன்னர் இடம்பெயர்ந்து தங்களது சொந்த இடங்களில் சென்று மீள்குடியேறி வருவோர் தங்களது பூர்வீக காணிகளை இழக்கும் அபாயம் நிலவுவதன் காரணமாக அத்தகையோருக்கு நீதி வழங்கும் விதத்தில் புதிய சட்டம் ஒன்றை தாம் மிக விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாக அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (எ-11)

## ஜப்பானிடமிருந்து...

செயற்றிட்டத்திற்கு 45 பில்லியன் ரூபாய் செலவளிக்கப்படவுள்ளது. இதன்மூலம் விமான நிலையத்தின் வசதிகளை முன்னேற்ற, நவீனப்படுத்த,இரண்டாவது பயணிகள் இறங்குதுறை அமைக்க மற்றும் பிராந்தியத்தின் வர்த்தக மையமாக அபிவிருத்தி செய்ய இக்கடன் உதவி வழங்கப்படுகின்றது

அத்துடன் ஹபரணயிலிருந்து வியாங்கொடை வரை 220 கிலோ வோல்ட் மின் கொண்டு செல்வதற்கான தொகுதியின் கட்டுமான வேலைகளுக்காக 15 பில்லியன் ரூபாய் நிதி இத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படவுள்ளது.

இந்த செயற்திட்டங்கள் மூலம் நிலைபேறான அபிவிருத்திக்கான இலங்கை மக்களினதும் அரசாங்கத்தினதும் முயற்சிக்கு ஆதரவு வழங்கப்படும் என ஜப்பான் எதிர்பார்க்கிறது.

இந்தக் கடனுதவி தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடும் நிகழ்வு நேற்று புதன்கிழமை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் இடம்பெற்றது.

இதில் ஜப்பான் அரசாங்கம் சார்பாக இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் நொபுஹிட்டோ ஹோபோ மற்றும் இலங்கை அரசாங்கம் சார்பில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர ஆகியோர் கையொப்பமிட்டனர். (எ-11)

## புலிகளுக்கு வாகன...

போன்றோருக்கு வாகனங்களை வழங்கினார் என்றே குற்றம் சாட்டப்பட்டது.

குறித்த குடும்பஸ்தருடைய உறவினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில், இவருக்கு எதிரான வழக்கு நேற்று யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் குடும்பஸ்தர் சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணி எம்.ரெமீடியஸ் குறித்த நபருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனவும் நிரூபிக்கப்படாதவை எனவும் வாதாடினார்.

விசாரணைகளின் பின்னர் இவருக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படாததால் குறித்த நபரை விடுதலை செய்வதாக மன்று உத்தரவிட்டது. (எ-4)

## சர்வதேச...

பின்பற்றியிருந்தால் பயங்கரவாதத்தை இல்லாதொழித்திருக்க முடியாது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன்
யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரியில்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
வார வகுப்புக்கள் : 30.03.2012 (நாளை)
சனி,ஞாயிறு பிரிவு : 31.03.2012 (சனி)
சலுகைக்கட்டணத்துடன் சேர கடைசி சந்தர்ப்பம்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | ~~12,000/-~~ | 3,000/- |
| பிரெஞ்ச் | ~~60,000/-~~ | 15,000/- |
| ஜெர்மன் | ~~60,000/-~~ | 15,000/- |

இச்சலுகை இரண்டு நாட்களுக்கு மட்டும்
MyWay
077 33 63 456

முல்லை நியூ சயன்ஸ் அக்கடமி
தண்ணீரூற்று - முள்ளியவளை
2014 A/L - கணித, விஞ்ஞானப் பிரிவு
Physics - திரு. எஸ். தவபாலன்
Chemistry - திரு. சண்
Bio - திரு. நக்கீரன்
Com. Maths - திரு. மணிவண்ணன்
ஆரம்பம் : 30.03.2012 (Friday - 9.00 am)
தொடர்புகளுக்கு : 0779354703 (8031)

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2014
கணித, விஞ்ஞான பிரிவு
ஆரம்பம்: 31-03-2012 சனிக்கிழமை
Batch 1- 8Am
Batch 2- 3Pm
CHEMISTRY : வாசு COM.MAT : சயந்தன்
PHYSICS : எடிசன் BIOLOGY : ஞானேந்திரன் சுதா
-ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்-

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம்.
A/L 2014
ஆரம்பம்:
31-03-2012 சனி 8.00மணி
கலை, வர்த்தகப் பிரிவு - 2
-ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்-

புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.(பெருமாள் கோவில் அருகாமை)
வர்த்தகப்பிரிவு A/L 2014
கணக்கீடு : K.பாலகஜன்
பொருளியல் : NB.கஜிதரன்
வணிகக்கல்வி : S.K.பாலசுபேஸ், S.யசோதரன்
ஆரம்பம் : 31.03.2012
சனி காலை 8.00
ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்
கலைப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | : A.K கீர்த்திராஜன் | அளவையியல் | : P. கமல் |
| இந்து நாகரீகம் | : T.ஸ்ரீஸ் | பொருளியல் | : NB. கஜிதரன் |
| வரலாறு | : R.R.ஆனந்தன் | அரசியல் | : A.K றொபின்சன் |
| புவியியல் | : P.S.V.திலேஸ் | நாட அரங்கியல் | : S.R. ரமேஸ் |
| இசை மணிநடம் | : S.சயந்தன் | இந்து சமயம் | : T. ஸ்ரீஸ் |
| கிறிஸ்தவம் | : S.M.V.தேவா | ஊடகவியல் | : R. இராஜேஸ்வரன் |
| கிறிஸ்தவம் | : R.கஸ்ரோன் | சித்திரம் | : S.டொமினிக் |
| சங்கீதம் | : T.ராகினி | மனைப் பொருளியல் | : S.தர்சி |
| ICT | : R.இராஜேஸ்வரன் | English | : S.Jaisan |

புதிய நாவலர் கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திசந்தி, யாழ்.
O/L Day Class
ஆரம்பம்: 02.04.2012 திங்கள் காலை 8.00 மணி
"கடந்த வருட O/L Day Class பிரிவில் 90% மாணவர்களை சித்தி அடைய வைத்த ஒரே ஒரு கல்வி நிலையம்" (C-6193)
அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்

நவீன அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வண்ணமயமான
திருமண அழைப்பிதழ்கள் மற்றும்
அனைத்துவிதமான அச்சுவேலைகளையும் தரத்துடனும், குறைந்த செலவுடனும் விரைந்து பெற்றுக்கொள்ளவும்
இவற்றுடன்....
கல்வெட்டுப் புத்தகங்களுக்கான 4 வர்ணக் கவர்களுக்கும்...
பாரதி பதிப்பகம்
இல.430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 3081

புதியதோர் உலகம் செய்வோம்
DCM 1ம் குறுக்குத் தெரு,யாழ்நகர் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
A/L 2014 பிரிவு 2
கலை,வர்த்தகப்பிரிவு
ஆரம்பம் : 31 - 03 - 12
சனி காலை 8.00

புதியதோர் உலகம் செய்வோம்
DCM 1ம் குறுக்குத் தெரு,யாழ்நகர் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
A/L 2014 பிரிவு 2
ஆரம்பம் : 31-3-12 சனி 8 மணி

| பொருளியல் | கணக்கீடு | வணிகக்கல்வி |
|---|---|---|
| S.வரதராஜன் B.A(Hons) | A.P.பகீரதன் B.B.A(FM.Spl) | V.முரளி B.B.A(FM.Spl) |

4 YEARS STUDENT VISA IN UK
MBA/MSc DEGREE
பட்டதாரிகளுக்கான விசேட கட்டணச் சலுகை
நான்கு வருடங்களுக்குமான மொத்த கட்டணம் 6150 £ மட்டுமே
(வருடமொன்றிற்கு சராசரியாக 1500 £ )
பட்டதாரிகள் எவரும் விண்ணப்பிக்கலாம்
தொடர்புகளுக்கு:- 0773867257
www.v4edu.com

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.